# தமிழர் சமூகவியல்

அன்னி தாமசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சென்னை - 600 113

# தமிழர் சமூகவியல்

## சில பார்வைகள்

அன்னி தாமசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**International Institute of Tamil Studies**
*C.P.T. Campus, Tharamani,*
*Chennai - 600 113*

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tami̱lar Camūkaviyal-Cila Pārvaikaḷ |
| Author | : | Annie Thomas, Professor,<br>Faculty of Sociology Art and Culture. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113. |
| Publication No | : | 374 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2000 |
| Paper Used | : | 18.6 kg TNPL Super Printing |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 11 point |
| No. of Pages | : | x + 146 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.35/- |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | Papers on Sociology |

**முனைவர் ச.சு. இராமர் இளங்கோ**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113

# அணிந்துரை

தமிழர் தம் இலக்கியவளமும் கலைவளமும் நாகரிகப் பண்பாட்டு வளமும் சிந்தனைவளமும் தனித்துக் குறிப்பிடத்தகு உயர்வுடையன; ஒரு தனிச்சிறப்போடு ஒளிரும் பெற்றியன. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னமே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனச் சிந்தித்த தமிழர் சிந்தனை செம்மாப்புடையது. தமிழர் தம் பண்டைப் பல்துறை அறிவையும் தொடர்ந்த வளர்ச்சியையும் ஆராய்ந்து வெளிப்படுத்தும் ஆய்வுமுயற்சிகள் வரவேற்புக்கும் போற்றுதலுக்கும் உரியன. அவ்வகையில் தமிழ் நூலுலகுக்கு ஒரு புதுவரவாய் நல்வரவாய் இங்கு வெளியிடப்பெறும் "தமிழர் சமூகவியல் - சில பார்வைகள்" எனும் சமூகவியல் நோக்கிலான இந்நூல் அமைகிறது.

சமூகவியல், சமூக அறிவியல் என்னும் துறைகள் இன்று மிகுந்த கவனிப்புக்கு ஆளாகிவருவன. ஆனால் 19-ஆம் நூற்றாண்டுவரை அவ்வாறான நிலையில்லை. சமூக அறிவியல் என்பது இக்காலத்தில் உலகெங்கும் ஒரு தனிப்பட்ட அறிவியலாக ஏற்றம் பெற்று வருகின்றது.

சமூகவியல் எனும் கோட்பாடு 19-ஆம் நூற்றாண்டில் தான் தனித்ததொரு துறையாக வலுவாக உருப்பெற்றது எனினும் அதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னரே உலகம் முழுதும் சமூகவியற் சிந்தனைகள் இருந்துள்ளன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. பிளாட்டோ, அரிஸ்டாடில், மனு, கௌடில்யர், கன்பூசியஸ், சீசர் போன்றோரின் எழுத்துகள் சமூகவியலின்பால் தனித்த ஈடுபாடுடையவைகளாகத்தான் விளங்குகின்றன. அவை நெறிப்படி சமூகவியலின் இயல்புத் தன்மைகள், சட்டம், சமயம், தத்துவம் ஆகிய கோட்பாடுகளை ஆய்ந்து விளக்கம் தந்துள்ளன. பிளாட்டோவின் "ரிபப்ளிக்" (**Republic**), அரிஸ்டாடிலின் "பாலிடிக்ஸ்" (**Politics**), கௌடில்யரின் "அர்த்த சாஸ்திரம்", கன்பியூசியசின் அனலெக்ட்ஸ் (**Analects**), சீசரின் "ஆன் ஜஸ்டிஸ்" (**On Justice**) ஆகியவை சமூகவியல் சிந்தனைகளைத் தெளிவாக உரைக்கும் நூல்களாகும்.

சமூக அறிவியற் சிந்தனைகளின் அடிப்படைகளில், சமூகவியல் குறித்த மேனாட்டார் கோட்பாடுகளின் அடிப்படைகளில், இலக்கியம் தத்துவம் முதலிய துறைகள் இன்று ஆராயப்படுகின்றன. அவ்வழியில் தமிழிலக்கியங்களைப் பண்டுதொட்டு இன்றுவரை எடுத்துக் கொண்டு சமூகவியற் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த பல அரிய கட்டுரைகளைத் தாங்கியதாகத் "தமிழர் சமூகவியல் - சில பார்வைகள்" என்னும் இந்நூல் அமைந்துள்ளது.

சமூகவியல் என்னும் துறைகுறித்த விளக்கத்தை,

> "சமூகவியல் (Sociology) என்பது சமூகத்தை அதாவது மக்களுறவையும் அதன் விளைவுகளையும் பற்றிய அறிவியலாகும். இது சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, செயல்கள் ஆகியவைகளுக்குத் தக்க விளக்கம் காண முற்படுகின்றது; மக்களுறவால் ஏற்படும் சமூக நிகழ்ச்சிகளை ஆராய்கின்றது. சமூக விஞ்ஞானம் என்ற பரந்த துறையைச் சார்ந்த பல விஞ்ஞானங்களில் சமூகவியலும் ஒன்று. இந்தச் சமூக விஞ்ஞானங்கள், மக்கள் சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்களின் நடத்தையையும் செயல்களையும் பற்றியவை"

என்று கலைக்களஞ்சியம் (ப.478) எடுத்துரைத்தல் நாம் உளங்கொள்ளத் தக்கது.

சமூகவியலைத் தனி அறிவியலாகத் தோற்றுவித்த அறிஞர் சமூகவியல் துறையின் தந்தை என்றழைக்கப்படும் அகஸ்டே காம்தே (Auguste Comte) என்பவர் ஆவார். தொடக்ககாலச் சமூக அறிவியல் சிந்தனையாளருள் ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) என்பார் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் சமூகவியல் ஆராய்ச்சி (Study of Sociology), சமூகவியலின் கொள்கைகள் (Principles of Sociology) என்னும் அரிய நூல்களை ஆக்கியளித்துள்ளார். எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இவர்களின் செல்வாக்கு அந்நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே மாற்றம் பெற்றது. உயிரியல் மரபினர் எனப்படும் இவர்களின் செல்வாக்கு மங்கிய நிலையில் உளவியல் என்ற புதிய துறையின் செல்வாக்கு சமூகவியலில் ஓங்கியது.

அவ்வகை மரபினருள் கிரஹாம் வாலஸ் (Graham Walles), கிடிங்ஸ் (Giddings), பரேட்டோ (Pareto) முதலியோர் குறிக்கத்தக்கோர் ஆவர். இவ்வாறு பல்வகை நெறியினரின் செல்வாக்குகளும் சமூகவியலைச் செழுமைப்படுத்தித் தனித்தவொரு அறிவியலாக முன்னெடுத்தன.

அனைத்துச் சமூக அறிவியல் கூறுகளையும் தொட்டுக்கொண்டு செல்வதால் சமூகவியல் என்பது மிக மேலான சமூக அறிவியல் எனச் செலிக்குமேன் (Seligman) குறிப்பிடுகிறார். சமூகக் கூறுகளையே (Social Elements) ஆய்ந்தறிந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட சமூகவியல் முறையை எப். டன்னீஸ் (F. Tonnies) என்பார் முதன் முதலாக வகுக்க முயன்றார். இவரைப் பின்பற்றிச் சுதந்திர சமூகவியலுக்குச் செருமானிய சமூகவியலாளர் சிலர் அடித்தளமிட்டனர். இவர்கள் சமூக உறவுகளைச் சமூகவியலின் முதன்மைப் பொருளாகக் கொண்டனர். இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு நாடுகளும் அதனதன் சூழ்நிலைகளையொட்டிச் சமூகவியல் என்னும் துறையை அணுகி வளர்த்தன. இந்தச் சமூக அறிவியல் துறைகுறித்த வரலாற்றுப் பின்புலத்தை எண்ணிப்பார்த்தல், இந்நூலின் துறையோடும் தலைப்போடும் தொடர்புடையது என்னும் வகையிலேயே இச்செய்திகள் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சமூகவியல் என்னும் அறிவியல் துறையின் வழிநின்று தமிழிலக்கியங்கள் உள்ளிட்ட தமிழர் தம் படைப்புகளை ஆய்வது தமிழர் வரலாற்றுக்குப் புதிய ஒளியை நல்கும். அம்முயற்சியை உட்கொண்ட இந்நூலில் பன்னிரண்டு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் மிகுந்த தரவுகளையும் சிறந்த ஆய்வுக் குறிப்புகளையும் புத்தொளியூட்டும் பார்வைகளையும் கொண்டு பொலிகின்றன.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் தொட்டுப் பாரதியாரின் உரைநடைப் படைப்புகள் வரை இந்நூலிற் சமூகவியற் கண்கொண்டு நோக்கி நுட்பமான செய்திகள் ஆங்காங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தமிழர் தம் எண்ணங்களைச் சமூகவியல் பிழிவுகளாகப் பிறங்குகின்ற பெற்றியினை நூலாசிரியர்,

“பண்பாட்டுச் சிறப்பும் சமூக மேம்பாடும் கொண்டு இரண்டாயிரம் ஆண்டுகட்குமேல் வாழ்ந்து வரும் தமிழர் தம் சமூகச் சிந்தனைகளை இலக்கியங்களில் பதித்துச் சென்றுள்ளனர். சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல் பழந்தமிழரின் தொல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலோ, சங்கத் தமிழ் மக்களின் வாழ்வியல் கலைக்களஞ்சியமாகிய சங்க இலக்கியத்திலோ அமையவில்லை. எனினும் ‘உலகம்’ எனவும் ‘மக்கள்’ எனவும் கருதிக்கண்ட அவர்தம் எண்ணங்கள் சமூகவியல் பிழிவுகளாக அமைந்து இனிக்கின்றன.” (ப.4)

என இந்நூலுள் அணியுறக் குறிப்பிட்டுச் செல்வது நம் நெஞ்சிலும் இனிக்கின்றது.

சமுதாயத்தை இயல்பான நிலையிலும் இலட்சிய நிலையிலும் இலக்கியங்கள் படம்பிடிப்பதுண்டு. இவ்விரு நிலைகளிலும் தமிழிலக்கியப் படப்பிடிப்புகள் அமைவதனை இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார், (ப.5)

தமிழ் மொழியின் தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியம் சமூகவியல் சிந்தனைக்கு விதையாக அமைந்துள்ளதை இந்நூலாசிரியர் உணர்த்தியுள்ளார். (ப.18)

தமிழ் மண்ணில் முற்காலத்தில் பல சமயங்களும் நிலவியும் உலவியும் வந்தமை நாமறிந்ததே. அச்சமய அடிப்படையில் எழுந்த காப்பிய இலக்கியங்களைக் காணும்போது, அவற்றில் சமய வலியுறுத்தலுக்கும் வாதுக்கும் பெண் பாத்திரங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளமையை இந்நூலின் வழி அறியலாம். (ப.50)

நூலாசிரியரின் பெண்ணியப் பார்வை இப்பகுதியில் அழுத்தம் பெற்றுள்ளது.

‘முதுமை’ குறித்த ஆய்வுரை, சமுதாயம் முதியவர்க்குத் தரும் இடம், முதியவர்க்குக் கொடுக்கப்படும் சமூக மதிப்பு முதலியவற்றை இலக்கியவழி நின்று பேசுவதும் ஆய்வதும் நம் சிந்தனைக்கு விருந்தாகின்றன. ‘இறப்பு’ தொடர்பான தமிழரின் சிந்தனைகளையும், காது குத்தல், முடிகொடுத்தல் என்னும் பழக்கவழக்கங்களையும் இந்நூல்

ஆய்ந்து காட்டும் செய்திகள் நூலில் ஏற்றமுறு பகுதிகளாக இலங்குகின்றன.

நூலின் ஈற்றில் இடம்பெற்றுள்ள நூற்றொகை, சொல்லகராதி ஆகியன ஆய்வுநூற் பயன்பாட்டை மிகுவிக்கின்றன.

இவ்வாறெல்லாம் சமூகவியல் நோக்குச் சான்ற அருமையான இவ்வாய்வு நூல் நிறுவன வெளியீடாக மலர்தல் அனைவர்க்கும் மகிழ்வையும் பயனையும் அளிக்கும். இந்நூலை இந்நிறுவனத்தின் சமூகவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிவரும் முனைவர் அன்னிதாமசு அவர்கள் படைத்தளித்துள்ளார். உலகளாவிய நிலையில் தமிழாய்வுகளை முன்னெடுக்கும் 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்' சமூகவியல் துறை அமைத்துள்ளமை தனித்துக் குறிப்பிடத்தக்கதாகும். அத்துறையின் பேராசிரியரான முனைவர் அன்னிதாமசு அவர்கள் இலக்கணம், பதிப்பியல் முதலிய துறைகளிலும் தேர்ந்த புலமையும் ஆய்வூற்றமும் உடையவர். அவர்தம் ஆய்வுநூல் படைப்பாகிய 'தமிழர் சமூகவியல் - சில பார்வைகள்' எனும் இந்நூல், சமூகவியல் துறையில் ஈடுபாடுடையவர்க்கு மட்டுமல்லாமல் தமிழியல் ஆர்வலர் அனைவருக்குமே பயன்தரும் என நம்புகின்றேன். இந்நூலினை இயற்றிய பேராசிரியர் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப., அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைன்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

**இயக்குநர்**

## என்னுரை

தமிழர் சமூகவியல் எண்ணங்களுக்குக் களப்பணியின் நேரடியாய்வு (field data) தரவுகள் தந்து உதவுவதுடன், இலக்கியக் களனும், கல்வெட்டுப் போன்ற ஆவணங்களும் தேவையான தகவல்களை அளிக்கின்றன. பல நூற்றாண்டுப் பெரும்பரப்புக் கொண்ட தரவுக்களன், அரிய சிந்தனைகளின் ஊருணியாகிச் சமுதாயவியல் கோட்பாடுகளை எடுத்து மொழிகின்றது. இதனால், இக்காலச் சமூகவியல் வல்லுநரின் கோட்பாட்டடிப்படையில் மட்டுமன்றி, இலக்கியப் பிரிவினடிப்படையிலும் எண்ணங்களைத் தேரவும் தெளியவும் முடிகின்றது.

தமிழர் சமூகவியல் பற்றிப் பலபோதும் எடுத்த உரைக்குறிப்புகளும், கருத்தரங்க எழுத்துரைகளும், கட்டுரைகளும் இங்கு இணைத்தமைக்கப்பெற்று விரிந்த பொதுப்பார்வையை வழங்க முனைந்துள்ளன. சமூகவியலின் பன்முக நோக்கு இவற்றில் புலப்படுகின்றன.

தமிழர் சமூக மரபுச் செல்வம் பற்றி நிறுவனம் நடத்திய மூன்று நாள் தேசியக் கருத்தரங்கின் தொடக்கவுரைக்காகத் தயாரிக்கப்பெற்ற குறிப்புகள் முதற்கட்டுரையாக அமைகின்றன. நிறுவன வெள்ளிக் கிழமைக் கருத்தரங்குகளில் மக்கட் பாகுபாடும் படிநிலையும் (13.11.1987), சமயவாதியாக - பெண் (9.8.1989), முதுமை (23.3.1990), இறப்பு (1.3.1991), செல்வமும் வறுமையும் (18.1.85), பாரதியும் பொருளாதாரமும் (13.9.85) என்பன வழங்கப்பெற்றன. கருத்தரங்குகள் மற்றும் நூலுக்காக வழங்கியும், அவ்வாறே - அல்லது சுருக்க நிலையில் அச்சொளி கண்டனவாகவும் 'மக்கட் பாகுபாட்டடுக்கு' (**ஆய்வுச் சிந்தனைகள்**, ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், 1996, பக்.51-55). 'இளையர்' (**ஆய்வுக் கோவை**, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1996, தொகுதி 1, பக்.57-61), 'வரிசை முறை' (**அமுதம்** - சிந்தனைக் கட்டுரைகள், (தொகு) எஸ். ஆல்பர்ட், க. பூரணச்சந்திரன், விடியல் பதிப்பகம், திருச்சி, 1996, பக்.26-33), 'காது குத்துதலும் முடிகொடுத்தலும்' (**ஆய்வுக் கோவை**, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1995, தொகுதி 1, பக்.70-74), 'சமூகச் சிதைவு' (**தமிழியல் ஆய்வு**, ஞாலத் தமிழ்ப்

பண்பாட்டுக் கழகம், 1996, பக்.76-82) என்பன அமைகின்றன. கூறியது கூறல் சிலவிடத்துண்டு. இக்கருத்தரங்க நிகழ்த்துநர்க்கும் நூல்வெளியீட்டாளர்க்கும் என் நன்றி.

இந்நூல் வெளியீடு தொடர்பாக நிறுவனத் தலைவர், ஆளுநர் குழு, இயக்குநர், நூல்மதிப்பீட்டுக் குழுவினர் ஆகியோருக்கும்; ஒளிக்கோர்வை செய்த தொழில்நுட்ப அலுவலர், அச்சகத்தினர் ஆகியோர்க்கும் என் நன்றி.

அன்னிதாமசு

# உள்ளே


| | | பக்க எண் |
|---|---|---|
| தமிழர் சமூக மரபுச் செல்வம் | ....... | 1 |
| மக்கட்பாகுபாடும் படிநிலையும் (தொல்காப்பியம்) | ....... | 7 |
| மக்கட்பாகுபாட்டடுக்கு (சங்க இலக்கியம்) | ....... | 19 |
| இளையர் | ....... | 26 |
| வரிசைமுறை | ....... | 35 |
| காதுகுத்துதலும் முடிகொடுத்தலும் | ....... | 43 |
| சமயவாதியாக - பெண் | ....... | 49 |
| முதுமை | ....... | 58 |
| இறப்பு | ....... | 78 |
| செல்வமும் வறுமையும் | ....... | 89 |
| பாரதியும் பொருளாதாரமும் (உரைநடை வழி) | ....... | 112 |
| சமூகச் சிதைவு | ....... | 133 |
| நூற்றொகை | ....... | 139 |
| சொல்லகராதி | ....... | 143 |

# தமிழர் சமூக மரபுச் செல்வம்

## சமூகவியல்

சமூகம் என்பது இணைந்து வாழும் மக்கட் தொகுதியைக் குறிக்கும். தனி மனிதர், குடும்பங்களாக, குழுமங்களாக, குழுக்களாக, குடிகளாகச் சேர்ந்து, ஒருவரையொருவர் வாழ்வுக்காகவும், பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும், பெருக்கத்திற்காகவும் சார்ந்தும் சேர்ந்தும் வாழும்போது சமுதாயம் உருவாகிறது. இதனால் மனிதன் பிறக்கும்போதே சமுதாயத்திற்குள் புகுகிறான். பிறப்பால் ஏற்படுகின்ற இந்தச் சமுதாய உறுப்பினர் நிலை ஒன்று. இதற்கு வேறாக, திருமணம் காரணமாக, சமுதாயத்தில் மற்றொரு உறுப்பினர் நிலை பெறுவதும் உண்மை. எனவே பிறப்புறவும் மணவுறவும் ஒவ்வொருவருக்கும் சமுதாய உறுப்பினர் நிலை அளிக்கிறது.

தனிமனிதன் மரபுத் (heridity) தொடர்புடன் வந்து பிறந்து, சூழ்நிலையில் (environment) வளர்கிறான். பிறக்கும்போதும் பின்பும் குடும்பமும், தொடர்ந்து விளையாட்டுத் தோழர் - பள்ளிச் சூழல் ஆகியனவும், மேலும் உறவினர் சுற்றமும் பணித் தளமும் அவன் முழுமையான சமூக உறுப்பினனாக வளர (Socialisation) உதவுகின்றன.

சமூக அமைப்புகள் (Social Institutions) என்ற நிலையில் திருமணம், குடும்பம் ஆகியன அடிப்படைகள். பொருளாதார அமைப்புகள், கல்வியமைப்பு, சமயம், அரசு ஆகியன முதன்மையான பிற சமூக அமைப்புகளாகக் காணப்படுகின்றன. காலந்தோறும் இந்த அமைப்புகளில் ஏற்படும் மாற்றமும், வளர்ச்சியும், அதன் காரணங்களும் சமூகவியல் கல்வியில் உட்படுகின்றன.

பண்பாடு அல்லது கலாச்சாரம் என்பது சமூகவியலின் இன்றியமையாத ஒரு கூறு. பண்பாட்டு வேறுபாடு, பண்பாட்டுக் கலப்பு, ஒற்றுமையும் ஒருமைப்பாடும், போட்டியும் எதிர்ப்பும் எனப் பல நிலைகள் இதன்கண் கருதப்படலாம். எல்லாச் சமூகத்திற்கும் பொதுவான பண்பாடுகளும், அந்தந்தச் சமுதாயத்திற்குரிய தனித்தன்மையான பண்பாடுகளும் உண்டு.

மக்கட் சமுதாயத்தில் காணப்படும் பல்வகை அடுக்குகள் (Strata) அல்லது படிநிலைகள் தனித்த சிந்தனைக்குரியன. தகுதியும் பங்கும் (Status and Role) இதனால் நிர்ணயிக்கப்படுகின்றன. இனம் அல்லது சாதி (Caste) ஒரு வகைப் படிநிலையாக அமைய, தொழில் நிலையும் அதனால் வரும் பொருள் நிலையும் வகுப்பு (Class) எனும் மற்றொரு அடுக்கு வகையை உருவாக்குகின்றன. இவற்றுள், சாதி அடுக்குகளிடையே இயக்கம் - கடப்பு (mobility) அமைவது இல்லை. அதாவது ஒரு இனம் மற்றொரு இனமாக மாறுவதில்லை. ஆனால் பொருளடிப்படை வகுப்புகளிடையே மேலும் கீழும் கடந்து செல்லக்கூடிய இயக்கம் அமைய முடியும். அதாவது, கீழ்வருவாய் நிலையினர் (Low-income group) பொருளாதார முன்னேற்றத்தால் மேல்மட்ட சமுதாய உறுப்பினர் ஆகலாம். ஏழை, பணக்காரனாகலாம்; தொழிலாளி முதலாளியாகலாம்.

கட்டுக்கோப்புடன் சமுதாயம் அமைவது அதன் நிலைபேற்றிற்கு உதவும். எனவே பழங்காலங்களிலேயே மக்கள் மரபுகளும் (folk ways), நடைமுறைகளும் (mores), சட்டதிட்டங்களும் (laws), சமயமும் (religion), கல்வியும் (education) இதற்கு உறுதுணையாக அமைவதைச் சமூகவியல் துறை வலியுறுத்தும்.

சமூகம் மாறுவது. சமூக மாற்றம் பரிணாம வளர்ச்சி காட்டுவது. வளர்ச்சியும் முன்னேற்றமும் புரட்சி வாயிலாக வரக்கூடும். புதுமை ஆக்கம் (modernisation) என்பதும் இன்றியமையாத கூறு ஆகும். படிப்படியான மாற்றம் (linear), சுழல் மாற்றம் (cyclic) என்று இவற்றை வெவ்வேறு வகையாக அணுகலாம்.

சமூகவியலில் பலவகையான கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் கார்ல் மார்க்சின் (Karl Marx) பொருளாதார அடிப்படை (economic determinism), தனிமைப் படுத்தல் (alienation), வர்க்கப் போராட்டம் (class struggle) என்பன குறிப்பிடத்தக்கன.

கிராம-நகர சமூகவியல் (rural and urban sociology) இன்றைய நிலையில் மிக ஆழமாகக் கற்கப்படுகிறது. சமூக அமைப்புகள் பலவும் ஊருக்கும் நகரத்திற்கும் வேறுபட்டு அமைவதும், அதற்கான காரணங்களும் குறிப்பிடத்தக்கவை. சான்றாகக் குடும்பம் என்று எடுத்துக்கொண்டால், கூட்டுக் குடும்பம் (joint family) கிராம சமுதாயத்தில் மிகுதியாகவும் தனிக்குடும்பம் (unifamily) நகர சமுதாயத்தில் அதிகமாகவும் அமைய, கல்வி, பொருளாதார, பிறநாகரிகத் தாக்கம் போன்றன காரணமாகும்.

அதுபோல கிராம சமுதாயத்தில் சாதிக் கட்டுப்பாடு, சாதி உணர்வு போன்றன மிகுதியாகவும், நகரத்தில், பெருநகரங்களில் அவ்வுணர்வு குறைவாகவும் அமைகிறது. கல்வி, கலந்து வாழும் தேவை ஏற்படுத்திய சூழல், பரந்த மனப்பான்மை, நேரமின்மை போன்றன இதற்குக் காரணம்.

எனினும், குற்றம், ஊழல், சேரிகள், குடியிருப்பு வசதிக் குறைவு, சுத்தம்-சுகாதாரம் இன்மை, ஏழைமை, இரப்போர், வேலையின்மை என்பன நகரத்தில் மிகுதி. கிராம சமுதாயம் இன்றும் தன் உற்பத்தி, உழவுத் தொழில் சார்ந்து (agrarian society) அமைவது பெரும்பான்மை.

கிராம சமூக முன்னேற்றத்திற்காக, இப்போது, இந்திய அரசு பஞ்சாயத்ராஜ், சமூக முன்னேற்றம், பூதானம், கிராமதானம், நாட்டுப்புறக் கூட்டுறவுச் சங்கம், கிராமங்களைத் தத்தெடுத்தல் போன்ற பலவற்றை ஏற்படுத்தியுள்ளது.

தொழில் சமூகமும் தொழிலாளர் பிரச்சினையும் (Industrial Sociology and Labour Problems) சமூகவியலின் மற்றொரு முக்கியப் பகுதியாகும். பழங்காலத் தொழில்நிலை வேறாகவும், தொழிற் புரட்சி (industrial revolution) வந்த பின்புள்ள தொழில் நிலை வேறாகவும் அமைகின்றன. தொழிற்சாலை நிர்வாகம், தொழிலாளரின் பொருளாதார நிலை, தொழிலாளர் உளவியல் என்ற துணைத் துறைகளுடன் இந்தத் தொழில் சமூகவியல் பல்லாற்றானும் தொடர்புடையது. இயந்திரமயமாதல், தொழிற் சங்கம், பெண் தொழிலாளர் நிலை, குழந்தைத் தொழிலாளர் நிலை, சம்பளம்-ஊதியம், தொழிற் பாதுகாப்பு, அடிமைத் தொழிலாளர் எனப் பல கூறுகள் ஆராய்ச்சிக்கு உரியன.

மக்கட்பெருக்கம் அல்லது ஜனத்தொகை (social demography) என்பதும் சமூகவியலின் இன்றியமையாத பகுதியாகும். பெருக்கக் காரணம், கட்டுப்பாடு செய்யும் முயற்சிகளாக இந்திய நாடு கொண்டுள்ள திட்டம், குழந்தை மரணம் (infantile mortality) தடுப்பு என்பன முதன்மையானவை.

சமூக நலநிலை அல்லது சமூக நோயியல் (Social Pathology) எனும் பகுதி, சமூகச் சிதைவுகளையும், அதன் வகைகளையும், அவற்றை இனங் காணும் வழிமுறைகளையும், அதனை நீக்கும் முயற்சிகளையும், சீராக்கும்-செப்பமாக்கும் வழிகளையும் பற்றிப் பேசுகின்றது. உடல் ஊனமும் மன நோயுமுடையவரால் சமூக நலம் சிதைவதால் அவரைப் பாதுகாத்தலும் புரத்தலும் தேவையாகின்றன.

பல கொடை நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும், அரசும் இவர்கள் மறுவாழ்வுக்குத் திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்துகின்றன.

குற்றவாளி, குழந்தைக் குற்ற நிலை (juvenile delinquency), தற்கொலை, குடும்பச் சிதைவு, மணமுறிவு, குடி, போதை மருந்து, சூதாட்டம், பரத்தமை போன்ற பல, சமூகச் சிதைவு காட்டுகின்றன. குழுக்களிடையே மோதல், சமூக வகுப்புகளின் தன்மை போன்றவற்றைச் சரி செய்ய எடுக்கும் ஒருங்கிணைப்பு முயற்சி என்பனவும் இன்றியமையாதன.

பொதுவாகச் சொன்னால், சமூகவியல் மனித சமுதாயத்தின் உள்ளும் புறமும் பற்றிய முழுமையான, பரந்த, ஆழமான பார்வையைப் பன்முக நோக்கில் கண்டு கூறுகிறது என்பது போதரும்.

## தமிழிலக்கியமும் சமூகச் சிந்தனைகளும்

பண்பாட்டுச் சிறப்பும் சமூக மேம்பாடும் கொண்டு இரண்டாயிரம் ஆண்டுகட்குமேல் வாழ்ந்து வரும் தமிழர் தம் சமூகச் சிந்தனைகளை இலக்கியங்களில் பதித்துச் சென்றுள்ளனர். சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல் பழந்தமிழரின் தொல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலோ, சங்கத் தமிழ் மக்களின் வாழ்வியல் கலைக்களஞ்சியமாகிய சங்க இலக்கியத்திலோ அமையவில்லை. எனினும் 'உலகம்' எனவும் 'மக்கள்' எனவும் கருதிக் கண்ட அவர் தம் எண்ணங்கள் சமூகவியல் பிழிவுகளாக அமைந்து இனிக்கின்றன.

"**யாதும் ஊரே யாவரும் கேளிர்**" என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்று வரிகள், அனைத்து மக்களையும் ஒத்துணர்வோடும் சகோதர மனப்பான்மையோடும் (fraternity) கருதியமையைக் காட்டுவது மிகவுயர்ந்த சமூகப் பண்பாடாகும்.

"உலகம் உவப்ப ......" எனத் தொடங்கும் சங்கப் பாடல் மக்களின் மகிழ்வை, சமூகத்தின் மகிழ்ச்சியையே காட்டுகிறது. வள்ளுவரும் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்பதில் உலகம் என்பதால் மக்கள் தொகுதியைத்தான் கருதினார் என்பது வெளிப்படை.

## பாகுபாடும் படிநிலையும் (Classification and Stratification)

நூல்கள், இலக்கியங்கள் சமுதாயத்தில் காணப்படும் பலவகையான உண்மைகளையும் சித்திரிக்கும் இயல்பின. அந்நிலையில், தொல்காப்பியம், அந்தணர்-அரசர்-வணிகன்-வேளாண் மாந்தர் என்பதால் நால்வகையான மக்கட் பகுப்புகளைத்

தருகின்றது.இவை பிறப்புவழி வந்த பகுப்பாகவோ தொழில்வழி வந்த பகுப்பாகவோ இருக்கலாம். 'வேற்றுமை தெரிந்த நாற்பால்' என, நான்கு வேறுபட்ட பகுப்புகள் இருந்ததனைப் புறநானூறு உணர்த்தும்.

இவ்வேறுபாடு கல்வியால் கழிந்துவிடக் கூடியது என அதே பாடல் உணர்த்துவது குறிப்பிடத்தக்கது. சமூகத் தகுதியைக் (Social Status) கல்வி நிர்ணயிக்கும் என்ற உண்மை இதில் விளங்குகிறது.

> **வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
> **கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
> **மேற்பால் ஒருவனும் அவண்கண் படுமே.**

என்ற புறநானூற்று வரிகள், பிறப்பால் அல்லது பொருளாதார நிலையால் கீழ்ப்பட்டவன், கல்வியால் உயர்ந்த தகுதிக்கு வர - வளர முடியும்; மேல்மட்டத்தினரும் - மேட்டுக்குடியினரும் அவன் சொற்படி நடப்பர் என்பதை உணர்த்துகின்றன.

திருக்குறள் கருத்துப்படி, செய்யும் தொழில் காரணமாகவே உயர்வும் சிறப்பும் (Status) அமைகின்றன; பிறப்பினால் அல்ல என்பது புலப்படும்.

> **பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா**
> **செய்தொழில் வேற்றுமையான்.**

தொழில் வழியான மக்கட்பாகுபாடு இதில் புலப்படுகிறது.

பொருளாதார நிலை காரணமாக மக்களிடையே பாகுபாடு அமையலாம் என்பதைக் கொடை வள்ளல்கள் ஒருபுறமும் இரவலர் மறுபுறமும் காட்டுவதை, ஆற்றுப்படை நூல்களும், பாரி, குமணன், ஆய் அண்டிரன் போன்ற வள்ளல்களும், பெருஞ்சித்திரனார் போன்ற புலவரும் புலப்படுத்துகின்றனர். 'இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்' என்ற சமூக-பொருளாதாரக் கண்ணோட்டமும் இதனால் எழுகின்றது.

## குறிக்கோட் சமுதாயம்

உண்மையான, இயல்பான சமுதாயத்தைத் தமிழ் இலக்கியம், குறிப்பாகச் சங்க இலக்கியம் காட்டுகிறது. உயர் சமுதாயம் அல்லது சிறந்த சமுதாயம் எப்படி இருக்கும் என்ற கற்பனை கம்பனிடம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. உடோபியா (Utopia) எனக் கூறத்தக்க நிலையாக இது அமைகின்றது.

சமூகம், பொருளாதார ஏற்றத் தாழ்வற்றதாக அமைய வேண்டும். கீழறுக்கும் பகையில்லாததாக இருக்க வேண்டும். கல்வி, எழுத்தறிவு (literacy) எல்லோரும் பெற்றவராகக் காணப்பட வேண்டும். நாடும் நகரமும் இவ்வாறமைவதன் அடிப்படையைக் கோசல நாட்டையும், அயோத்தி நகரையும் காட்டும் போது கம்பர் தருகிறார்.

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரை இலாமையால்
வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்

(நாட்டு.53)

சமுதாயக் கேடாக (social evil) அமையும் குற்றம் சமுதாயச் சிதைவை (Social disorganization) உருவாக்கும் காரணிகளில் ஒன்று. எனவே குற்றம் இல்லாத, சீற்றம் இல்லாத, ஆற்றலுடைய சமுதாயம் உயர்வுடையதாக அமையும் என்பது கம்பர் கூறும் உண்மை.

கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை தம் சிந்தையில் செவ்வியால்
ஆற்றல் நல்லறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது இழிதகவு இல்லையே

(நாட்டு.38)

செல்வம் ஓரிடத்தில் குவியும்போது பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்படுகின்றது. பொருளாதார சமத்துவம் ஒரு நல்ல சமுதாயத்திற்கு அடிப்படை. கார்ல் மார்க்சின் எண்ணங்களுக்கு ஒரு முன்னோடி போல கம்பரின் கருத்து அமைகின்றது:

கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை அவைவல்லர் அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை மாதோ

(நகர.74)

தமிழர் கொண்டுள்ள இத்தகு சமுதாய எண்ணங்கள் பலவற்றை இலக்கியங்கள் வழி அறியமுடியும். இத்தகு கல்வி தமிழரின் சிறப்பையும் உயர்வையும் உலகுக்கு அறிவுறுத்த அடிப்படையாகவும் உதவியாகவும் உறுதுணையாகவும் அமையும்.

# மக்கட்பாகுபாடும் படிநிலையும்

## (தொல்காப்பியம்)

### முன்னுரை

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' (சொல்.1) என்பது தொல்காப்பியம். 'உயர்'வுடையவராக, ஒரு திணையினராகக் கருதப்பட்ட இம்மக்கள், எல்லாக் கோணப் பார்வையிலும் அவ்வாறே அணுகப்படவில்லை. மாறாகப் பல்வகையாகப் பகுப்புப் பெறுகின்றனர். அவ்வாறு பகுக்கப்படும் போதும், ஒத்த அல்லது ஒரு தன்மையினராக அன்றி, ஏற்ற இறக்கம் கருதி அமையும்போது, படிநிலை பற்றிய சிந்தனையும் எழுகின்றது.

பாகுபாடு (தொல்.பொருள்.73.3 பாகுபட), படிநிலை (பரிபாடல் 2.62) ஆகிய சொற்கள் காலப்பழமையுடையன வெனினும், சமூகவியல் கல்வித் துறையின் அண்மைக்கால-ஒரு நூற்றாண்டு-வளர்ச்சியில் தனித்த பொருள் நிலை கொள்கின்றன. மக்கள், சமூகக் குழுக்களாகப் பிரிக்கப்படுவதும், சமூகக் குழுவகைகளின் விளக்கமும் பகுப்பும் சமூகவியல் கட்டமைப்புக் கல்வியை ஆக்குவதும் சுட்டப்படுகின்றன.[1] குறிப்பிட்ட அல்லது பொதுவான பண்போ, பண்புகளோ அடிப்படையாகத் தனிமனிதரும் குழுக்களும் மேல்-கீழ் என வேறுபடுத்தத்தக்க அமைப்புடனோ, வகுப்பு நிலையுடனோ படிநிலை அணுகுமுறையில் காட்டப்படுகின்றனர்.[2] இவ்வாறு பகுப்பும் படிநிலையும் ஒன்றையொன்று சார்ந்து அமைகின்றன. இவை பற்றிய சிந்தனையும் பலவாக உருப்பெறுகின்றன.

இக்கல்வி தனித்துறையாக வளர்வதற்கு முன்னும், சமூகமும், சமூகவியல் எண்ணங்களும் அமைந்ததால், பழந்தமிழ் நூல்களும் இவை பற்றிய கருத்துகளைத் தரக்கூடும் என எதிர்பார்க்கலாம். மக்கட் பாகுபாட்டின் முதற் குறிப்புகள் எப்போது கிடைக்கின்றன?

---

1. See 'Types of Social Group' in Sociology, T.B. Bottomore, Blackie & Son, Bombay, 1975, p.99.
2. Encyclopaedia of Social Sciences, (Ed) David L. Sills, The Macmillan Company & The Free Press, Newyork, 1968, Vol.15, p.288.

எத்தனை பகுப்புகள் உள? பாகுபாட்டுப் பெயர் நிலை என்னென்ன? எவ்வெவ் அடிப்படையில் மக்கள் பகுக்கப்பெற்றனர்? ஓரடிப்படையா? அன்றி, பல அடிப்படைகள் உண்டா? முதன்மைப் பாகுபாடும் சார்புப் பாகுபாடும் உளவா? அல்லது, அடிப்படைப் பாகுபாடுகள், துணைப்பாகுபாடுகள் எனக் காண முடியுமா? படிநிலை பற்றிய கருத்து எப்போது எப்படி ஏற்பட்டது? உயர்வு-தாழ்வு கற்பிக்கப்படும் நிலை என்று எவ்வாறு அமைகின்றது? காலத்திற்கேற்பப் பாகுபாட்டில் மாறுபாடும், படி நிலைகளில் முன்பின் மாற்றமும் உற்றுள்ளனவா?

தொல்காப்பியத்தில் தெளிவான பாகுபாடு அமைகிறதா? தொடக்க நிலை அன்றி முதிர்ச்சி நிலையா தென்படுகின்றது? பாகுபாட்டின் அடிப்படைக் கோட்பாடு ஒன்றாக அமைகின்றதா அல்லது பல எண்ணக் கோட்பாட்டுக் கலப்பு காணப்படுகின்றதா? இதன்கண் கூறப்படுவது அக்கால மக்கள் வாழ்வியலில் கண்ட பாகுபாடுகளா அல்லது செய்யுள் (பாடல் சான்ற புலனெறி-பொருள். 56) வழக்குப் பாகுபாடா? பாகுபாட்டு எண்ணிக்கையும் எல்லை வகுத்தலும் 'நால்வர்' (பொருள்.31, 220) என்பதால் இயன்றதா அன்றி மேலும் விரிந்ததா? இது இயல்புப் பகுப்பா அல்லது சார்பு பற்றி ஏற்பட்டதா? இப்பாகுபாடு, 'வண் புகழ்மூவர் தண்பொழில் வரைப்பின்' (பொருள்.384) பொதுவியல்பாக அமைந்ததா அன்றி ஒரு பகுதியில் அமைந்ததா? இந்நால்வரிடை அமையும் படிநிலையும் அதன் அடிப்படையும் என்னென்ன? இலக்கியத்தின் பாடுபொருள் என வரும்போது அகப்பொருட்குரிய பகுப்பினரிவரிவர், புறப்பொருட் குரிய பகுப்பினரின்னின்னார் எனும் வரையறையும், படிநிலை காரணமாக விதியும் விலக்கும் உள்ளனவா?

இத்தகைய பல கருதுகோள் அடிப்படையின் கேள்விகட்குத் தெளிவான முடிவான கோட்பாட்டு விடைகள் கிடைக்கும் என்பது இல்லை. எனினும் சமூகவியல் கல்வி முயற்சியில் இவை தேரவும் அணுகவும் தக்கன என்பது உண்மை. இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் சமூகவியலைக் காணும்போது அனைத்தையும் உட்படுத்திய கருத்துகளன்றி ஒருசார் எண்ணங்களே தெரியக் கூடும். ஆயினும் அத்தரவுகள் மேற்கல்விக்கு ஓர் இழையாக உதவ வாய்ப்புண்டு. சமூகத்தின் ஒரு பங்கினரைத் தனித்துக் காணும் வாய்ப்புடைமை போலவே, பொதுவாகப் பாகுபடுத்திப் பார்க்கவும் இடனமைதல் இங்குக் கருதப்படுகிறது.

தொல்காப்பியத்தில், 'சாதி' (பொருள். 588,608), இனம் (எழுத்து. 412,413......, பொருள். 470, 471, 656) என்ற சொற்கள்

காணப்படினும்,[3] மக்கட் பாகுபாட்டைக் குறிப்பிடும் நிலையில் அவையோ, குலம், வருணம் போன்ற பிற பிற்காலச் சொற்களோ ஆளப்படவில்லை. எனினும் இப்பொதுச் சொற்களுக்கு அப்பாற்பட்டு அமையும் இன்னும் பிற பல சொற்கள், பெயர்கள், மக்கட்பாகுபாடு பற்றிய உணர்வு இருந்ததனை வெளிப்படுத்துகின்றன. பெயர்களைப் பகுத்துச் சுட்டுமிடத்தும், மேல்-கீழ் எனக் கையாளும்போதும், அந்தணர் முதலியவர்க்கு விளக்கம் தரும் சூழலிலும் மற்றும் இவை புலப்படுகின்றன. பிற அதிகாரங்களைவிடப் பொருளதிகாரமே பாகுபாடு, படிநிலை பற்றிய பல செய்திகள் வழங்குவதும் சுட்டத் தக்கது.

## பாகுபாடு

(அ) சொல்லதிகாரம் - பெயரியல், பாலறிவந்த உயர்திணைப் பெயர்களைப் பட்டியல் செய்யுமிடத்துக் குறிப்பிடும் (1) நிலப்பெயர், (2) குடிப்பெயர், (3) குழுவின் பெயர், (4) வினைப்பெயர், (5) உடைப்பெயர், (6) திணை நிலைப் பெயர் என்பனவும் (தொல்.சொல்.சேனா.165), எழுத்ததிகாரம்-புள்ளி மயங்கியல் ணகர னகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி மொழியுமிடத்துச் சுட்டும் (7) கிளைப் பெயர் என்பதுவும் (தொல்.எழுத்து.நச்.307, 338) மக்கட்பாகுபாட்டு எண்ணத்திலும் அணுகத் தக்கன. ஆயின் இவை எம்மக்களைக் குறித்து உட்படுத்தின எனும் விளக்கம் முழுமையாகத் தொல்காப்பியத்தில் இல்லை; திணை நிலைப்பெயர் என்பதனை மட்டும், பொருளதிகாரச் செய்தியொன்றால் சிறிது விளங்கிக்கொள்ள இயலுகின்றது. பொருளதிகாரம்-அகத்திணையியல் 'கருப்பொருளின் பாகுபாடாகிய மக்கட்டிறம்' (இளம்பூரணம்) உணர்த்தும்போது,

> பெயரும் வினையுமென்று ஆயிரு வகைய
> திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே.
>
> ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்
> ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.
> ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை
> ஆனா வகைய திணைநிலைப் பெயரே
>
> (பொருள்.22-24)

எனக் கூறுவதில், திணை (நிலை)ப் பெயராக ஆயர், வேட்டுவர் என்பன கிடைக்கின்றன. பிற பாகுபாடுகட்கு, சுமார் பத்து நூற்றாண்டு

---

3. Index des mots de la litterature tamoule ancienne, Vol.1-3, Institute Francais D Indologie, Pondicherry, 1967.

இடைவெளிக்குப் பின் வந்த உரையாசிரியரையே கருதவேண்டியுள்ளது.[4]

'கிளைப்பெயர்' வரும் இடத்தால், ணகர னகர ஈறுடையதாகத் தெளிவு பட்டபோதும், உமண், எயின் எனும் 'இனத்தை உணர நின்ற'து என்பதையும் நச்சினார்க்கினியர் முதலியோராலே உணர முடிகிறது. பகுப்புகள் தெரிந்ததும் தெளிந்ததுமாக இருந்தமை பற்றி உரிய பெயர்கள் பட்டியலிடப்படவில்லை எனக் கருதக்கூடும்.

நிலப்பெயர், குடிப்பெயர் போன்ற ஓரிரு பகுப்புக்கு இவ்வாறு நேரடியாகவன்றியும், தொடர்புடைச் செய்திகளால் விளக்கம் காணக்கூடும். அகத்திணை இயல், முதற்பொருளின் ஒரு கூறாகிய நிலத்தை காடுறை-மைவரை-தீம்புனல்-பெருமணல் உலகமாகக் காட்டுவது (பொருள்.5) அந்நில வாழ்வின் மக்களைச் சுட்டும் பெயரை நிலப்பெயராகக் கொள்ள வழி தரலாம். அவ்வாறே குடி (பொருள்.77.14.......), குடிமை (பொருள்.269), குடிநிலை (பொருள்.62) போன்ற பயிற்சிகள் 'குடிப்பெயர்' என்பதை மேலும் விளங்கிக்கொள்ள உதவலாம்.

(ஆ) இத்தகு பெயர்ப்பாகுபாட்டிலிருந்து மக்கள் பகுப்பைக் கொள்ளும் நிலைக்கு வேறாக, தொல்காப்பியம் மரபியலில் அந்தணர் முதலியோரை விளக்குவதிலிருந்து மக்கட் பாகுபாட்டைக் கொள்ள முடிகின்றது. அந்தணர், அரசர், வைசிகன், வேளாண் மாந்தர் என இங்கமையும் சொற்களும், தொடரும் விளக்கமும் தமிழில் 'வருணக் கோட்பாட்'டின் தோற்றக் களன் ஆகலாம். மக்களை இவ்வாறு பகுப்பது வேதகாலக் கொள்கையுடனும் ஐரோப்பிய நாட்டுச் சிந்தனையுடனும் இணைத்துக் கருதத்தக்கது.[5]

பிறப்பு அடிப்படைப் பாகுபாடாக இவற்றைக் கருதுதல்[6] இயல்பான போதும், அந்தணர், அரசர் ஆகிய வகுப்புகள் 'உரிமை'

---

4. தொல்காப்பியம்-உரைவளம்-சொல்லதிகாரம்-பெயரியல், (பதி) ஆ. சிவலிங்கனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984, பக்.58-67, சில சான்றுகள் வருமாறு :- நிலப்பெயர் - அருவாளன்; குடிப்பெயர் - மலையமான், குழுவின் பெயர் - அத்தி கோசத்தார்; வினைப்பெயர் - தச்சன்; உடைப்பெயர் - அம்பர் கிழான், வெற்பன் (இளம்). பார்ப்பார் முதலியோர் திணைநிலைப் பெயரில் இளம்பூரணராலும் சேனாவரையராலும் குறிக்கப்பட, அவரைக் குடிப்பெயரில் நச்சினார்க்கினியர், கல்லாடர் போன்றோர் உட்படுத்துகின்றனர்.

5. 'Caste in India and Feudalism in Europe' in Social Psychology, Roger Brown, Collier-Macmillan International Edition, London, 1973, p.107.

6. தொல்காப்பியர் காலத்தில் சாதி முறை, வீ. இராசமாணிக்கம், இ.ப.த.ம. மலர், மதுரை, 1969, ப.13.

அடிப்படையினவோ எனும் எண்ணம் தொல்காப்பியத்தை நோக்க ஏற்படுகின்றது. **அந்தணர்க் குரிய** (615), **அரசர்க்குரிய** (616), **அந்தணாளர்க்குரியவும்** அரசர்க்கு ஒன்றிய (617) அவர்க் குரித்தன்றே (618) என்ற பொருளதிகாரத் தொடர்கள் இங்கு சுட்டத்தக்கன. இதற்கு மாறாக,

'வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை (622)

வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி (625)

எனவரும் பொருளதிகார நூற்பாக்கள் 'வாழ்முறை' இவ்விரு பாகுபாட்டிற்கும் அடிப்படை போலும் எனும் எண்ணத்தை ஏற்படுத்துகின்றன.

தொல்காப்பிய மரபியலில் முன்-பின் செய்திகளுடன் ஒட்டாது, தொடர்புறாது இவ் அந்தணர் முதலியோர் பற்றிய செய்திகள் அமைவதால் இவை பிற்கால இடைச்செருகல் என்ற கருத்து உண்டு.[7] எனினும், தொல்காப்பியத்தில் வேறு இடங்களிலும் இவர் பற்றிய சில குறிப்புகள் அமைவது இங்கு எடுத்து மொழியத்தக்கது. எண்ணிக்கை சுட்டுதலும், பெயர் சுட்டுதலும் என இவற்றை அணுகலாம்.

'நால்வர்' எனும் எண்குறிப்பு பொருளதிகாரத்தில் நான்கு முறை வருகின்றது (31,197,198,220). இவற்றுள் இரண்டு மேற்சுட்டிய அந்தணர் முதலியோரை உட்கொண்டதாக உரையில் விளக்கப்படுகின்றது (இளம்.31,220).

இதுபோலவே, மூவர் என்றும், அவர் தவிர வேறும் ஒரு பகுப்பு என்றும் வரும் இடமும் இவ்வெண்ணத்துக்குச் சான்று பகரலாம்.

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே (142)

என்பது பொருளதிகாரத்தின் கற்பியல் சூத்திரம். இதன் புறத்திணை இயல், எண் குறிப்பிடாது, இரு பெயர் நிலை சுட்டியும் பிற பகுப்பை ஏனோர் எனச் சுட்டியும் தருவதாகத் தெரிகிறது.

---

7. தொல்காப்பியம், க. வெள்ளைவாரணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1970, ப.16.

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் (74)

ஏனோர் என்பது வணிக வேளாளர் இருவரையுமோ ஒருவரையோ கூட சுட்டலாம்.

மேற்கண்ட செய்திகளில் இணைந்தும், அண்மியும் சுட்டப்பட்ட இவர், நூலின் பிறவிடத்தும் குறிக்கப்பெறுகின்றனரா எனக் காணலாம். 'வைசிகன்' என்ற சொல் தொல்காப்பியத்தில் பிறவிடத்தெங்கும் இல்லை; 'வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்' (105.8) எனவும், 'வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்' (112.23) எனவும் வருவன வேளாண் மாந்தரைக் குறித்தில. பிற இருவரே ஆசிரியரால் பலவிடத்தும் சுட்டப்பெறுகின்றனர். அங்கும், அந்தணர் (எழுத்து.102), அரசர் (பொருள்.74) என்பது மட்டுமன்றி ஒரே - அல்லது ஒத்த பொருள் தரும் பிற சொற்களும் கையாளப் பெறுகின்றன.

மரபியலின் பகுதிக்குள்ளேயே அந்தணர் (615) என்பதுடன் அந்தணாளர் (617,627) என்பதுவும் வருகின்றது. மேலும் பொருளதிகாரத்தின் பார்ப்பார் (175, 498), பார்ப்பான் (191,490,491), மறையோர் (89, 487) என்பனவும் இவரையே குறித்திருக்கலாம் என்பது மீண்டும் ஆயத்தக்கது. ஐயர் (பொருள்.143, 144) எனும் ஆட்சி அமையினும் அது இன்றைய வழக்குப் பொருளினதாக உரையாசிரியரால் சுட்டுப்பெற்றிலது.

இதுபோன்றே, அரசர் என்பதுடன் மரபியல், வேந்து (626), மன் (628) என்பதைத் தர, பிற பொருளதிகாரப் பகுதிகள் இறை (252), இறைவன் (72), கோமான் (75), மன்னர் (32), வேந்தர் (72), வேந்தன் (5,29,63...) எனவும் அமைப்பது ஒரு பொருட்பலசொல் தானா என்பது மேலும் ஆய்தற்குரியது. அந்தணர், அரசர்க்கு உட்பாகுபாடுகளாகவும், உட்படிநிலைகளாகவும்கூட இவை அமையலாம்.

நால்வகையான இப்பாகுபாடு பிறப்படிப்படையினது அன்று எனும் கருத்து நிலவினும், பிறப்பால் தனித்தன்மை கருதப்பட்டமை 'பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு' (269), 'பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி' (112) எனும் இடங்களில் தெளிவது நினைக்கத் தக்கது.

(இ) நால்வகையாக அமையும் இம் மக்கட் பாகுபாடு அனைத்து வகை மாந்தரையும் உட்படுத்தியதா என்பது ஐயமே. ஏனெனில், தொல்காப்பியத்திலேயே இன்னும் பல சொற்களும் தொடர்களும் பயின்று, இந்நால்வரிலோ அன்றி முன்சுட்டிய பகுப்புகளிலோ அடங்காமை கொண்டன.

இட அடிப்படையில் மக்கட் பாகுபாடு அமையக் கூடும் என்பதை 'ஊரும், அயலும், சேரியோரும்' (*492*), 'நாடும் ஊரும் இல்லும்' (*112*) எனும் குறிப்புகளால் உய்த்துணர இயல்கின்றது. இவை ஒரு வேளை 'நிலப்பெய'ரின் துணைவகையாகவும் அமைக்கப்படக் கூடும்.

தொழில் அடிப்படையில் மிகப் பலவான பகுப்புகள் அமைய வாய்ப்புண்டெனினும், தொல்காப்பியத்தில் ஒருசில வேனும் அமைவதை உணர முடிகின்றது. இவை 'குலத்தொழி'லா என்பதைத் தரவுகள் அளிக்காதபோதும், பகுப்பு இருந்தமை தெளிவாகத் தென்படுகின்றது. பொருளதிகாரத்தில், சூதர் (*85*)

| | |
|---|---|
| கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் | (*88*) |
| பாணர் கூத்தர் விறலியர் | (*148*) |
| கூத்தர்க்கும் பாணர்க்கும் | (*167*) |
| பாணன் பாட்டி ........ கூத்தர் விறலியர் | (*191*) |
| பாணன் கூத்தன் விறலி | (*491*) |

எனவரும் இடங்கள் இந்நிலையில் கருதத்தக்கன. கலைப் பண்பாட்டினராக இவர் புலப்படுகின்றனர். முன்சுட்டிய 'வினைப்பெயர்' என்ற பகுப்பின் சார்பு வகையாகவும் இவை அடங்கக் கூடும்.

(ஈ) தொல்காப்பியம் சுட்டியும், சுட்டாதும் அமையும் இன்னும் பல்வகையான மக்கள் இங்கு வழங்கும் பாகுபாட்டில் எங்கு அடங்குவர் என்பது ஐயமாகவே உள்ளது.

அரசரை ஒரு பகுப்பாகக் காட்டியவர் அரசப் பணியில் துணையாகி ஈடுபடும் அமைச்சன், ஒற்றன், தூதுவன், வீரன், சேவகன் போன்ற எவரும் எப்பகுப்பில் அடங்கக் கூடும் எனக் குறிப்பேனும் வழங்கினாரிலர்.

கல்விமான்களை மிகுதியாகப் போற்றி[8] அவர் மரபைப் பின்பற்றியமையைப் புலவர் (எழுத்து.6,33,53,130........), நுண்ணிதின் உணர்ந்தோர் (எழுத்து.7), சிறந்திசினோர் (எழுத்து.295), புலமையோர் (எழுத்து.369), ஆசிரியர் (எழுத்து.315, 389), தொல்லோர் (பொருள்.111) எனப் பலவாறாகச் சுட்டியவர், இவரை எப்பகுப்பில் உட்படுத்தக் கருத்துக்கொண்டார்?

மேலும், அறிவர், தாபதர், சான்றோர் என்பன போன்று, பொருளதிகாரத்தில் குறிக்கப்படுவோர் தனித்தனியான வேறு வகையினரா என்ற சிந்தனை எழுகின்றது.

நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும் (74)

துகள் தபு சிறப்பின் சான்றோர் பக்கமும் (75)

ஆணம் சான்ற அறிவர் கண்டோர் (491)

இத்தகு குறிப்புகள் ஒருபாலாக, பகுப்பு என்பது ஒரு வரையறைக்குள் உட்படாததோ எனும் எண்ணம், பொருளதிகாரத்தின்,

அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தம் இல் சிறப்பின் பிறர்பிறர் திறத்தினும் (144)

என்ற நூற்பாவின் 'பிறர் பிறர்' என்பதால் எழுகின்றது.

**படிநிலை**

பாகுபாட்டில் காணப்படும் இத்தகு சிக்கலும் தெளிவின்மையும், அவற்றினை ஒட்டி எழுந்த படிநிலையிலும் காணப்படக்கூடும். பாகுபாடுகட்கு உள்ளும், இடையும் உயர்வு தாழ்வு கற்பிக்கப்படும்போது படிநிலை உருவாகின்றது. பல பாகுபாட்டில் ஒன்றை முதன்மையுடையதாகக் கருதி வரன்முறைப்படுத்தும்போதும் இப்பாங்கு தென்படுகின்றது. தகுதி (அந்தஸ்து), கல்வி, பொருளாதாரம்..... போன்ற பல கூறுகள் படிநிலைக்குத் தளம் வழங்கக் கூடும்.

---

8. நல்லிசைப் புலவர் (310), வாய்மொழிப்புலவர் (380), சொல் இயல் புலவர் (403), நூல் நவில் புலவர் (457), உயர்மொழிப்புலவர் (472), தோன்றுமொழிப் புலவர் (474), தொல்மொழிப் புலவர் (539) போன்ற பொருளதிகாரத் தொடர்கள் காண்க.

(அ) பொதுவாக, 'உயர்ந்தோர்' என ஓர் உயர்நிலை காட்டுவது தொல்காப்பியத்தில் பரவலாக இடம் பெறுகின்றது. செய்யுள் மரபு உயர்ந்தோரைச் சார்ந்து அமைவது பொருளியலிலும், மரபியலிலும் வலியுறுத்தப்படுகின்றது (பொருள்.213,638). பிறிதொரிடத்து, 'மை அறு சிறப்பின் உயர்ந்தோர்' (115) என அடையால் சிறப்பிக்கப்படுதலும் இங்கு கருதத்தக்கது.

உயர்ந்தோர் என்பது ஒரெல்லை யாயின், அதற்கு மறு எல்லையாக ஒன்றமைதல் வேண்டும். தாழ்ந்தோர் அல்லது இழிந்தோர் என அமைதல் எதிர்பார்க்கப்படலாம். சொல்லதிகாரம்,

அவற்றுள், ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே
தா என் கிளவி ஒப்போன் கூற்றே
கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே
(439-41)

எனத் தருவதில் மூன்று படிநிலைகள் புலப்படுகின்றன. இவை மக்கட் பாகுபாட்டின் படிநிலைகள் அன்றெனினும், படிநிலை பற்றிய கருத்து விளக்கத்திற்குத் துணை நிற்கின்றன. ஈ,தா, கொடு என்ற சொல் அடிப்படை ஆவதால், ஒருவேளை இவை பொருளாதாரப் படிநிலைகளாகப் புரிந்துகொள்ளப்படலாம். மேலும் 'உடைமையது உயர்ச்சியும்' (44) எனப் பிறிதிடத்து வருவதும் இக்கருத்திற்குத் துணையாகும்.

(ஆ) 'நால்வர்' இடை அமையும் படிநிலைகள் தனித்த சிந்தனைக்குரியன. மரபியல், முறைவைப்பால் அந்தணர், அரசர், வைசிகன், வேளாண் மாந்தர் எனும் வரிசையை வழங்குகின்றது. ஆனால், 'அந்தணாளர்க் குரியவும், அரசர்க்கு ஒன்றிய வரூஉம்' எனவும், 'அந்தணாளர்க்கரசு வரைவின்றே' எனவும் வருவன இருவரையும் ஒத்த படிநிலையினராகக் கருத இடம் தருகின்றன. எனினும், 'இடை இரு வகையோர்' (621) என்பதால் படிநிலை மீண்டும் தெரிகிறது. அன்றியும், அரசச் சிறப்புகள், (அந்தணர் தவிரவும்) 'ஏனோர்க்குரிய' (628) என்றும் 'இழிந்தோர்க்கில்லை' (629) என்றும் வருவது, பின்னும் ஒரு படிநிலை உண்டுபோலும் எனும் எண்ணம் வழங்குகின்றன.

(இ) மரபியல் மட்டுமன்றி, பிற பொருளதிகாரப் பகுதிகளும் இந்நால்வரிடை அமையும் படிநிலையைக் கருத உதவுகின்றன. இங்கு நாற்படிநிலையன்றி, மன்னன் ஒரு படிநிலையினனாகவும், பிற (மூவ)ர் மற்றொரு படிநிலையினராகவும் அமைக்கப்படுகின்றனர்

என்று தோன்றுகிறது. பின்னோர் எனவும் ஏனோர் எனவும் குறிப்புகள் வரும்போது அவை (முன்வகுப்பான) அந்தணரை உட்படுத்தவில்லை எனவும் கருதலாம்.

தானே சேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே (29)

வேந்து வினை இயற்கை வேந்தன் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்து இடன் உடைத்தே (34)

மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப (32)

எனும் பகுதிகளும், 'பார்ப்பனப் பக்கம்...... அரசர் பக்கம்...... ஏனோர் பக்கம் (74) என முன் கண்டனவும் இதற்கு இடமளிக்கின்றன.

(ஈ) அரசரும் ஏனோரும் பற்றிய இப்பகுதிக்கிடையே 'உயர்ந்தோர்' பற்றியும் சில செய்திகள் அமைந்து, இந் நால்வரும் உயர்ந்தோரா அல்லது நால்வரில் எவரெவர் உயர்ந்தோர் எனும் ஐயத்தை ஏற்படுத்துகின்றன.

ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன (28)

உயர்ந்தோர்க் குரிய ஒத்தினான (33)

உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான (36)

நால்வரின் முதல் மூவரும் 'உயர்ந்தோர்' என ஒரு படிநிலையாகக் கருதப்பட்டனரோ எனும் எண்ணம், முன்சுட்டிய, 'மேலோர் மூவர்க்கும் ஆகிய கரணம் கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே' என்பதை இணைத்து நோக்க, எழுகின்றது.

ஆனால், மரபியல் 'வேந்துவிடு தொழி'லும், 'மன் பெறு மரபும்' இவர்க்கும் காட்டுவதால் சிந்தனை வேறுபடவும் செய்கின்றது.

எவ்வாறாயினும், கல்வி (ஓதல்/ஒத்து), அரசுத் தொழில் (தூது; வேந்து உறு தொழில்-187, வேந்து விடுதொழில் - 626, வேந்துவினை - 34), பொருளாதாரம் (பொருள்வயின் ஒழுக்கம்) என்பன உயர்வுடைமை கருத அடிப்படையாதல் ஒருதலை.

(உ) மேற்கண்ட பல செய்திகளும் அகத்திணை இயலில் வருவதனால், அகப்பாடல் தலைவனின் 'உயர்வு', படிநிலையின் மேலெல்லையில் அமைவது புலப்படுகின்றது.

(தலைவன்-தலைவி பல்நிலையில் ஒப்புடையோராய் இருப்பது தேவையாகக் குறிக்கப்பட்ட போதும் (269), அவன் மிக்கோன் ஆக

(90) அமையலாம் எனும் எண்ணமும், புலவியுள் மட்டும் தலைமகள் உயர்வு (223) காட்டப்படலாம் எனும் கருத்தும் காணப்படுகின்றன.)

அகப்பாடற் றலைமக்கள் உயர்வுடையோராக அமைதல் எனும் இவ்எண்ணத்திற்கு மாறாக, அகனைந்திணைக்கு வேறான கைக்கிளை பெருந்திணைகளில் அடியோர், வினைவலர், ஏவல் மரபினர் வரலாம் என்பது (26,27) பாடுபொருளும் மக்கட்படிநிலையும் தொடர்புறுமாற்றைக் காட்டுகின்றது.

(ஊ) உயர்ந்தோர் என்பதற்கு விளக்கம் காணப்பெற்றது போன்றே, மறுதலையான 'தாழ்ந்தோர்' என்பதற்கும் விளக்கம் கிடைக்கும் வாய்ப்பு இங்கு அமைவது, முன்கண்ட பல பாகுபாட்டில் உட்படாத படிநிலையைக் காட்டுவதாகத் தோன்றுகின்றது.

சொல்லதிகாரம் 'அடிமை' (56) எனும் குறிப்பை, 'உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும் அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்' சொற்பட்டியலில் அமைக்கின்றது. உயர்திணை மருங்கின் மக்கட் சுட்டு, 'அடிமை' என்ற நிலை[9] காரணமாகப் போலும் இங்கு அஃறிணை ஆகின்றமை கீழ்ப்படி நிலையின் ஒரு விளக்கமாக அமைகின்றது. அகத்திணை,

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இல புறத்து என்மனார் புலவர் (25)

ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும்அன்னர் (26)

எனத் தரும் மூவகையினரும், 'குறுந்தொழிலினர்' என்ற நிலையில் ஒரே தனிப்படியினர் எனக் கருதலாம். 'இளையர்' என்பதனாலும் இவர் அல்லது இவரை ஒத்தோர் சுட்டப்பட்டனர் எனக் கொண்டால், அவரும் இங்கு இணையைத் தக்கனர்.

இளையோர்க்குரிய கிளவி என்ப (168)

உழைக் குறுந்தொழிலும் காப்பும் உயர்ந்தோர்
நடக்கை எல்லாம் அவர்கண் படுமே (169)

கூற்றுக்கு இடமுடையோராகவும் 'உயர்ந்தோரைப் பின்பற்றுவோராகவும் இளையோரைக் காட்டும் பகுதிகளும், பிற

9. தமிழகத்தில் அடிமைகள், ந. மார்க்சிய காந்தி, தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு, (பதி) இரா. நாகசாமி, வரலாற்றுப் பேரவை, 1979, பக்.216-225.

பலருடன் இளையரும் வாயிலாக அமைவதும் இவரை ஏவல் மரபினராக மட்டுமன்றி, சிறிது மேற்பட்ட படிநிலையினராகவும் பொருத்தக் கூடும்.

## தொகையுரை

தொல்காப்பியத்திலிருந்து கிடைக்கும் இப்பல கருத்துகள், மேலும் தெளிவு படவும், வரையறை பெறவும் தொடர்ந்த இலக்கியச் செய்திகளும், பிற உடன்கால வரலாற்று-பண்பாட்டுத் தரவுகளும் உதவி செய்யும். பரவலானதும் பலவானதுமான செய்திகள் தொல்காப்பியத்தில் கிடைப்பதால், மிக விரிவான ஆய்வுக்கும் இவை இடம் வழங்க வாய்ப்புண்டு.

மக்கட் பாகுபாடு தமிழர்க்கும் உரிய மிகப் பழங்காலக் கருத்து என்பதும், மேல்-கீழ், உயர்ந்தோர்-தாழ்ந்தோர் என ஒன்றில் ஒன்று சார்ந்து படி நிலைகள் அமைவது தொல்காப்பியப் பழமையுடையது என்பதும்,

அடிமை நிலையும் அப்போதே காணப்பட்டது என்பதும்,

பாடற் பொருளை ஒட்டிப் பாடற் பாத்திரத்தின் படிநிலை வரையறை பெற்றது என்பதும்,

கல்வி, அரசுத் தொழில், பொருள், தகுதி, உரிமை ஆகியன படிநிலைக்குக் காரணமாகலாம் என்பதும்,

சமூகவியல் கல்விக்குத் தொல்காப்பியம் நல்லதோர் தொடக்கக் களன் வழங்குகின்றது என்பதும் மேற்கண்ட பகுதிகளால் உணரக் கூடும்.

# மக்கட்பாகுபாட்டடுக்கு

## (சங்க இலக்கியம்)

**மக்கள்**

'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே' (தொல்.சொல்.1) எனவும், 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' (தொல்.பொருள்.577) எனவும் தொல்காப்பியம் தரும் நூற்பாக்கள், உயர்வுடையனவாகவும் ஆறறிவு உடைய உயிர்த்தொகுதியாகவும் மக்கள் என்பதை உணர உதவுகின்றன.

'மாவும் மாக்களும் ஐயறிவினவே' (தொல்.பொருள்.587. பேரா.) எனவும், 'ஆறறி வதுவே அவற்றொடு மனனே' (தொல்.பொருள்.571) எனவும் வரும் அதன் நூற்பாக்கள், மக்கள்-மாக்கள் என்பதன் வேறுபாட்டையும் உணர உதவும். இதற்கு,

> 'முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு
> புணர்ந்த ஆடூஉ மகடூஉ மக்கள் எனப்படும்'
> (தொல்.பொருள்.588. பேரா.);

> 'மாக்கள் எனப்படுவார் மன உணர்ச்சி இல்லாதார்'
> (தொல்-பொருள்.587.பேரா.)

எனப் பேராசிரியர் உரைவிளக்கம் அளிப்பார். கண்டு, கேட்டுத் தெளிந்து அறியும் உணர்வு நிலையில் மக்கள், மாந்தர் எனப்படுகின்றனர் என்பதும் தொல்காப்பியத்தில் வெளிப்படும்:

> கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
> உணர்வுடை மாந்தர்........ (தொல்.பொருள்.271)

மக்களைச் சுட்டும் பொதுப்பெயர் இன்னும் உள என்பதை நிகண்டுகள் வழி உணர வாய்ப்புள்ளமையைத் திவாகரம் காட்டும்.

> மக்கள் மண்ணவர் மனிதர் நரர் என்
> றொத்த மாக்கள் மானிடர் பொதுப்பெயர்
> (சேந்தன் திவாகரம்,ப.43)

## பாகுபாடு

இவ்வாறு பல பெயர்களால் சுட்டப்படும் மக்கள், தொகுதி நிலையில் ஒன்றாயினும், பால், வயது, தொழில், தகுதி, உடைமை, இனம், இடம், குலம் அல்லது குடி போன்ற நிலைகளில் வெவ்வேறு விதமாகப் பாகுபட்டுத் தனித்தனிச் சொற்களாலும் வேறுவேறு பெயர்களாலும் குறிக்கப் பெறுகின்றமையைப் பண்டைத் தமிழ் நூல்கள் (தொல்காப்பியம், சங்க இலக்கியம்) முதலே காணமுடிகின்றது. இன்னார் எனவும் இத்தகையர் எனவும் சுட்டிக் காட்டவும், ஐயமறத் தெளிவு கொள்ளவும், தனிநிலை உணர்த்தவும் இப்பாகுபாடு வந்தது என்பது அமைதி காணலாகலாம். இலக்கணக் கோணத்திலும், இலக்கியத்தரத்திலும் இவை தந்து செல்லப்பெற்றன எனக் கருதினாலும் சமுதாயப் பார்வையிலும் உட்படுத்திக் காணத் தக்கனவாம். சமூகக் குழுக்களாக மக்கள் பிரிக்கப்படுவதும், சமூகக் குழுக்களின் விளக்கமும் பகுப்பும் சமூகவியல் கட்டமைப்புக் கல்வியை ஆக்குவதும் இத்துறை அறிஞரால் சுட்டப்படுவது, இவ் எண்ணத்தை வலியுறுத்தும்[1].

தொல்காப்பியச் சொல்லதிகாரம் பெயரியலில், பாலறிவந்த உயர்திணைப் பெயர்களைப் பட்டியல் செய்யுமிடத்துக் குறிப்பிடும் (1) நிலப்பெயர் (2) குடிப்பெயர் (3) குழுவின் பெயர் (4) வினைப் பெயர் (5) உடைப்பெயர் (6) திணை நிலைப்பெயர் என்பனவும் (தொல்.சொல்.165.சேனா) எழுத்ததிகாரம் புள்ளி மயங்கியலில் ணகர னகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி மொழியுமிடத்துச் சுட்டும் (7) கிளைப்பெயர் என்பதுவும் (தொல்.எழுத்து.307,338) மக்கட்பாகுபாட்டு எண்ணத்தில் அணுகத் தக்கன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மரபியலில் பல நூற்பாக்களிலாகப் பரந்து கிடக்கும் அந்தணர்/அந்தணாளர் (தொல்.பொருள்.615, 617), அரசர் (தொல்.பொருள்.616, 617), வைசிகன் (தொல்.பொருள்.622), வேளாண் மாந்தர் (தொல்.பொருள்.625) என்பது வேறொரு பாகுபாடாகத் தென்படுகிறது.

இத்தகு பாகுபாடுகள் எத்தகைய எண்ணிக்கை வரையறைக்கு உட்பட்டன என்பது தனித்த ஆய்வுக்குரியது. நான்கு என்ற எண்ணிக்கை, 'நால்வர்' என்ற வருகையால் உணரமுடிகிறது.

---

1. Bottomore, T.B. Sociology, Blackie&Son, Bombay, 1975, p.99.

மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே
(தொல்.பொருள்.31)

பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
(தொல்.பொருள்.220)

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் சுட்டும் 'நால்வர்' மேற்கூறிய அந்தணர் முதலியோர் தானா என்பது ஐயமே. உரையாசிரியரே நான்கு வருணத்தார் என விளக்குகின்றனர். சங்க இலக்கியத்திலும் நான்கு (நால்வர்) என்ற குறிப்பு உண்டு.

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும் (புறம்.183.8)

நாற்பால்-நான்கு பகுதி என்பன மேற்படி அந்தணர் முதலியோர் தானா என்பது இங்கும் வலியுறுத்தப்படவில்லை. அன்றியும்,

துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை (புறம்.335.7-8)

எனும் வருகை, வேறுவிதமான விரிவுக்கும் விளக்கத்துக்கும் இடம் நல்குவதாய் உள்ளது.

பாகுபாடு, எண்ணிக்கை வரையறைக்கு உட்பட்டதல்ல போலும் எனும் எண்ணம் மேற்படி குறிப்புகளை ஒருசேர நோக்க ஏற்படுகின்றது. மேலும், எண்ணிக்கைக் குறிப்பு ஏதுமின்றி, சிலபல மக்கட்பெயர்கள் இணைந்து தரப்படுவதும் இக்கருத்தை வலியுறுத்தும்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
(தொல்.பொருள்.88)

துடிய பாண பாடுவல் விறலி (புறம்.280.8)

சூதர் வாழ்த்த மாகதர் நுவல
வேதாளிகரொடு நாழிகை இயம்ப (மதுரைக்.670-71)

பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக (மதுரைக்.749-50)

என இரண்டிற்கு மேற்பட்டு அண்மிவரும் சொல் வருகைகள் இக்கருத்திற் கவனித்தற்குரியன.

வேறுபடுத்திக் காட்டும் எல்லாச் சொற்களும் பாகுபாடு குறிப்பனவல்ல எனும் எண்ணமும் எழுகின்றது. ஒன்றிலொன்று

மயங்காது, தெளிந்த வேறுபாடுடையதாகி, ஒன்று இன்னொன்றாக மாறும் வாய்ப்பு அற்று அல்லது ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குக் கடந்துசெல்ல இடமில்லாமல் (mobilisation) அமைவனவற்றையே பாகுபாடு என வகுத்துக்கொள்ளுதல் தேவை. இந்நிலை, பாகுபாடுகட்கிடையே 'அடுக்கு' நிலையை உருவாக்குகிறது. இவ்வாறன்றி, போக்குவரவுக்கு இடமமையும்போது எல்லைகள் கடினமாக (rigid) அன்றி, மாற்றத்திற்கு வாய்ப்புத் தருகின்றன (flexible). இதனால் அடுக்குநிலைத் தளங்களொவ்வொன்றும் பல பாகுபாட்டை உட்படுத்தியமையலாம்.

## அடுக்கு

குறிப்பிட்ட பண்பு அல்லது பொதுவான சில பண்புகளை அடிப்படையாக்கிக் கொண்டு தனிமனிதரும் குழுக்களும் மேல்-கீழ் என வேறுபடுத்தத்தக்க அமைப்புடனோ, வகுப்பு நிலையுடனோ காட்டப்படுவதில் அடுக்குத் தென்படுகிறது.[2]

நாடு காடு, அவல் மிசை (புறம்.187) என வேறுபாடும் ஏற்றத்தாழ்வும் நிலத்தில் 'அடுக்கு'களை இயற்கையின் பாங்காகக் காட்ட, மக்களிடையே இவை அமைவது செயற்கையாகலாம். உயர்வு-தாழ்வு, சிறப்பு-இழிவு, பெருமை-சிறுமை என்பன அடுக்கின் ஈரெல்லையை, அகன்று நிற்கும் தளங்களைக் காட்டுகின்றன. பல அடுக்குகள் அமையலாம்.

தொல்காப்பியம், மொழிப்பயன்பாட்டில் அடுக்குகளை உணர்த்துவது தனித்த சிந்தனைக்குரியது:

ஈ என் கிளவி இழித்தோன் கூற்றே
தா என் கிளவி ஒப்போன் கூற்றே
கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே
(தொல்.சொல்.**439-441**)

இங்கு, உயர்ந்தோன்-ஒப்போன்-இழிந்தோன் என்று முப்பிரிவு அடுக்கு அமையினும், யார்யார் - எவ்வினத்தினர் - இவ்வடுக்குகளில் உட்படுவர் என விளக்கப்படவில்லை.

வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
(தொல்.பொருள்.**638**)

2. David L. Sills (Ed). **Encyclopaedia of Social Sciences,** The Macmillan Company & The Free Press, New York, 1968. Vol.15, p.258.

எனவும் பிறவிடத்தும் (தொல்.பொருள்.115, 213) 'உயர்ந்தோர்' சுட்டப்படினும் உரையாசிரியரே அவற்றிற்கு அந்தணர் எனும் கருத்தாக்கம் தருவர்.

> எனவே உயர்ந்தோர் எனப்படுவார் அந்தணரும் அவர்
> போலும் அறிவுடையோரும் ஆயினார் என்பது
> (தொல்.பொருள்.647, பேரா.)

மேலும், ஓதலும் தூதும் பொருள் வயிற்பிரிவும் (தொல்பொருள்.28, 33, 36) 'உயர்ந்தோரு'க்குரியதாகச் சுட்டப்படுவது அகத்திணைத் தலைவனின் 'உயர்வு' பற்றியாகலாம். அல்லது, 'மேட்டுக்குடி'யினரை வேறுபடுத்துவது கல்வி (ஓதல்), அரசுவினை (தூது), பொருளாதார நிலை (பொருள்வயின் ஒழுக்கம்) ஆகிய பண்புகள் என்று விதந்தோதலாம்.

'பிறப்பே குடிமை........' 'பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி....' (தொல்.பொருள்.269,112) எனப் 'பிறப்பு'க்கு முதன்மை தென்படினும், உயர்வு-சிறப்பு வெறும் பிறப்பாலல்ல என்ற கருத்துக்கும் வரமுடிகிறது. பிறப்பால் வருவது இயல்பான தகுதியாகவும் (ascribed status), கல்வி அறிவு காரணமாக அமைவது பேறாகவும் (acquired status) காணப்படுகின்றன.

> வேற்றுமை இல்லா விழுத்திணைப்பிறந்து (புறம்.27.3)

> உயர்திணை மகளிரும்..... (பதிற்.73.5)

என வருவதுடன்,

> பிறப்பு ஓரன்ன உடன் வயிற் றுள்ளும்
> சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும் (புறம்.183.3-4)

எனவும் வருவது இதனை விளக்கும். மேலும்,

> ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக என்னாது அவருள்
> அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
> வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
> கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
> மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (புறம்.183.5-10)

என்பதால், குறிப்பிட்ட ஒரு/சில பகுப்பில் பிறப்பதாலேயே உயர்வு, மேன்மை கருதப்படலை 'மேற்பால்' என்பது நிறுவும். 'மூத்தோன் வருக' என்றதனால், ஒரே குடியில் பிறந்தோரிலும், வயது (Senior)

காரணமாக/முதலில் பிறந்தமை (first born) காரணமாக ஒருவன் ஏற்கப்படுவது புலப்படுகிறது. எனினும் இவையனைத்திற்கும் மேலாக, அரசாட்சி, அதிகாரத் தலைமை என்பனவற்றில் அறிவு, கல்வி என்பனவே அடுக்கு/படிநிலை அமைக்க முடிகின்றது. அதனால்தான், அறிவுடையோன் வழியில் அரசுகூடச் செல்லும் எனவும் கற்றவனுக்கு-அவன் கீழ்ப்பாகுபாட்டினனாக அமையினும், மற்றவன் ஆட்படுவான் எனவும் கூறப்படுகின்றது. சமூக அடுக்கு, அதிகார அடுக்கு என்ற இருநிலையின் போக்கு இவற்றில் தென்படுகிறது.

'இழிந்தோன்' எனவும் 'கீழ்ப்பால்' எனவும் வந்த மேற்கண்ட குறிப்புகள் அவ்வடுக்கினர் பற்றிய சமூகப் பொருளாதார எண்ணத்தை உணர்த்தும். தொல்காப்பியம், அகப்பாடல் தலைவரை உயர்வுடையவராகக் காட்டியதற்கு மாறாக, கைக்கிளைப் பெருந்திணைகளில் 'அடியோர்', 'வினைவலர்', 'ஏவல் மரபினர்' வரலாம் எனக் கூறுவது (தொல்.பொருள்.25,26) மக்கட்பாகுபாட்டடுக்குப் பாடுபொருளிலும் இணைவதைக் காட்டும். மேலும் அதன் சொல்லதிகாரம் 'அடிமை' (தொல்.சொல்.56) என்பதைச் சுட்டி, அது உயர்திணை மருங்கினது ஆயினும் அஃறிணை போலக் கிளக்கப்படும் எனக் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டதற்குச் சான்று வழங்கும்.

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
கீழோர்க் காகிய காலமும் உண்டே

(தொல்.பொருள்.142)

என்பதில் மேல்-கீழ் என்பது தெளிவாகச் சுட்டப்படுகின்றது. மேலும், 'அந்தணாளர்க்குரியது', 'ஏனோர்க்குரியது' என்பது குறித்துப் பேசிவிட்டு (தொல்.பொருள்.627,628),

அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை

(தொல்.பொருள்.629)

என இழிந்தோர்-கீழோர்-விலக்கப்படுவது முத்தாய்ப்பாக அமைகின்றது. செய்யும் தொழிலின் தன்மையாலும், தன்னிறைவுப் பொருளாதார நிலையின்றிப் பிறரைச் சார்ந்து எதிர்நோக்கி நிற்றலாலும், சமுதாய மேல்மட்டத்தினரைத் தகுதியால் அண்மி நிற்கும் சூழல் பெறாமையாலும் சிலர் 'இழி' நிலைக்குட்படுகின்றனர்:

கட்டில் நிணக்கும் இழிசினன் (புறம்.82.3)

என அமையும் இழிவு, பிறப்பு முதலாக முன்கொண்டு செல்லப்படுகிறது.

உப்பு இலா அவிப் புழுக்கல்
கைக் கொண்டு பிறக்கு நோக்காது
இழிபிறப்பினோன் ஈயப்பெற்று (புறம்.363.12-14)

இவ்விழிவின் புன்மை, புலை என்பதனையும் இங்குக் கொண்டுவந்து அதனை, இணைச் சுட்டாகவும் பாகுபடுத்திவிடுகிறது.

முருகு மெய்ப்பட்ட புலைத்தி போல (புறம்.259.5)

துடி எறியும் புலைய .... (புறம்.287.1)

சமூக அடுக்கின் இழிந்தோர்க்கு ஈடாக, அதிகார அடுக்கில் (hierarchy) இளையர் அமைகின்றர் போலும். இளையோர், குறுந்தொழிலும் காப்பும் செய்வர் எனத் தொல்காப்பியம் கூறுவதும் (தொல்.பொருள்.166,169), பிசிராந்தையார், 'யான் கண்டனையர் என் இளையரும்' எனப் பாராட்டுவதும் (புறம்.191.4), பல சங்க இலக்கியக் குறிப்புகள் கல்லா இளையர் (புறம்.263.6), கல்லா இளைஞர், (முல்லை.36, பொருநர்.100, சிறுபாண்.33), இளைஞர் (புறம்.327.1, மதுரைக்.311) என 'ஊழியம்' செய்பவரைத் தருவதும் இக்கருத்துக்கு அரணாகும்.

## முடிவுரை

மக்கட் தொகுதி ஒன்றாயினும் அது பல பாகுபாட்டைக் கொண்டுள்ளது. அப்பாகுபாடுகட்கிடையே ஒப்புமைத் தளங்களும் வேறுபாட்டு அடுக்குகளும் காணப்படுகின்றன. உயர்வு-தாழ்வு, மேல்-கீழ் எனப் பிரித்துக் காட்ட, சமூக அடுக்கும் அதிகார அடுக்கும் காரணமாகின்றன. ஏற்றத்தாழ்வு இருந்தது.

# இளையர்

சமூகத்தில் உள்ள மக்கள் பல்வகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றனர். பால், வயது, இனம், மொழி, இடம், பிறப்பு, தொழில், குலம், குடி என இவை வேறுபட்டு அமையும். ஒவ்வொரு பாகுபாடும் தம்முள் தனித்தன அல்ல. ஒன்றிலொன்று மயங்கியும், கலந்தும் எல்லை நீங்கியுமமையும்.

'இளையர்' என்பது இத்தகு பாகுபாடாக முடியுமா என்ற நோக்கில் இளையர் யார், சமுதாயத்தில் அவர் இடமும் பங்கும் என்ன என்பதைப் பழந்தமிழ்க் களனில் காண வாய்ப்பு அமைகின்றது. ஒப்புமை பற்றி இளையோர், இளைஞர் என்ற வருகைகளும் தரவுக்கு ஏற்கப்படுகின்றன.

இளையர் என்ற சொல்லுக்குத் தமிழ் லெக்சிகன், இளைஞர், வேலைக்காரர் என இருபொருள் தருகிறது (தொகுதி-1, ப.359). இவற்றுள் இளைஞர் என்பது வயதடிப்படைப் பாகுபாடாகும்; முதியோர் என்பது இதன் மறு எல்லையாகலாம்:

> இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
> (பெரும்.268, அகம்.30.4)
>
> முதிய ரிளையர் முகைப்பருவத்தர் (பரி.10.19)
>
> இளையரு முதியருங் கிளையுடன் குழீஇ (அகம்.348.2)
>
> இளையரும் முதியரும் வேறுபுலம் படர (புறம்.254.1)

'வேலைக்காரர்' என்ற பொருள் சிந்தனையைத் தொடுவதாக, தூண்டுவதாக அமைகின்றது. 'இளமை'யைப் 'பருவ'மாகப் புரிந்து கொள்ள உதவிய தொல்காப்பியமே (பார்க்க: தொல்.சொல்.57,79; தொல்.பொருள்.54, 248, 545, 548, 570), ஊழியராக, உழைப்போராக (Labourers/Workers), உதவியாளராக (Assistants) அவரைக் காட்டுகின்றது.

தொல்காப்பியம், அகத்திணையின் கற்புச் சூழலில், பன்னிரு வாயில்களைப் பட்டியலிடுமிடத்து, ஏழாவதாக 'இளையர்' என்பதனைத் தருகின்றது (தொல்.பொருள்.191). முன்பு கூற்றுப்பற்றி

மொழியுமிடத்து 'இளையோர்' என்ற சுட்டுடன் அவருடைய பங்கும் பணியும் விளக்கப்பெறுகின்றன:

ஆற்றது பண்பும் கருமத்து விளைவும்
ஏவன் முடிபும் வினாவும் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியுந்
தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி என்ப

(தொல்.பொருள்.**168**)

உழைக் குறுந் தொழிலுங் காப்பும் உயர்ந்தோர்
நடக்கை யெல்லா மவர்கட் படுமே

(தொல்.பொருள்.**169**)

குறுந்தொழில் என்பதால் உதவியாக அமையும் சிறு செயல்கள், குற்றேவல், கருதப்பெற்றிருக்கலாம்; 'உழை' என்பதால் (தலைவன்-தலைவியரொடு) நெருக்கமாக அமைதல் என்பதோ பக்கத்தில் அமைதல் என்பதோ கருதப்படலாம். 'உழையர்' எனபதனாலும் இத்தகு 'ஊழியம் செய்வோரே' சுட்டப்பெற்றனர் போலும்.

படம்புகு மிலேச்சர் உழைய ராக..... (முல்லை.**66**)

பகைவரை வருத்தி, நிரையொடு பெயரும் தலைவனால் விரும்பிச் சிறப்புச் செய்யத்தக்கவராக இவ் உழையோர் அமைந்திருக்கின்றனர் எனப் புறநானூற்றிலிருந்து தெரியமுடிகிறது.

ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்நின்று
நிரையொடு வரூஉம் என்னைக்கு
உழையோர் தன்னினும் பெருஞ் சாயலரே (புறம்.**262**)

இளையர் என்போரை வாயில்களாகக் கூற்றுக்கு உரியவராக முன்சுட்டிய தொல்காப்பிய நூற்பா தந்தபோதும், செய்யுளியலில் களவு, கற்பில் கூற்றுக்குரிய பன்னிருவர் முறையே சுட்டப்படுமிடத்தில் இளையர் (தாய், விருந்தினர், பாடினி போன்றோர்) அமைக்கப் படாமை, இவருடைய 'சொல்' நிலையைவிடச் செயல் நிலையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகக் கருதலாம். சங்க இலக்கியக்களன் இவர் உரையைத் தரவில்லை.

மேற்கண்ட 'ஏவல் முடிபு' 'காப்பு' எனும் தொல்காப்பிய நூற்பாத் தொடர்கள் ஏவலராகவும் காவலராகவும் இவர் தொழிலை/செயல் நிலையை உணர உதவலாம். சங்க இலக்கியம் 'ஏவல் இளையர்'

என்ற சொற்பயன்பாட்டைத் தருவது இக்கருத்தை ஓரளவு உறுதிசெய்ய உதவுகிறது.

> களிற்று முகந் திறந்த கல்லா விழுத்தொடை
> ஏவல் இளையரொடு மாவழிப்பட்டென..... (நற்.389.5-6)

> ஆகொள் மூதூர் கள்வர் பெருமகன்
> ஏவலிளையர் தலைவன்... (அகம்.342.6-7)

> ஏவல் வியங்கொண் டிளையரொ டெழுதரும்...
> (பதிற்.54-15)

ஏவலரும் இளையரும் ஒன்றே போலும் எனும் கருத்து இங்குத் தோற்றம் கொள்கின்றது. ஆயின், தொல்காப்பியத்தில் கிடைக்கும் குறிப்புகளை நோக்கக் 'கடைநிலை ஊழியராக'க் கருதத்தக்க நிலையில் அடியோர், வினைவலர், ஏவல் மரபினர் என்போரமைகின்றனர் எனத் தெரிகிறது. பொருளதிகாரம், அகப்பாடல் தலைமக்கட்கு வேறாகக் கைக்கிளை பெருந்திணைகளில் இடம்பெற வழுவமைத்தவராக இம்மக்களைக் காட்டுகின்றது.

> அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
> கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்
> (தொல்.பொருள்.25)

> ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
> ஆகிய நிலைமை அவரும் அன்னர் (தொல்.பொருள்.26)

'இளையர்' என்பதில் காணப்பெற்றது போல, அகச் சூழலிலோ புறச்சூழலிலோ, சொல்லாடலிலோ இவ் அடியோர், வினைவலர், ஏவல் மரபினர் பொருத்திக் காட்டப்பெறவில்லை. எனவே அடியோர், வினைவலர், ஏவல் மரபினர் என்போர் ஒரே படிநிலையினர் அல்லது ஒத்த படிநிலையினர் என அமைக்கப்படவும், 'இளையோர்', அவர்கட்கு ஒருபடி மேலே அமையத் தக்கோர் எனவும் கருதலாம். இக் கருதுகோள் 'உயர்ந்தோர் நடக்கை எல்லாம் அவர்கட் படுமே' என இளையோர்க்குத் தொல்காப்பியம் விதந்தோதும் செயற் பாட்டையும் அடிப்படையாகக் கொண்டது.

'அடியோர்', அடிமையைக் குறிக்கலாம். 'அடிமை' எண்ணம் தொல்காப்பியக் களனிலேயே உண்டு (தொல்.சொல்.57.2). உயர்திணைப் பெயராக அமையினும் அஃறிணை முடிவுபெறும் இலக்கணக் குறிப்பில் இதுவும் உட்படுகின்றது. அடியுறை என்பதில் இவர் சங்க இலக்கியக் குறிப்புப் பெறுகின்றனர், ஊழியராக:

மடையர் குடையர் புகையர் பூஏந்தி
இடையொழி வின்றி அடியுறையா ரீண்டி....

(பரி.தி.1.44-45)

அடிமைநிலை யன்றிப் படிநிலை சுட்டுவதாகவும் அடியர், அடியுறை அமையலாம் என்பதும் தெரிகிறது.

கொடிய எமக்கு நீ யாரை
பெரியவர்க்கு அடியரோ ஆற்றாதவர் (கலி.83.3-4)

இரும்பிசிர் ஆந்தை அடியுறை எனினே (புறம்.67.12)

நின் அடிநிழல் பழகிய அடியுறை (புறம்.198.26)

இந்நிலையில், இளையர் இவரில் வேறுபடுகின்றனர்.

அதிகார அடுக்கில் தலைவன் மேல் நிலையிலும், இளையர் அடுத்த/கீழ் நிலையிலும் அமைவதைச் சில குறிப்புகளிலிருந்து அறியமுடிகிறது. அகத்தலைவனும் புறத்தலைவனும் தமக்கு உதவியாளராக இவ் இளையரைப் பெற்றனர் போலும்.

வினைமேற் செல்லலில், போர் முதலிய சூழலில் தலைமை தாங்கி நடத்தும்போது இவ் இளையர் உதவியாளராகின்றனர்.

இறையும் அருந்தொழில் முடித்தென......
இளையர் ஏகுவனர் பரிப்ப...... (நற்.161.1,6)

நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன் (குறு.258.6)

செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற (குறு.275.5-6)

கல்லா வாய்மையன் இவனெனத் தத்தம்
கைவல் இளையர் நேர்கை நிரப்ப (பதிற்.48.7-8)

நறவுநொடை நல்லிற் புதவு முதற்பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன்...... (அகம்.83.8-9)

வல்வில் இளையர் பெருமகன் நள்ளி... (அகம்.152.15)

புனிற்றான் றரவின் இளையர் பெருமகன்

(அகம்.338.18)

நீயேபிறர்நாடு கொள்ளுங்காலை அவர்நாட்டு
இறங்குகதிர்க் கழனி நின் இளையரும் கவர்க

(புறம்.57.5-6)

கல்லா இளையர் நீங்க நீங்கான் (புறம்.263.6)

யான் கண்டனையர் என் இளையரும் (புறம்.191.4)

வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்ஓர் அன்ன இளையர் இருப்ப..... (புறம்.286.1-2)

தலைவனுக்கு வினைமுடிக்க இளையர் உதவுதல்; அவன் நினைந்ததை அவர் செயற்படுத்துதல், அவனுடன் இருத்தல்; அவராலேயும் அவன் அறியப்படல் என்பன இவற்றில் பொருந்துகின்றன. இளையரின் சிறப்பாக இப்பாங்கு அமைகிறது எனலாம். ஏவல் இளையர் தலைவன், ஒள்வாள் இளையர் பெருமகன், கல்லா இளையர் பெருமகன், வல்வில் இளையர் பெருமகன், புனிற்றான் றரவின் இளையர் பெருமகன் எனப் பல்முறை வாய்பாடுபோலத் தலைவனுக்கு இளையர் ‘அடை’யாதல் இவர் முதன்மை புலப்படுத்துகின்றது.

குறிஞ்சிப்பாட்டில், பூக்கொய்து மகிழும் தலைவி-தோழியர் அமைந்த களனில் தலைவன் புகும்போது, அவர் அஞ்சும் வண்ணம் நாய் வந்தமை, ‘இளைஞரின்’ எனத் தரப்பெற்றதில் காப்புப் பற்றிய எண்ணமும் பொருந்துகின்றது.

முனை பாழ் படுக்கும் துன் அருந் துப்பின்
பகை புறம் கண்ட பல்வேல் இளைஞரின்
உரவுச் சினம் செருக்கி துன்னுதொறும் வெகுளும்
முனை வாள் எயிற்ற வள்உகிர் ஞமலி (குறி.128-131)

தலைவனும் இளையோரும் மகிழ்ந்து மலர் சூடும் சூழலும்,

சிறுவீ முல்லைப் பெரிதுகமழ் அலரி
தானுஞ் சூடினன் இளைஞரும் மலைந்தனர் (நற்.361-1-2)

எனத் தரப்பெறுகின்றது.

இளையரும் புரவியும் இன்புற நீயும்
இல்லுறை நல்விருந் தயர்தல்
ஒல்லுதும் பெரும் நீ நல்குதல் பெறினே (அகம்.300.20-22)

என்பதிலும் அகத்தலைவன் இளையருடன் காட்டப்பெறுகின்றான்.

தலைவனுக்கு வரும்போது இளையர் ஆடவராகவும் தலைவிக்கு வரும்போது மகளிராகவும் அமைகின்றனர் எனத் தோன்றுகின்றது. ஏவல் ஆடவர் (பதிற்.24.3) என்ற வழக்கு இதனால் போலும். தலைப்பில் கருதிய இளையரோடு இவரை எண்ணுதல் இயலாது. தொழில் முறை பகுப்பினராக, அங்கு இளையரமைய,

இங்கு இளம்வயது மகளிர் (தலைவி, தோழியர்) என்பதே பொருந்துகின்றது (ஐங்.198.1-2). இளையவர் (கலி.29.6;73.8;83.3); இளையீர் (குறி.141), இளையோய் (புறம்.144.6), இளையோர் (பொருந.187, சிறு.231-32, நற்.68.1-2, அகம்.90-2; 254.7; 370.2), இளையோள் (நற்.143.5; 320.4; அகம்.193.13; 314.21; புறம்.340.2; 341.3; 350.10) என இளைமையும் பெண்மையும் சுட்டி வருகின்றன.

இளையர், காவல் காக்கின்றனர்; இரவிலும் உறங்காமல் காவல் புரிவர்; நாய்களும் அவருடன் இருக்கும்:

உவலைக் கண்ணி வன்சொல் இளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப..... (மதுரை.311)

துஞ்சாக் கண்ணார் காவலர் கடுகுவர்
இலங்குவே லிளையர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும் (அகம்.122.6-8)

வீளை யம்பின் இளையரொடு மாந்தி
ஒட்டியல் பிழையா வயநாய் பிற்பட... (அகம்.182.4,5)

பல்வகையான ஆயுதம் தாங்கிய வீரராக இவர் அமைகின்றனர். சிலை, வேல், அம்பு ஆகியன கருவியானமை மேலே கண்ட வரிகளில் விளங்கும். நிரைய ஒள்வாள் இளையர் (குறு.258.6), புலவு வில் இளையர் (பதிற்.71.15) எனவும் குறிப்புகள் வரும். வல்வில் இளையர் (அகம்.120.12; 152.15; புறம்.353.10), திருந்து வேலிளையர் (அகம்.345.12), இலங்குவே லிளையர் (அகம்.122.6), வென்வேலிளையர் (அகம்.104.3; 64.5) என, வில், வேல் ஆகிய படைக்கலக் கருவிகள் பரவலாகச் சுட்டுப்பெறுகின்றன. காலாட்படை வீரராக மட்டுமன்றி, குதிரை வீரராகவும், தேர் வீரராகவும் இளையர் அமைந்துள்ளனர்.

விரைப்பரி வருந்திய வீங்கு செலல் இளையர்
அரைச் செறி கச்சை யாப்பழித் தசைஇ (நற்.21.1-2)

ஐதிலங் ககலிலை நெய்களி நோன்காழ்
வென்வே லிளையர் வீங்குபரி முடுக (அகம்.64.5-6)

வல்விரைந்து
இளைய ரேகுவனர் பரிய
விரியுளைக் கடுநடைப் புரவி (அகம்.354.5-7)

எனக் குதிரை செலுத்துதலும்,

*கொடுஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கி (அகம்.**250.6**)*

*கடுந்தேர் இளையரொடு நீக்கி (அகம்.**310.1**)*

எனத் தேர் இயக்கமும் இவர் பணியாக அமைகின்றன. யானையைக் கையாளும் திறமும் இவர்க்கிருந்ததை,

*தேம்படு கவுள சிறுகண் யானை........*
*கல்லா இளைஞர் கவளம் கைப்ப....... (முல்லை.**31,36**)*

என முல்லைப்பாட்டு உணர்த்தும்.

அரசாட்சியில் பல்வேறு பணியில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர். பொருநராற்றுப்படை, அரசவையில் இவரைக் காட்டியது:

*வல் அஞர் பொத்திய மனம் மகிழ் சிறப்ப*
*கல்லா இளைஞர் சொல்லிக் காட்ட....... (பொரு.**99-100**)*

வெற்றி ஏற்பட்ட சூழலில் வாழ்த்துப் பாடுகின்றனர்.

*இளையர்*
*இன்களி வழாஅ மென்சொலமர்ந்து*
*நெஞ்சுமலி உவகையர் வியன்களம் வாழ்த்த...*
*(பதிற்.**40.24-25**)*

*வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்சிறந்து*
*போர்வல் இளையர் தாள் வலம் வாழ்த்த....*
*(அகம்.**74.1-2**)*

இவர்கள் யாழிசைத்துக் கடவுட் பழிச்சுகின்றனர்:

*வணரமை நல்யாழ் இளையர் பொறுப்ப....*
*கைவ லிளையர் கடவுட் பழிச்ச...... (பதிற்.**41.2,6**)*

அரச வாழ்விலன்றி, கலை வாழ்விலும் இளையர் உதவியாளராக அமைந்துள்ளனர் போலும். பாணரின் இசைக்கலன்களைத் தாங்கியும்:

*சுவல் அழுந்தப் பல காய*
*சில் ஓதிப் பல் இளைஞருமே (புறம்.**139.1-2**)*

பாடினியின் மெல்லடி வருடி உதவியும்:

*மடமான் நோக்கின் வாள் நுதல் விறலியர்*
*நடை மெலிந்து அசைஇய நல்மென் சீறடி*
*கல்லா இளையர் மெல்லத் தைவர.... (சிறுபாண்.**31-33**)*

அமைவர். உழைக்கும் மக்களான உழவர்க்கும் இவ் இளையர் போரடிப்பதில் உதவி யமைகின்றனர்.

> எருதுகால் உறாது இளைஞர் கொன்ற
> சில் விளை வரகின் புல்லென் குப்பை (புறம்.327.1-2)

இல்வாழ்வில், அகத்தூதாக இளையர் பயன்பெற்றுள்ளனர் (பா.பே.இகுளையர்).

> அரிதே காதலர் பிரிதல் இன்றுசெல்
> இளையர் தருஉம் வாடையொடு
> மயங்கிதழ் மழைக்கண் பயந்த தூதே (நற்.5.7-9)

கல்லா இளையர் (சிறு.33; அகம்.83.9; புறம்.263.6) எனவும், கல்லா இளைஞர் (பொருந.100, முல்.36) எனவும் வரும் குறிப்புகள் சிந்தனைக்குரியன. 'கல்லா' என்னும் அடை, கல்வி இன்மையைக் குறித்தது எனக்கொண்டு, கல்வியாளருக்குக் கீழான படிநிலையினராக இவ்விளையரைக் கருத உதவுகின்றது. அரசவைப் பணியாளராக, யானையைப் பராமரிப்பவராக, பாணர் குழுவுக்கு உதவிப் பாடினியின் கால்களை வருடித் துன்பம் நீக்குபவராக, நறவு விற்கும் கடை ஏவலராக, நிரைபெயர்ப்புக்கு உதவுபவராக அமைபவர்க்குக் கல்வியின் தேவையின்மையை இதனால் புரிந்துகொள்ளலாம். அன்றியும் தொழில்நுட்பப் பணியாளருக்கு (Skilled Labourers) வேறாக அமையும் பணியாளரையும் (Unskilled Labourers) இதனால் - 'கல்லா' எனக் குறித்தனர் எனவும் கருதலாம். அதிகார அடுக்கில் (Administrative Hierarchy) ஓரளவு கீழ்நிலையில் (Lower Strata) அமையும் ஊழியரின் நிலையாக இதனைப் புரிந்துகொள்ளலாம். வன்சொல் இளையர் (மது.311), காவலர்க்குரிய கடினமொழி பகர்பவராக, அல்லது கல்வியின்மை பற்றிய வன் சொல்லினராக இவரை உணர உதவும். அன்றியும், கைவல் இளையர் (பதி.41.6, 51.34, 54.15) என வருவன, இவற்றிற்கு மாறாக, இத்தொழில் வன்மை வாய்ந்தவரைக் குறித்திருக்க வேண்டும். இதனால் ஒரே வகுப்பான இளையரில் கூடப் பல்வகையான பகுப்பும் அடுக்கு நிலையும் இருந்ததைப் புரியமுடிகிறது.

இளையர் பற்றிய தொல்காப்பிய எண்ணங்களும் சங்க இலக்கியக் குறிப்புகளும் சில கூறுகளில் ஒத்தும், பிற கூறுகளில் வேறுபட்டும் அமைகின்றன. தொல்காப்பியம், இளையர், இளையோர் ஆகிய பயன்பாட்டைத் தரும். சங்க இலக்கியம் இளைஞர் என்பதனை இணைக்கும். இளையோர் இங்குப் பயன்பட்டபோதும் சிறுவர்

(குறு.61), இளம்பெண்கள் (அகம்.254) ஆகியோரைக் குறித்தே வருகின்றது. தொல்காப்பியம் கூறும் காப்பு, உழைக்குறுந்தொழில் என்பனவற்றுடன் தூதும் சங்க அகச் சூழலில் அமைகின்றது. புறச்சூழலில் வருவன அனைத்தும் தொல்காப்பியம் சுட்டாப் புதுமையே. தொல்காப்பியம் 'வாயில்' எனவும் இளையோர்க்குரிய கிளவி எனவும் விதந்தோதியமை சங்கக் களனில் புலப்பட்டிலது. எனினும் 'வன்சொல் இளைஞர்' (மது.311), 'கல்லா இளைஞர் சொல்லிக் காட்ட' (பொருந.100) என வருவன, 'உம்பின் உரைக்கும் உரையா நாவின்.... மிலேச்சர்' (முல்.65-66) என்பவர்க்கு வேறாக இவரை உணர உதவும். அகம், புறம் ஆகிய இரு களன்களிலும், களவு கற்பு ஆகிய இரு கைகோளிலும் இளையர் உழைப்போராக, பணியாளராக (Working Class), உதவியாளராக அமைந்து, மக்கட்படிநிலையில், தலைமைக்குக் கீழ்ப்பட்ட பாகுபாட்டினராக அமைகின்றனர்.

# வரிசை முறை

## பாகுபாடும் வரிசையும்

சமுதாயத்தில் மக்கள் பலவாறு பாகுபடுத்தப்பெறுகின்றனர். பல்வேறு அடிப்படைகளும் காரணங்களும் பற்றிப் பிரிவுகள் அமைந்து, பண்புச் சுட்டுடனும் பெயர்க் குறிப்புடனும் வேறுபடுத்திக் காட்டப்பெறுகின்றனர். ஒரே உலகப் பரப்பின் மக்களே இவ்வாறு பகுக்கப் பெறினும் அப்பகுப்புகட்கிடையே ஒத்த நிலை-அல்லது சமநிலை புலப்படுத்தப்படாது பல தளங்கள் தோற்றம் பெறுகின்றன. எதை முன்னால் வைப்பது என வரிசையும், யாரை முதலில் நிறுத்துவது என முறையும் கருதப்படும் சூழலில் தளங்கள் நிலைப்பட்டுவிடுகின்றன. இது, யதேச்சையானதாக, விபத்தாகக் கருதப்பட்டு விலக்கப்படுவதோ, செவ்வையாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுதலோ காணப்படவில்லை. தம் நலனுக்காகக் கருதப்படலும் சுய இச்சையுடன் கையாளப்படலுமே காணப்படுகின்றன. இந்நிலை இன்று மட்டுமன்றி, சங்கச் சமூகத்திலும் இயல்பான உண்மையே.

பிறப்பு ஒருவரை முன்வரிசைக்குத் தள்ளலாம். புகழும் கொடைத்திறனும் ஒருவரை முதல்வராகத் தேர்ந்துகொள்ளச் செய்யலாம். கல்வியும் அறிவுத்திறனும் ஒருவரை முன்மொழியச் செய்யலாம். செய்யும் தொழில் அல்லது செயல்திறன் காரணமாக ஒருவர் முன்னுரிமை கொள்ளலாம். பொருளுடைமை பற்றி ஒருவர் ஏற்றம் காணலாம்- முன்னவராக ஏற்க/ஏற்றுக்கொள்ளப்படலாம். நிலமும் நிறமும் பாலும் பண்பும் பருவமும் (வயது) கூட யார் முன்னிற்பவர், முதன்மைத் தகுதியினர், முதலில் கருதத்தக்கவர், முன் வரிசைக்கு உரியவர் என்பதனை நினைக்க-நிறுவ உதவலாம்.

சமுதாய வளர்ச்சியில், அரசியல் நிலை, ஆட்சி வலிமை, சமய நோக்கம், இறைவன்மை எனப் பிற பல உள்ளார்வங்களும் புறச்சூழல்களும் சிலரைப் பின்நிற்பவராக, வழிமொழிபவராக, வெளிவட்டங்களில் மட்டுமே தம்மை வகைமை காண்பவராக தன்நிலை அற்றவராக/தனிநிலை இழந்தவராக, பிறரைச் சார்ந்தே நிற்பவராக, 'செயப்பாட்டு' நிலையினராக, வெறும் நிழலாக, ஏன்

வாலாகக் கூட அமைத்துவிடக் கூடும். இந்த நிலைமை, பிணைக்கும் சங்கிலிகளாகி விடுபடமுடியா நிலையில் நிரந்தரப்படுத்திவிடலாம்.

இதனை ஒத்த நோக்கு இன்மை எனவும் சமநிலை நோக்குக் குறைபாடு எனவும் புரிந்துகொள்ள முடிகிறது. எனினும் இதனைப் பொதுநோக்கு இன்மை என்று கூறி நின்றுவிடுவதோ, வேண்டும் வேண்டாம் என்று நீதி வழங்குவதோ, நன்று-தீது எனத் திறனாய்வதோ, சமுதாய நிலை, உலக நியதி என நியாயப்படுத்துவதோ முடியும்.

## வரிசையும் முறையும்

சுமார் 15 பொருண்மையுடயதாக வரிசை என்ற சொல் அமைகின்றது (பார்க்க : தமிழ் லெக்சிகன், தொகுதி 6, ப.3516; இணைப்பு, ப.407). இவற்றிலிருந்து, ஒருவருக்குப் பின் ஒருவர், ஒரு குழுவுக்குப் பின்பு மற்றொரு குழு என்பது போன்ற நிலையொழுங்கு என்று பொதுவாகவும்; மரியாதை-மேம்பாடு கருதும் பாராட்டுக்குரிய தகுதியாகிய தலைமை எனச் சிறப்பாகவும் 'வரிசை' என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. தகுதியுணர்தல் என்பதே வரிசையறிதல் என்பதால் சுட்டப்பெறுவதாகவும், இது தற்சார்பு (Subjective) நோக்குடையதாகவே தென்படுவதாகவும் தோன்றுகின்றது.

இதேபோன்று, சுமார் 16 பொருண்மையுடனமையும் முறை எனும் சொல் (பார்க்க: மேற்படி, தொகுதி.6, பக்.3299-3300) அடைவு, நியமம் என்ற வரன்முறை சுட்டும் நிலையில் இங்குப் பொருத்திக் கொள்ளப்படுகின்றது.

தன் விருப்பு வெறுப்புச் சாராத நிலையுடையதாகத் (Objective) தகுதி நிர்ணயித்து வரிசை காணுதலே ஏற்புடையது எனினும், இலக்கியக் குறிப்புகளை அணுகும்போது, முன்பே நிர்ணயிக்கப்பெற்ற ஒழுங்கின அடிப்படையில் வருகை அமைந்தது எனவோ, தம் விருப்பு வெறுப்புக் கேற்ப அவற்றைத் தாமே கருதிக் கொண்டனர் எனவோ தான் அறிய முடிகின்றது.

தனி நபருக்கேற்பவும் காலத்திற்கேற்பவும் வரிசை பற்றிய கருத்தில் மாறுபாடு ஏற்படக் கூடும். ஒரு காலத்தின் வரிசை பற்றிய எண்ணம், சமூக நிலையின் பிரதிபலிப்பாகவும் தோற்றம் காட்டலாம். இவ்வரிசை முறை நிலைப்படுத்தப்படும்போது, மாறாத அடுக்குநிலை உருவாக வாய்ப்பு அமையலாம்.

வேறுபாடு உண்டு-வேறுபாடு கருத வேண்டும் என்பதும், ஒத்தவரிடையேயும்-ஒரு தகுதியினரிடையேயும் வரிசை-முறை அறிதல் தேவை என்பதும் முன்னிட்டு நிற்கின்றன.

## பொதுநோக்கும் வரிசை அறிதலும்

பாகுபாடு என்ற ஒன்று வந்துவிட்டதென்றால், அவற்றிடையேயுள்ள வரிசை முறை பற்றிய சிந்தனையும் எழுந்துவிடுகிறது. தனிமனிதரிடையேயும் குழுக்களிடையேயும் யார் முதலில் யார் பின்னால் என்பதுவும், யார் தலைமை-யார் தொடர்தல் என்பதுவும் பார்க்கும் வாய்ப்பு அமையலாம்.

வேறுபாடின்றி அனைவரையும் ஒன்றுபோல் கருதும் ஒருமை நோக்கு இன்று வேண்டப்படுவதாக அமையினும் அதனைப் "பொதுநோக்"காகக் கொண்டு விலக்கக் கூறும் சிந்தனையைப் பழந்தமிழ் இலக்கியத்தில் காணமுடிகிறது. சமத்துவம் இன்மை என்பதும் சமத்துவப் பார்வை கூடாது என்பதும் புலவர் கபிலர் கூற்றில் மலையமான் திருமுடிக்காரி எனும் மன்னனுக்கு அறிவுறுத்தல் நோக்கில் வருவது காலக் கோட்பாட்டின் வெளிப்பாடாகலாம்.

மன்னன் கொடைவள்ளலாக அமைகின்றான். நாடி வருபவருக்கு எளிதாக வாரி வழங்குகின்றான். பெரியவன்-சிறியவன், வல்லான்-அல்லன், கவிஞன், இரவலன் என்ற வேறுபாடு அவனால் கருதப்படவில்லை. கொடுப்பதில், குறிப்பிட்டவர்க்கு முதன்மை வழங்கப்படவில்லை. சமத்துவம் அமைந்தது; வேறுபாடு கருதாமை கைக்கொள்ளப்பட்டது. அதுவே குற்றமாயிற்று.

ஒருதிசை ஒருவனை உள்ளி நால்திசை
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அது நற்கு அறிந்தனை ஆயின்
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே (புறம்.121)

வரிசையறிதல் வேண்டும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது. கொடையின் சிறப்பு, கொடைமடம் அல்ல. முல்லைக்குத் தேரும் (புறம்.200,201), மயிலுக்குப் போர்வையும் (புறம்.141, 145) கொடுத்தலாகிய கொடை மடமல்ல வேண்டப்படுவது. தக்கார் யார், தகுதியுடையவர் எவர் எனப் பகுத்துணர்ந்து தரம் கண்டு அளித்தலே பதவிக்கும் பரிசிலுக்கும் சிறப்பாம். பல திசையிலிருந்தும் பழுமரம் நச்சிய பறவையாக (புறம்.370) வரும் பரிசில் மாக்களாகிய

புலவரிடையே தரம் பிரித்துக் கண்டு முறையறிதல் முக்கியத்துவம் பெறுவது தெரிகிறது.

சிறுபாணாற்றுப்படை (ஓய்மானாட்டு நல்லியக் கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது) புரவலனை,

**வரிசையறிதலும் வரையாது கொடுத்தலும்**
**பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்**
**பன்மீ னடுவட் பான்மதி போல**
**இன்னகை யாயமோ டிருந்தோன்....** (சிறு.**217-220**)

என வரிசையறியும் ஆற்றலினனாகத் தருகிறது. "பரிசிலருடைய தரம் அறிந்து அவர் பெறுமுறைமையே கொடுத்தல்" என இதற்கு நச்சினார்க்கினியர் உரைவிளக்கம் தருவார். வரிசையும் பரிசிலும் தொடர்புடையன என்பது பிற வருகைகளிலும் விளங்கும்.

**பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்**
**பணியிய ரத்தைநின் குடையே** (**6.16**)

என்பதும் புறப்பாட்டு (பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடியது). இல்லது படைக்க வல்ல தலைவனொருவனைச் சிறப்பிக்கு முகமாக உறையூர் முதுகூத்தனார்,

**இற்பொலி மகடூஉப் போலச் சிற்சில**
**வரிசையி னளிக்கவும் வல்லன்** (புறம்.**331.9-10**)

என வரிசையின் அளித்தலைச் சுட்டுவார். சேரமான் வஞ்சனைத் திருத்தாமனார்,

**வரிசையி னிறுத்த வாய்மொழி வஞ்சன்** (புறம்.**398.8**)

எனப் போற்றுவதும் இத்தகையதாகும். தகுதி, மேம்பாடு என்பன இப்பாராட்டுக்கு ஊற்றம் வழங்குகின்றன. பெருஞ்சித்திரனார், இத் தரமுடை நிலைமை பற்றிப் புலவரை 'வரிசையோர்' எனவே சுட்டிவிடுகின்றார்.

**வருகென வேண்டும் வரிசை யோர்க்கே**
**பெரிதே யுலகம் பேணுநர் பலரே** (புறம்.**207.6-7**)

என்பது அப்பாடல் வரிகள். சில அரிசி வேண்டிய புலவனுக்கு, அவன் தகுதி உணர்ந்து-வரிசை அறிந்து மன்னவன் யானை அளித்ததாக நாஞ்சில் வள்ளுவனை ஔவையார் பாடுவதும் வரிசையறிதல் எனும் உண்மையைப் பதிவு செய்யும்:

யாம் சில
அரிசி வேண்டினேமாக தான் பிற
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத்து அன்னது ஓர்
பெருங் களிறு நல்கியோனே (புறம்.140.4-8)

வரிசையறிதல் என்பது தேவையானது, அதுவே முறையானதும் கூட என்பதனை வள்ளுவர் வாக்கும் உணர்த்தும். 'சுற்றம் தழால்' என்பதில், அரசு (அரசன்) எவ்வாறு சுற்றத்தைத் தழுவிக் கொள்ள வேண்டும் என விளக்குமிடத்து இதனைச் சுட்டுகின்றார். பொது நோக்குத் தவிர்த்து வரிசை யுணர்ந்து செயற்படலே வேண்டப்படுகிறது.

பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அது நோக்கி வாழ்வார் பலர் (528)

வரிசை என்ற சொல்லுக்கே முறை என்ற பொருள் வந்துவிட்டமை இங்குப் புலப்படுகின்றது. 'வரிசை அறியாக் கல்லென் சுற்றம்' (புறம்.184.8) என்ற சுட்டு, கல்வியும் அறிவுடைமையும் முறையறிதற்கு உறுதுணையாமாற்றை உய்த்துணர உதவும். புலவன் மாட்டு மட்டுமன்றிப் பகைவர் மாட்டும் வரிசையறிதல்-பகைத்தகுதி யுணர்ந்துபோரிடல்-உள்ளதைக் கபிலர் வாக்கு அளிக்கும்.

யானே பரிசிலன் மன்னு மந்தணன், நீயே
வரிசையில் வணக்கும் வாண் மேம்படுநன்
(புறம்.200.13-14)

இதன் காரணமாகப் பகைவர்மேல் கொண்ட பெருவெற்றியும் கூட வரிசையாகின்றது. புலவரின் பாடல், வெற்றிக்குத் தக, வெற்றியின் உயர்வு-தகுதி நிலைக்குத் தக அமையும்.

நின்
ஆடுகொள் வரிசைக் கொப்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே (புறம்.53.13-15)

வரிசையும், புலவரும் கொண்ட இத்தொடர்பு, பரிசில் வாழ்வினரான அவரை வரிசைக்கு ஏங்குவோராகக் காட்டுகின்றது. பொருளை அல்ல, மன்னனால் பெறும் சிறப்பையும் மேம்பாட்டையுமே இவர்கள் வேண்டுவாராயினர். புலமைச் சொற்களை விதைத்து, புரவலனின் உள்ளத்தில் வள்ளன்மை ஊற்றுச் சுரக்காதபோது - எதிர்பார்த்தது நிறைவேறாது ஏமாற்றமுற்றுத் தம் வருத்த வாழ்வினால் வெம்புகின்றனர்.

வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கு முரனுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு..... (புறம்.206.2-5)

அதியமான் நெடுமானஞ்சி பரிசில் நீட்டித்தபோது ஔவையார் வடித்தவை இக்கண்ணீர்ச் சொற்கள்; புலவனொருவனை ஒற்றனெனக் கருதித் தண்டிக்கப்புகுந்த மன்னனைக் கோவூர்கிழார் தக்க சொற்களால் கடியும்போதும் ஒத்த உணர்வு வெளிப்படுகின்றது.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை (புறம்.47.1-6)

அரசுத் தலைவர்கள் அறிவாளர்களை இனங்கண்டு கொள்ளும் திறமும் தகுதியுமுடையவராக இருத்தல் வேண்டும். யார் புலவர் யார் ஒற்றன் என்று வேறுபடுத்திக் காணும் அறிவு - 'திரிச்சறிவு' - இன்மையே இங்குச் சுட்டிக்காட்டப்படுகிறது. பிறர்க்குத் தீது செய்தல் அறியாத வாழ்வினராகவும், கல்வியால் தம்மை எதிர்த்து நிற்பாரை வெல்லுந் திறத்தினராகவும், மண்ணாளும் அரசியல் தலைவரைப் போன்ற செம்மல்-தலைமை - உடையவராகவும் அமையும் புலவரே (புறம்.47.7-11), அவனால் வரிசை கருதப்படாதாராக அமைந்துவிடுகின்றனர்!

மன்னன், வரிசை அறியும்போது, புலவனின் தகுதி அறிவதுடன் தன் தரமும் உணர்ந்து செயல்படவேண்டும். முன்சுட்டிய புறப்பாடல் (புறம்.140) 'தன்னும் தூக்கி' என இதனை உணர்த்துகின்றது. பிறிதிடத்தும் 'அளந்து அறிதல்' (assess) என்ற தொடரால், அரசனின் தகைமையும் புலவனின் தகுதியும் இவ்வரிசையறிதலின் இன்றியமையாக் கூறாதல் புலப்படும்.

தன் அறி அளவையின் தரத் தர யானும்
என்அறி அளவையின் வேண்டுவ முகந்துகொண்டு
(128-9)

எனப் பொருநராற்றுப்படை (சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது) பதிவு செய்யும்.

வல்லினும் வல்லேன் ஆயினும் வல்லே
என் அளந்து அறிந்தனை நோக்காது சிறந்த
நின் அளந்து அறிமதி பெரும (புறம்.161.23-25)

எனக் குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடுவதும் சான்றாகும்.

வரிசையறிதலின் உச்சமாகவே, புலவனைச் 'செம்மல்' எனத் தலைமை சுட்டி (புறம்.47) யமைத்ததைக் கருதலாம். அன்றியும் புலவரிலும், புலவர் குழுவிலும் தலைமை - தலைவன் நிலை சுட்டப் பெற்றமையும் இங்கு இணைத்துக் கருதத் தக்கது. மாங்குடி மருதன் இத்தகு புலமைத் தலைமையுடன் சுட்டப்பெறுவது சான்று.

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்
புலவர்....... (புறம்.72.13-16)

இந்நிலைமை - இத்தலைமை பிறருக்குச் சுட்டப்படாமை சிந்திக்கத் தக்கது. வரிசை என்பது ஒரு நெடுநிரை அல்ல; ஒருமை; தலைமை.

## பொதுமை விலக்கல்

பொது, பொதுமை, பொதுச்சொல், பொதுமொழி எனச் சங்க இலக்கியம் தரும் பல ஆளுகைகள், ஏற்கப்படுவதாக அன்றி, சிறப்புடையதாக அன்றி, விலக்க வேண்டியதாகவே 'பொது'மையைக் காட்டுகின்றன.

வையம் பிற காவலர்க்கும் பொது - என்ற சொல் பொறாதவனாக (புறம்.8.1-2) வேந்தன் காட்டப்படுகின்றான்; தமிழ்நாடு மூவேந்தர்க்கும் பொது என்ற கருத்தும் சினத் தீ மூட்டுகின்றது; போர் மூளுகின்றது;

சினப் போர் வழுதி
தண்டமிழ்ப் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து
(புறம்.51.4-5)

ஒருகுடைக் கீழாளும் அரசுடைமை இது; ஒருமையும் பெருமையும் இதுவே.

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
(புறம்.189.1-2)

குன்று தலை மணந்த மலைபிணித் தியாத்த மண்
பொதுமை சுட்டிய மூவருலகமும்
பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கும்....

(புறம்.357.1-3)

எனப் பிற சான்றுகளும் பொதுமை விலக்கி மொழிகின்றன. சிறப்பில் சொற்களே 'பொது மொழி'யாகின்றன:

நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது (புறம்.35.31)

ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளா (புறம்.58.27)

என்பன சான்றாகும்.

சிறப்பின்மையை விலக்குதல், நீக்குதல் என்ற எண்ணத்திலேயே, வரிசை யறிதல் என்ற நிறைவின் 'முன்படி'யாகப் பொதுநோக்கு நீக்குதல், ஒழிதல் என்பது அமைகின்றது. 'வரிசை அறி; பொது நோக்கு ஒழி' எனச் சங்கப் புலவரும், 'பொது நோக்கான் வேந்தன், வரிசையா நோக்குவான்' எனக் குறளாசிரியரும் இதனை வலியுறுத்துகின்றனர்.

# காது குத்துதலும் முடிகொடுத்தலும்

## முன்னுரை

குறிப்பிட்ட ஏதேனும் காரணம் பற்றியோ, அல்லது அத்தகு வெளிப்படையான, தெளிவான காரணம் எதுவும் தெரியாத நிலையிலோ, இயல்பானதாகக் கொள்ளப்பெற்று, அல்லது கட்டாயமானதாக வற்புறுத்தப்பெற்று, தொன்றுதொட்டு கைப்பற்றப்பட்டுவரும், நம்பிக்கை வயப்பட்ட பழக்க வழக்கங்கள் 'சடங்கு'களாக அமைகின்றன. அவற்றுள், ஆண்-பெண் என்ற பால் வேறுபாடின்றி, குழவிப் பருவம் முதலே பின்பற்றப்பட்டு வருவன காதுகுத்து, முடியெடுப்பு என்பன. இவற்றுள் முன்னது, வாழ்வில் ஒருமுறையும், பின்னது ஒன்று அல்லது பல முறையும் நிகழும் தன்மையின. வாழ்வியல் சடங்கான இவை சமயச் சார்புடனும் அமைவது கண்கூடு. (இந்து மதத்தினரிடையே) கோயிலில் சென்று காது குத்துதலும் முடிகொடுத்தலும் அமைகின்றன. இவ்வாறு செய்தால் நன்மை விளையும் என்ற எதிர்பார்ப்போ, செய்யாவிட்டால் தீமையுருவாகும் என்னும் அச்சம் மற்றும் காப்புணர்வோ, 'வேண்டுதல்' என்ற அமைப்பிலும் இவற்றைக் கொண்டுவருகின்றன. குழந்தையின் பெற்றோர் அல்லது முன்தலைமுறையினரின் 'வேண்டுதல்' இத்தகு செயற்பாட்டிற்கு அடிப்படையாகி, மரபுத் தொடர்ச்சி காட்டக் கூடும். 'தன்வேண்டுத'லின் அடிப்படையிலும் இதன் நடைமுறை வாய்ப்பை, வயது வந்தோரின் (adult) முடியெடுத்தல்/முடிகொடுத்தல் காட்டுகின்றது.

காதில், ஒருமுறை ஓரிடத்தில் குத்துதலும், ஒன்றிற்குமேல் குத்துதலும் காணப்பட்டு, ஒருநகை அல்லது பல நகை போடுதல் காணப்படினும், புறச் செவிமடலின் கீழ்ப்பகுதியில் முதன்முறை குத்துதலே சடங்காக ஆசரிக்கப்படுவதாகத் தெரிகிறது (காது போன்றே மூக்கும் குத்தப்படுதல் அமையினும் அருகியன்றி ஆண் குழந்தைக்கு அமைவதில்லை. பெண்ணுக்கும், குழவிப் பருவத்தைவிட இளமைப்பருவத்தில் இது செய்யப்படுவது பெரும்பான்மை. மேலும் காதுகுத்துதல் போல் அனைவருக்கும் செய்யப்படுவதும் பெறப்படவில்லை. சமய/கோயில் சார்புடன் தான் செய்யப்படுகிறது என்பதும் புலப்படவில்லை).

முழுமையாக முடியெடுத்தல் (மழித்தல்-குறள்.280) அமைவதுடன், கூந்தலின் சிறுபகுதியை மட்டும் நீக்குதல் (பூமுடி/ கொணமுடி கொடுத்தல்) காணப்படுகிறது. இப் பின்வகை, பெரும்பாலும் இளம்பெண்டிர் நிலையில் மேற்கொள்ளப்படுவது தெரிகிறது. ஒருமுறை மட்டுமன்றி பலமுறையும் இத்தகு முடியெடுத்தல் சடங்கு, 'வேண்டுதல்' காரணமாக அமையலாம்.

**களன்**

இப்பழக்கங்கள் - சடங்குகள் ஏன், எப்படி, எதற்காக, எங்கு உண்டாயின? எல்லா மதத்தினரும் எல்லா இனத்தினரும் இதனைச் செய்கின்றனரா? இது உலகளாவிய நிலையில் காணப்படுகின்றதா? சமூக-மானுடவியல் நோக்கில் இதன் வழியாகப் பெறப்படும் குறிப்பு என்ன? அரசியல், பொருளாதாரச் சார்பும் தாக்கமும் இவற்றில் புலப்பட வாய்ப்புள்ளதா? யார் யாருக்கு, எந்த வயதில், எந்தக் காலப்பகுதியில், எந்தெந்த இடத்தில் இவை செய்யப்படுகின்றன? யாரால் யாருடைய முன்னிலையில் அல்லது மேற்பார்வையில் செய்யப்படுகின்றது? முன்னதில் குறிப்பிட்ட இனமும், பின்னதில் குறிப்பிட்ட உறவும் தொடர்பு கொள்ள வாய்ப்புண்டா? இவ்வாறான செயல், "ஊனம் செய்வது" ஆகாதா? இதனால் விளையும் பயன் தத்துவ ரீதியானதா மருத்துவ நிலையினதானதா? இலக்கியம் வழங்கும் குறிப்புகட்கும், உலக வழக்கில் கிடைக்கும் கருத்துகட்கும் ஒருமைப்பாடு அமைகிறதா? என்பது போன்று இப்பொருண்மை தொடர்பாகப் பல வினாக்கள் எழலாம். இவை ஆழ்ந்த விரிவான ஆய்வுக்குரியன. இவற்றுள் ஒருசில கூறுகள் தொடர்பான எண்ணங்கள் சில இங்குத் தரப்படுகின்றன.

**காது குத்துதல்**

'கன்ன வேதைச் சடங்கு செய்தல்' எனத் தமிழ் லெக்சிகன் 'காது குத்துதல்' என்பதற்குப் பொருள் சுட்டுகிறது (தொகுதி.2, ப.864). திவ்வியப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் திருமொழி இச்சொல்லாட்சியைத் தருதலும் இங்கு வெளிப்படுகிறது.

கேசவ நம்பீ யுன்னைக் காதுகுத்த.... (திவ். பெரியாழ்.2.3.1)

(மனிதருக்குச் செய்யப்படும் சடங்கு இங்குக் கடவுட்கு ஆகின்றது போலும்).

இதன் முதல் இலக்கியக் குறிப்பு வேறமைகிறதா என்பது மேலாய்வுக்குரியது. தொல்காப்பியம், தலைவியின் மெய்ப்பாடு பற்றிக்

கூறுமிடத்துக் 'காதொன்று களைதல்' (தொல்.பொருள்.258) எனத் தருவது கீழ்வருமாறு இளம்பூரணரால் விளக்கப்படுகின்றது:

> **காதொன்று களைதல் என்பது - காதிலணிந்த தொன்றை விழப் பண்ணி யதனைத் தேடுகின்றார் போல நிற்றல்.**

காதிலணியப்படும் நிலையில், காதுகுத்தப்பட்டிருந்தது என ஒருவழியுணரலாம். சங்க இலக்கியமும்,

> **பூங்குழை யூசற் பொறைசால் காதின்...** (பொருநர்.30)

> **நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை** (முருகு.86)

எனக் காதில் குழையமைந்ததைத் தருவதில் (ஆடவர்/பெண்டிர்க்குக்) காது குத்தப்பட்டிருந்தது என்ற கருத்தை உணரலாம். இவை போன்ற இன்னும் பல புறக்குறிப்புகள் அமையினும் நேரடியாக - தெளிவாக காதுகுத்தும் செயல்/சடங்கு புலப்பட அமைந்ததாகத் தெரியவில்லை.

இரும்பு ஆயுதம் ஒன்றால் (மிகுந்த பாதிப்பு இன்றி) உடலுக்கு ஊறு செய்தல் என்பது காதுகுத்துதலில் அமைகின்றது. இரத்தப்பலியைக் குறிக்கும் நிலையில் குழந்தைக்குக் காதுகுத்தப்படுவதாகவும், பாதுகாப்புக்கான கொடையாக (காணிக்கை) அச்செயல் அமைவதாகவும் குறியீடு மற்றும் படிமங்களைத் தரும் அகராதி கூறுகிறது. மேலும், நாட்டுப்புற நம்பிக்கையின்படி, கண்பார்வை சிறப்பாக அமையக் காது குத்தப்படுவதாகக் கருதப்படும் நிலையும், அதன்கண் சுட்டப்படுகின்றது (Dictionary of Symbols and Imagery, p.154, 155.) எபிரேய மக்களிடையே, அடிமைக்குக் காது குத்தப்படுவதாக வரும் செய்தி தனித்த சிந்தனைக்குரியது. ஆறு ஆண்டுகள் ஒரு தலைவனிடம் சேவகம் செய்த பின்பு, ஏழாம் ஆண்டு விடுதலையாகிய பின்னும், செல்ல விரும்பாமல் அவனிடமே தொடர்ந்து சேவகம் செய்ய விரும்பும் நிலையில், இரும்புக் கம்பியால் காதில் துளையிடும் இந்நிலை அமைகின்றது. இச் சடங்கு வாசற்படியண்டையில் செய்யப்படுகின்றது. இதனை விவிலியம் விதியாகச் சுட்டுகின்றது (யாத்.21.6; உபா.15.17).

> **.... நீ ஒரு கம்பியை எடுத்து அவன் காதைக் கதவோடே சேர்த்துக் குத்துவாயாக, பின்பு அவன் என்றைக்கும் உன் அடிமையாயிருக்கக் கடவன்; உன் அடிமைப் பெண்ணுக்கும் அப்படியே செய்யக் கடவாய்** (உபா.15.16)

உலகளாவிய நிலையில் தொன்மைக்காலச் சடங்கு நிலையில் இக்காது குத்தல் அமைவது தேரப்பட்டு ஒப்பீட்டு நிலையில் நோக்கப்படும் போது தெளிவுகள் கிடைக்க வாய்ப்புளது. புறநானூறு, குழவி இறப்பினும் ஊன் தடி பிறப்பினும் ஆளன்று என்று வாளில் தப்பாது (புறம்.74) வாளால் போழ்ந்து பின்பே இறப்புக் கிரியைகள் செய்யப்படும் எனும் எண்ணத்தைப் புலப்படுத்துகிறது. இதனால், இரும்பால், ஆயுதத்தால், உடல் ஊறு செய்யப்படல், போழப்படல், கிழிக்கப்படல் என்பது உட்பட்டு, உயிரோடிருக்கும்போதும் இத்தகு 'காயம்' செய்யப்படலின் தேவையை, நம்பிக்கை வயப்பட்ட தேவையை உள்ளுறுத்தும். இவ்வாறு செய்வதால் தீய குருதி, தீய ஆவி வெளியேற்றப்படல் என்பதோ, இத்தகு ஊறு காரணமாக 'ஊனம்' உற்றதை, எந்தத் தீமையும் (பேய்/பூதம்) அணங்காது - வருத்தாது என்பதோ கருதப்பட்டதா என்பதும் ஆய்வுக்குரியது. ஊனமானதை விரும்பாமை எனும் வழமையின் போலி நிலை இது.

## முடிகொடுத்தல்

அழகுணர்ச்சி நோக்கிலன்றி, விருப்ப அடிப்படையில் கூந்தலை நீக்குதல், நீக்கியளித்தல் என்ற பாங்கும் உலகளாவிய செயலாக அமைதல் கூடும்.

முன்சுட்டிய தொல்காப்பிய மெய்ப்பாட்டியற் சூத்திரப் பகுதியாகக் 'கூழை விரித்தல்' என வருவதில் தலைவியின் கூந்தல் சுட்டப்பெறுகின்றது. கூந்தலை வெட்டும் வழக்கம் இருந்தது பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் பரவலாகக் கிடைக்கின்றன. பருவமாற்றம் குறிக்கும் நிலையில் போலும் ஆண் குழவிக்குக் குடுமி களையப்பெற்றுள்ளது. பால் மணம் மாறாப் பாலகன் குடுமியுடன் (முடி) காட்டப்படுகின்றான்: 'புல் உளைக் குடுமிப் புதல்வன்' (புறம். 160.18; 273.3). மிக இளவயதின் சிறுவனும், 'பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி, ஒரு மகன் அல்லது இல்லோள்' (புறம்.279.9) எனத் தலைமயிருடன் காட்டப்படுகின்றான். பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர்க் கிழார், அப்போது குடுமி களைந்த இளவயதினனாகக் காட்டுகின்றார்:

> **கிண்கிணி களைந்த கால் ஒண் கழல் தொட்டு**
> **குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண் தளிர்**
> **நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து**
>
> (புறம்.77.1-3)

'மயிர் குறை கருவி'யைப் பொருநராற்றுப்படை (வரி.25) உவமையாக எடுத்தாளும். ஐம்பால் (கூந்தல்) கவின்பெற இவ் எஃகுக் கருவி

பயன்பெற்றதைக் கலித்தொகையும் காட்டும் (கலி.32.1). பெண், கணவனை இழந்த நிலையில் 'கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி' (புறம்.250.4) யமைந்ததையும் சங்க கால இலக்கியம் காட்டும். இவற்றின் வழியாக, 'முதன் முடி கொடுத்தல்' என்ற நிலையோ, அது 'காணிக்கையாக'க் கருதப்பெற்ற பாங்கோ, சடங்காக நிகழ்த்தப்பெற்ற பான்மையோ தெற்றெனப் புலப்பட்டிலது. எனினும் அந்நிலைகளில்லை எனக் கூறுதலும் கடினமே.

'தலையின் இழிந்த மயிர்' (964); 'மயிர் நீப்பின் வாழா' (969) எனும் வள்ளுவத் தொடர்கள் மயிர்-முடியின் உயர்வை, சிறப்பை, மேன்மையை, மகிமையைக் குறிப்பாக உணர்த்தும். உடலின் சிறந்த உறுப்பாக - பெரும்பான்மைப் புலன்களை/பொறிகளைக் கொண்ட உறுப்பாக அமையும் தலையின் மேல், பாதுகாப்புப் படலமாக முடி அமைவதும், உடலின் உயரமான - உச்சமான பகுதியில் முடி அமைவதும் அதன் குறியீட்டுப் பொருத்தத்தைப் புலப்படுத்தப் போதுமானது. இதனால் உயர்வான பொருளைத் தத்தம் செய்தல், தன்னையே வழங்குதல் என்பதன் அடையாளமாக முடிகொடுத்தல் அமைகின்றது. ஆன்மீக தத்துவம் இம் முடிநீக்கத்தில் பொருந்துவதால் பல சமயங்களில் இதற்குத் தனித்த இடம் காணப்படுகிறது. மணிமேகலை துறவிலமையும் கூந்தல் நீக்கம் இங்குச் சுட்டற்குரியது (சிலம்பு.27.107). வளமைக்குக் குறியீடாக (Fertility) முடி அமைவதால் பெண்துறவி, விதவை ஆகியோர் முடி எடுக்கப்பட்ட நிலையில் காட்டப்படுகின்றனர் போலும். இழப்புக் குறியீடாக மயிர் இழப்பு அமையினும், முடிகொடுத்தல், தன் விருப்பப் பலியாகவும் அமைகின்றது (பார்க்க : Dictionary of Symbols, p.129) தன்னைப் பலியிடுவதற்குப் பதிலாக, தன் தலையை அறுத்தளித்தலுக்குப் பதிலியாகத் தலைமயிர் வழங்கப்படுகின்றது. பிரார்த்தனையாக, வேண்டுதலாக முடியை எடுத்தல் என்பதும், அதற்காகக் குறிப்பிட்ட இடம் செல்லுதல் என்பதும் தொல் பழங்காலத்தின் உலகளாவிய சடங்கு போலும். தூய்மை செய்தலின் அடையாளமாகத் தலைச்சவரம் செய்துகொள்ளுதலும் (அப்.21.24), வேண்டுதலுக்காக முடி கொடுத்தலும் (அப்.18.18) விவிலியத்திலும் காணப்படுகின்றது.

> **பவுல் அநேக நாள் அங்கே தரித்திருந்த பின்பு,**
> **சகோதரரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, தனக்கு**
> **ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்தபடியினால் கெங்கிரேயா**
> **பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக்கொண்டு சீரியா**
> **தேசத்துக்குப் போகக் கப்பல் ஏறினான்** (அப்.18.18)

துறவின் குறியீடாகவும் இது இங்குப் பொருந்தலாம்.

உடலின் ஒரு பகுதியாகவே முடியமைவதாலும், செறிந்த கருமையான அலையலையான கூந்தல் அழகுணர்வுடன் அணுகப் படுவதாலும் முடியை எடுத்தல்-நீக்குதல் ஊனம் செய்தலாகவும் அணுகத் தக்கது. இதில் தன்னைத் தானே ஊனம் செய்தல், விரும்பிச் செய்தல் என்பன இணைகின்றன.

## நிறைவுரை

ஊனத்தின் ஒரு படிநிலையாக, ஊறுசெய்தல், அதனையும் விரும்பிச் செய்தல் என்ற நிலையில் இக் காதுகுத்தலும் முடிகொடுத்தலும் அமைகின்றன. பலி கொடுத்தலின் பிரதிநிலையாக இவை இணைகின்றன.

# சமயவாதியாக - பெண்

## முன்னுரை

காலம், தருணம், அவகாசம், மதம், சமய திட்சை, நூல், உடன்படிக்கை, மரபு எனும் எண் பொருளுடையதாகத் தமிழ்ப் பேரகராதியில் குறிக்கப்பெறும் 'சமயம்' எனும் சொல், மதம் எனும் பொருளில், முதலில் மணிமேகலை (பதி.88), பெருங்கதை (உஞ்சை. 36.256) ஆகியவற்றில் வருவதாகத் தெரிகிறது; 'தன் சமயத்தை நிறுவும் பொருட்டு வாதிப்பவன்' 'சமயவாதி' எனப்படல், திருவாசகத்தில் அமைகின்றது (4.52); ஆயின் 'தருக்கிப்பவனை' 'வாதி' எனல் பழந்தமிழுக்கும் உரியது என்பதை மலைபடுகடாம் (42) காட்டுகின்றது (தமிழ் லெக்சிகன், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1982, தொகுதி 3, பக்.1292-93; தொகுதி 6, ப.3590).

தமிழ் இலக்கியப் பெருக்கில், சமயம் தன் செல்வாக்கை மிக நீண்ட காலமாகப் புலப்படுத்தி வருகிறது. தொடக்க காலத்தில், சமயச் செய்தி என்பதைவிட, இறைச் செய்தி இடம்பெறுகின்றது எனலாம். தொல்காப்பியப் பொருளதிகாரம், அகத்திணையின் முதற்பொருளான நிலத்தை மாயோன் முதலான தெய்வத்தைக் கொண்டு பகுப்பதும் (சூ.5), கருப்பொருட்பட்டியலைத் தெய்வத்தை முதலாக்கித் தொடங்குவதும் (20), கிடைக்கும் தோற்றக் களனாகும்; மேலும் புறத்திணையில் 'கொற்றவை நிலை' (60), 'அமரர் கண் முடியும் அறுவகை' (79), 'காமப்பகுதி கடவுளும் வரையார்' (81), 'கடவுள் வாழ்தொடு கண்ணிய வருமே' (85) எனவும்; செய்யுளியலில் 'வழிபடு தெய்வம்' (425), 'தேவர் பராஅய முன்னிலை' (445) எனவும் அமைப்பது, இறைவர்க்களித்த இடத்தை வலியுறுத்தும்.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கணம் இறைவர்க்களித்த இடம், சங்கத் தொகை நூல்களில் பரிபாடலில் திருமால், செவ்வேள் பாடல்களிலும், பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையிலும், தொகை நூல்களின் முன்னொட்டாகி இணைந்த கடவுள் வாழ்த்துகளிலும் வளர்ச்சி கொண்டது. ஆயின், சமயம் என்ற சிந்தனை ஒருவேளை காப்பிய காலம் வரை கருவாகவில்லை போலும் என எண்ண வேண்டியுள்ளது.

சிலம்பு முதலான தமிழ்க்காப்பியங்களைப் பார்க்கும்போது, சமயக் கண்ணோட்டத்தில் இருநிலைகள் புலப்படுகின்றன. ஒன்று, இறை-சமயச் செய்திகள் தருதல்; மற்றொன்று சமயக் கோட்பாடுகளை நிறுவுதல். இப் பின்வகையில் பாத்திரங்களைப் பயன்கொண்டு காப்பியப் புலவர் கருத்துகளை நிறுவுவதில் இரு அணுகுமுறை புலப்படுகின்றது. ஒன்று வலியுறுத்தி அமைதல்; மற்றொன்று வாதிட்டு நிலைநிறுத்தல்.

தமிழ்க் காப்பியங்களைப் பார்க்கும்போது இந்நிலையில் ஒரு சுவையான உண்மை வெளிப்படுகின்றது. சமய வலியுறுத்தற்கும் வாதுக்கும் பெண்பாத்திரங்கள் பயன்கொள்ளப்பெறுகின்றன என்பது அது.

ஏன் மகளிர் இப்பணிக்குப் பயன்படுத்தப் பெற்றனர்? ஆண் பாத்திரம் இதற்குக் கையாளப்பட்டதா இல்லையா? போட்டியாக, அறைகூவலாகச் சமயச் சொற்போர், சின்னம்/குறியுடன் அமைகின்றதா? பௌத்தமும் சமணமும் பெண்ணைச் சமயவாதியாகக் காட்டியது ஏன்?பிற மதங்கள் அவ்வாறு காட்டுகின்றனவா? வாதி - பிரதிவாதி என வரும்போது இருநிலையிலும் ஆண், பெண் காட்டப்பெறினும் அவருள் வென்றவராக ஏன் பெண்டிரே காட்டப்பெறுகின்றனர்? இச்சமய வாதியான பெண்டிரே ஏன் காப்பியத் தலைமை மாந்தர் ஆயினர்? இத்தகு பெண்டிராலே அவ்வக் காப்பியம் தலைப்புப் பெயர் பெற்றதும் ஏன்? இவ் வாதிடும் தன்மை பெண்மையா - பெண்ணின் உரிமையா? பெண்மையில் ஆண்மையா? கல்வித் திறனும் தருக்க வாத ஆற்றலும் ஒரு காலகட்டத்தில் பெண்ணுக்கு இருந்தது எனக் காட்டும் இவை தரவுகள் - சான்றுகள் எனலாமா? இவை தமிழ் மரபுக்கு ஏற்புடையனவா? ஒவ்வாதனவா? இங்குத் தோன்றியனவா, பிறபுலத் தாக்கம் காட்டுவனவா? இவை ஒரு காலகட்டத்திற்குப் பின் தொடர்ந்தனவா? - நின்றுவிட்டனவா? தன் சமயம் - பிற (ர்) சமயம் எனும் வேறுபாடும்; பிற சமய வெறுப்பு - ஒறுப்பு - மறுப்பு - வாதிட்டு வெல்லல் எனும் படிநிலைகளும் காப்பியகால வளர்ச்சியில் ஒன்றன்பின் ஒன்றாகப் புலப்படுத்தப்படுகின்றனவா? காப்பியத்தில் மட்டுமின்றிப் பிற இலக்கியத்திலும் சமயவாதம் தொடர்கின்றதா? இவ்வாறு பல கேள்விகள் எழத் தமிழ்க்காப்பியமும், அதன் கதைக் கூறும், சமயச் செய்தியும், பாத்திரங்களும், பிற இலக்கியமும் காரணமாய் அமைகின்றன. இவற்றில் பல நிறுவப்படவும், சில கருதுகோளாய் நிற்கவும் வாய்ப்பு உண்டு.

## வாதிடுதல்

கருத்து மறுப்பு, சமய மறுப்பாக முளைவிட்ட தோற்றத்தைச் சிலம்பின் மாங்காட்டு மறையோன் - கவுந்தி உரையாடல் காட்டுகின்றது. தென்னவனை வாழ்த்தி வருகின்ற மறையவன் முதலில் திருமாலின் கிடந்த - நின்ற சிறப்பைக் கோவலன் வினாவிற்கு விடையளிக்கும்போது உட்படுத்துகின்றான்; தொடர்ந்து மதுரைப் பெருவழி பற்றிப் பதில் கூறும்போது, திருமால் குன்றப் பிலவழியை விரிக்கின்றான் (சிலம்பு.11.87-140). அவ் வழியிற் செல்லுதலை மறுக்கும் கவுந்தியின் சிறு உரை, தன் நெறி வலியுறுத்தலாகவும் அமைகின்றது.

"மாமறை யோன்வாய் வழித்திறங் கேட்ட
காவுந்தி யையையோர் கட்டுரை சொல்லும்;
'நலம்புரி கொள்கை நான்மறை யாள!
பிலம்புக வேண்டும் பெற்றியீங் கில்லை;
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின் விளங்கக் காணாய்;
இறந்த பிறப்பி னெய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணா யோநீ;
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள்
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்களு நீணெறிப் படர்குதும்'
என்றம் மறயோற் கிசைமொழி யுணர்த்தி" **(11.150-162)**

என்பதால், கருத்து மறுப்பாக அமையினும், இசைவுடையதாக அமைந்து, எள்ளல் வெம்மை போன்றன வெளிப்படாது இக்கூற்றுப் பொருந்துகின்றது.

சிலம்பில் சில அடிகளில் தென்பட்ட இக்கருத்து மறுப்புப் பாங்கு, மணிமேகலையில் இன்னும் விரிகின்றது. சிலம்பில் அடுத்தடுத்து வைக்கப்பட்ட இருவர் சிறு உரையாடல்கள் சமய மறுப்பைத் தர, மணிமேகலையில் இது, உள்ளுறுத்தப்பெற்றும், அகற்றி வைக்கப்பட்டும் காணப்படுகின்றது. 27-வது 'சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதை', அளவை வாதி முதல் பூதவாதி யீறாகவுள்ளோர் தம் கருத்தை மணிமேகலை கேட்டறிவதாக அமைகின்றது; ஈற்றில், அவள் சமய மறுப்பு நோக்கமில்லை எனக் கூறினும், எள்ளி - நக்கு - எதிர்க்கேள்வி கேட்டு, விடையில் நிறைவடையாமையும் அமைகின்றது.

"...... எல்லா மார்க்கமும் கேட்டு
நன்றல வாயினும் நான்மாறுரைக்கிலேன்;
'பிறந்த முற்பிறப்பை யெய்தப் பெறுதலின்
அறிந்தோ ருண்டோ' வென்று நக்கிடுதலும்
..... ...... ..... ...... ......... .......
..... 'மெய்யுணர் வின்றி மெய்ப்பொரு ளுணர்வரிய
ஐய மல்லதிது சொல்லப் பெறா' யென
உள்வரிக் கோலமோ டுன்னிய பொருளுரைத்து
ஐவகை சமயமு மறிந்தன ளாங்கென்" **(27.277...289)**

மேலும், 29-வது 'தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை'யில், அவள் அறவணவடிகளிடம், 'ஐவகைச் சமயமுஞ் செவ்வி தன்மையிற் சிந்தையிற் வைத்திலேன்' (29.43-44) எனப் படர்க்கையில் மறுத்தலும் காணப்படுகின்றது.

கருத்து மறுப்பு இருப்பினும் காழ்ப்புப் புலப்படாத, இவ்விரு காப்பியச் சூழலுக்கு வேறாக, பிற சமய வெறுப்பு, ஒறுப்பாகவும் வாதிட்டு வெல்லலாகவும் உருவாகுதலைக் குண்டலகேசி, நீலகேசி காட்டுகின்றன. குண்டலகேசி முழுமையாகக் கிடைக்காதபோதும் நீலகேசியின் கதையும் கருத்தும், குண்டலகேசி முதலில் எழுந்தது-சமண மறுப்புக் கூறுவது என்பதால் பின்னது அதன் மறுப்பு நூலாக எழுந்து பௌத்த மறுப்புத் தருவது என்பதைப் புரிந்து பொருத்திக் கொள்ள உதவுகின்றன. சமய எதிர்ப்பு, எதிர்நூல் உருவாக்குவதையும் இங்குக் காணலாம்.

"குண்டலகேசி என்பது பௌத்தமதச் சார்பு பற்றி
அம்மதத்திற்குப் பெரும் பகையாக விருந்த
ஆருகத சமயக் கொள்கைகளைக் குற்றங் கூறி
அவ்வாருகத மதத்தின் இறுமாப்பை யடக்க
வெழுந்த வொரு சொற்போர் நூலே"

எனப் பொ.வே. சோமசுந்தரன் எடுத்துக் கூறுவார் (வளையாபதி, குண்டலகேசி, கழகம், 1970, ப.80). மேலும், நீலகேசிக் காப்பியத்தின் இரண்டாவது பகுதியான 'குண்டலகேசி வாதச் சருக்கம்', குண்டலகேசியை நீலகேசி வாதிட்டு வென்றதை நிறுவி மற்றுமொரு சொற்போர் நூல்நிலை காட்டுகின்றது.

குண்டலகேசி நூல் முழுமையாகப் பெறப்படாமையால் அவள் அருக சமயத்தை, நாதகுத்தனாரிடம் வாதிட்டு மறுத்தலுடன் அமைந்தாளா, அன்றி இன்னும் பல சமயத்தினரை - சமயத்தை மறுத்தாளா என்பது அத்துணை தெளிவுபடவில்லை. எனினும்,

நீலகேசிக் காப்பியம் வாயிலாக, வைதிகம் முதலிய பல்வேறு சமயக் கணக்கரோடும் குண்டலகேசி வாதிட்டு வென்றமை குறிப்பாகப் புலப்படுகின்றது.

> "வேதியரை முதலாக வெலப்பட்டா ரிவரிவரென்
> றோதியாங் கவையவைதா மிலையிலையென் றுரைப்பக்
> கேட்டு (278)

என நீலகேசிக்கு மொக்கலன் கூறுவதாக இச்செய்தி வருகின்றது.

புத்தமதம் முதல் பூதவாதம் ஈறாக ஆறு சமய மறுப்பாக இது நீலகேசியில் பெருகியுள்ளது. அன்றியும் குண்டலகேசி வாதிட்ட புத்தமத மறுப்பே, நீலகேசியின் முதன்மை நோக்கமாகி நான்கு சருக்கங்களில் விரிந்தது (குண்டலகேசி வாதச் சருக்கம்; அருக்க சந்திர வாதச் சருக்கம், மொக்கல வாதச் சருக்கம்; புத்த வாதச் சருக்கம்).

கூறிய கருத்தை மறுத்துக் குற்றங்காட்டலும், வினாவிற்குப் பதிலாகி வந்த விடையின்மீது மேலும் கேள்வி தொடுத்துக் கருத்தழித்தலும், எள்ளி - நகைச் சுவைபடக் குற்றங் கூறி மறுத்தலும் நீலகேசியின் வாதநிலையாகக் காணப்படுகின்றன. மணிமேகலையில் 'நக்கு' என வந்த எள்ளல் குறிப்பு இங்குப் பன்னிலையிலும் பெருகியது குறிப்பிடத்தக்கது.

> "பழுவரலொன் றிலன்றாயைப் பழுப்பறித்தான்
> தலைவனிவள்
> கருவரைமேற் றன்கணவன் காலனையுங் கவிழ்த்திட்டாள்
> இருவரையும் போல்வாரிவ் விருநிலத்தின் மேலெங்கும்
> பெருவழியார் பேரருளார் பிறர்யாரே என நக்காள்"
> (192)

எனக் குண்டலகேசியை எள்ளல்போல், வைசேடிகனையும் எள்ளுகின்றாள்.

> "....... சிக்கென வேற்றுமை தீர்ப்பி நீயென
> நக்கன 'ளனியனோ நயவ' னென்னவே" (816)

குண்டலகேசிக் காப்பியத்தில், பல சமயத்தினரை வாதிட்டு வென்று வாகை சூடியவளாகக் குண்டலகேசியும்; நீலகேசிக் காப்பியத்தில் அவ்வாறே சிறந்தவளாக நீலகேசியும் அமைதல், மேலும் சில கண்ணோட்டங்களில் அணுகத் தக்கது.

## பார்ப்பன வாகை

சிலப்பதிகாரம், பராசரனின் வெற்றியில் 'பார்ப்பன வாகை'யைக் காட்டுவது (23.61-72) புறப்பொருள் வெண்பாமாலையில் (163) இலக்கணமாக்கப்பட்டுள்ளது; ஆயின் இதுபோல் 'சமய வென்றி' புலப்பட்டிலது. தொல்காப்பியப் பொருளதிகார உரையில் (74), இளம்பூரணர் வாகை வகையாகச் 'சொல்லான் வேறலும்' எனச் 'சொல் வென்றி'யையும், நச்சினார்க்கினியர்,

> "வேதத்துக்கு மாறுபடுவாரை மறுக்கும் உறழ்ச்சி நூலும்,
> அவரவர் அதற்கு மாறுபடக் கூறும் நூல்களும்....."

என 'மறுப்பு நூல்'களையும் கூறுவது, இது ஒரு காலகட்டத்து நிகழ்ச்சி என்பதை அறிய உதவுகின்றன. ஆயினும், இவை மகளிர்க்கு உரியனவோ என்பது ஐயமறத் தெளிதல் கடினமாக உள்ளது.

## பெண் - வாதத்திறமை

'பெண்ணின் பெருமை'யை நுவல வந்த திரு.வி.க. அவர்கள் மைத்ரேயி, கார்க்கி, பாரதி ஆகிய பெண்ணிற் பெருந்தக்கோரைப் பற்றிக் கூறுவது வாதத்திறமை, சொற்போர் வெற்றி, ஆடவர் விவாதிக்கப் பெண் நடுவரானமை என்பனவற்றை விரிவாக விளக்குகின்றது. பொருட் செல்வத்தின் புன்மையையும் அருட்செல்வத்தின் மேன்மையையும் பற்றித் தன் கணவர் மகரிஷி யாக்ஞவல்கியருடன் வாதித்தவர் மைத்ரேயி. கார்க்கி, ஒருபோது ஜனகன் கழகத்தில் யாக்ஞவல்கியருடன் வாதம் புரிந்து 'தர்க்க அரசி' என்ற பெயர் பெற்றவர். சங்கரர்க்கும் மிசிரர்க்கும் நிகழ்ந்த விவாதத்தில் நடுவராக அமைந்தவர் பாரதி (பார்க்க:பெண்ணின் பெருமை, திரு.வி.க. புனித நிலையம், சென்னை. 1973, பக்.32, 33). இந்நிலை நோக்க மகளிர், பிறபுலத்தில் வாதமிட்டவராகக் காட்டப்பெற்றமை தமிழ்க் காப்பியப் புலத்திலும் உட்படலாயிற்று என்பதை உணர்த்தும்.

சொற்றிறமை புலப்படுத்தல், அல்லது வாதப்போர் புரிதல் மகளிர் பாங்கோ எனும் ஐயமும் எழுவது இயல்பு. தொல்காப்பியம் களவியலில் மகளிர் மாண்பாக 'அச்சமும் நாணும் மடனும்' (பொருள்.96) கூறுவது ஐயத்தை மேலும் வலியுறுத்தும். எனினும் அதே நூல் மெய்ப்பாட்டியலில் தலைவன்-தலைவி ஒப்புமையில், 'ஆண்மை' (பொருள்.269) எனக் கூறுவதால் ஆளுமைப் பண்பு

வெளிப்படும் நாவன்மையும் உட்படக்கூடும். இளம்பூரணர், 'ஆண்மையாவது ஆண்மைத் தன்மை அஃதாவது ஆள்வினையுடைமையும் வலிபெயராமையும்' (பொருள்.90, உரை) என்பதும் கருதலாம். மேலும் தொல்காப்பியம், பொருளியலிற்,

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான (பொருள்.206)

என்பதால், பெண்ணுக்கு அறிவு புலப்படுத்தும் சொற்றிறனான இந்நிலை மிகவும் ஏற்புடைத்து என்பது விளங்கும். அன்றியும், இலக்கியப் பெண் பாத்திரங்களின் சொற்றிறம் பற்றிய முழு ஆய்வு அமையும் போது இக்கருதுகோள் மேலும் நிறுவப்படலாம்.

**சமயவாதம்**

சமணம், பௌத்தம் என்பன விட்டு, 'தமிழகச் சமய'ங்கட்குத் திரும்பும்போதும், மகளிர் வாதிடுவோராகக் காட்டப்பட்டனரா எனும் எண்ணம் எழலாம். இறையன்பை நாடி இறையருளில் ஆழ்ந்து உருகிப் பாடிய ஆண்டாளோ, காரைக்காலம்மையாரோ சமயவாதம் புரிந்தவராக ஏன் காட்டப்பட்டிலர்? பெண் சமயவாதியாகும் தொடர்ச்சி இங்கு அறுந்ததோ? எனவும் ஐயம் ஏற்படுகின்றது. இது மேலும் ஆயத்தக்கது.

எனினும், சம்பந்தர் அமணரோடுள்ள கோட்பாட் டெதிர்ப்பில், அனல்வாதம், புனல்வாதம் எனப் பிற வாதநிலை காட்டுவது, இதன் பரிணாமம் அல்லது இன்னொரு பரிமாணம் எனத் தக்கது. பெண்டிர் முன்னின்றவிடத்து ஆடவரும், சொற்போர்க்கு மாறாகச் செயல் நிலையில் மீவியல் பொருந்தலும் ஆகி இது மாறுபடுகின்றது.

மேலும், சமயச் சொற்போரும், செயலளவு எதிர்ப்பும் மீண்டும் நூல் நிலைக்குச் செல்வதை, மெய்கண்ட சாத்திரம் பதினான்கில் உட்படும் அருணந்தி சிவாசாரியாரின் சிவஞான சித்தியாரும், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரின் சங்கற்ப நிராகரணமும் காட்டுகின்றன (பார்க்க : மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, கழகம், பகுதி-1,2, 1969). இங்குக் காப்பிய அமைப்போ, கதை கூறுதலோ, பெண் - சமயவாதியோ இல்லாமல், சமயக் கோட்பாடுகளைத் தொகுத்துக் கூறலும், தொடர்ந்து மறுத்தலும் அமைகின்றன. சித்தியாரின் பரபக்கம் உலகாயதன் முதல் பாஞ்சராத்திரி வரை பதினான்கு சமயவாதிகளின் கொள்கைகளைக்

கூறி மறுத்துரைக்க, நிராகரணம், மாயாவாத முதல் சைவ வாதம் வரை ஒன்பது சமய வாதங்களைக் கூறி மறுக்கிறது. இப் பின்நூல், சங்கிலித் தொடராக ஒருவரை ஒருவர் மறுத்துத் தம் கொள்கை கூற, இறுதியில் சைவ வாதியைச் 'சித்தாந்தியார்' மறுப்பதாக அமைவது வேறுபாடு.

இக்கால கட்டத்திற்குப் பின்பு, வெளிநாட்டுச் சமயங்கள் உட்புகுந்தவிடத்தும் மறுப்பும் எதிர்ப்பும் நூலாகியுள்ளன. அன்றியும் சமயத்திற்கு மட்டுமன்றி, பிற கருத்து மறுப்புக்கும் 'மறுப்பு', 'கண்டனம்', 'கண்டனக் கண்டனம்', 'மறுப்பின் மறுப்பு' (பார்க்க : சிவஞான முனிவரின் பிள்ளைத் தமிழ் நூல்கள், சு. திருநாவுக்கரசு, உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, 1989, ப.12) போன்ற பெயரின் பல ஆக்கங்கள் உருவாகியுள்ளன.

## போட்டிக் கொடி

பல்துறை வாகையும், போர் வெற்றியும், பிற போட்டிகளும் கொடிச் (flag) சின்னங்களால் புலப்படுத்தப்படல் கூடும். சமயப் போட்டிக் கொடிகள் அல்லது சமயச் சொற்போர்க் கொடிகள் பற்றிய பழைய தெளிந்த குறிப்பு உளவா என்பது ஐயம். எனினும், சங்க இலக்கியம், கல்வித்துறை, கலைத்துறைப் போட்டி கருதி எழுப்பிய கொடிகளைக் குறிப்பிடுகின்றது (பட்டினப்பாலை, 160-171; பரிபாடல், 9.72-80.) இதன் தொடர்ச்சிபோல, சொற்போர், நாவன்மையைப் புலப்படுத்துவதாற் போலும், 'நாவல்' மரக் கிளையைப் போட்டிக் குறியாய்-சின்னமாய்-நடும் பாங்கினை நீலகேசிக் காப்பியம் (முதலில்) காட்டியுள்ளது.

"கட்டுரை பல சொல்லி, காவல் நெடுங்கடை நாவலை
முன்
னட் டிவ ணகரிடை நகைசெய்து புகுந்த விந் நன்னுதல்...."
(228)

என இது அமைகின்றது. அத்துடன், அவளைக் காப்பியம், 'சம்பு விரதி' (286) எனவே குறிப்பிடுகின்றது (சம்பு : நாவல் மரம்). மேலும், இக்காப்பியம், சாங்கியனை, அறை கூவலுக்கு அறிகுறியான 'கொடி'யுடன் காட்டுவது (730), நாவல் கிளையும், போட்டிக் கொடியும் தொடர்புறுவதைச் சமயவாத நிலையிலும் உணர வாய்ப்புத் தருகின்றது.

மேற்கண்ட பல செய்திகள் 'சமயவாதம்' என்பதில், பெண் பெற்ற இடத்தைப் புலப்படுத்துகின்றன. சமயக் கோட்பாடுகளைப்

பிறர் சொல்ல, பெண் செவிமடுத்தது, அவற்றை எள்ளி, நகையாடி, 'தர்க்கித்து' எதிர்த்து மறுத்தது; அறை கூவல் விடுத்தவரை எதிர்கண்டது, தான் போட்டிக்கழைத்து வென்றது; பலரை மேற்கொண்டது, அவரைத் தன்னெறிப்படுத்தியது - எனப் பலநிலைகள் புலப்படுகின்றன. மேலும், சமயப்போட்டி, சொல்வன்மை காட்டி வாதிட்டு வெல்லும் மகளிரைக் காப்பியத்தில் படைத்து, முதன்மை மாந்தராகவும், தலைப்புத் தரும் பாத்திரமாகவும் நிலைபெறச் செய்கின்றது. காப்பியம் வழியாக, இறையிலிச் சமயங்களான சமணமும் பௌத்தமும் தந்த இந்நிலை, இறைச்சமய தோத்திர - சாத்திர இலக்கியங்களில் மற்றொரு பரிமாணம் காட்டுகின்றது. தொடர்ந்து, சமயச் சொற்போர், பிற பல்வகைக் கருத்து மறுக்கும் எதிர்நூல் ஆக்கமாகிப் பயிற்சி கொள்கின்றது.

சொற்போர், சமயவாதம், எதிர்நூல்/மறுப்பு நூல் பற்றிய முழுமையான தரவுகள் இலக்கிய அடிப்படையிலும், பிற பல கள அடிப்படையிலும் தேரப்பெறும்போது, இன்னும் பல எண்ணங்கள் தெளிவுபடவும், கருத்துகள் நிறுவப்படவும் வாய்ப்பு அமையும்.

# முதுமை

## அறிதல்

அறிவியலால் வெல்லப்படாத இயற்கை நியதிகளுள் முதுமையும் ஒன்று. இறப்புக்கு ஒரு முன்படியாக அமையக்கூடிய இம் முதுமை, பன்முக நிலையில் அணுகிக் கற்கத் தக்கது. தொடர்புடைப் பரிமாணத்தில் முதியோர் என்பதனையும் இணைத்துக் கருதலாம்.

இலக்கண நிலையில் இதன் சொல்லும் பொருளும் கருதத் தக்கன.

இலக்கிய நிலையில் இதன் இடமும் இயல்பும் விளக்கம் காணற்குரியன. முதுசொல், முதுமொழி, முதுமொழிக்காஞ்சி போன்ற நிலையும் கருதக் கூடியன.

உளவியல் நிலையில் முதியோர் உளவியல் பற்றிய தனித்த சிந்தனைகள் உளவா என நினைக்கலாம்.

உடலியல் நிலையில் முதுமையால் ஏற்படும் மாற்றமும் சிதைவும் குறைபாடும், மருத்துவக் கருத்தும் அறிய முயலலாம்.

சமுதாயப் பாங்கில் இதற்குரிய நிலை, இவர்க்குரிய தகுதி ஆகியன தேரக் கூடியன.

சமய-தத்துவச் சார்பில் இந்நிலை பற்றிய தனித்த கருத்து உண்டா என்பதும் அணுகப்பெறலாம்.

இன்னும் இவை போன்ற பிற பான்மையினவும் கொள்ள இப் பொருள் இடம் தரும் தன்மையினது.

அகராதி, பார்வை நூல்கள், பொது எண்ணங்கள், இலக்கண இலக்கியத் தரவுகள் சிலவற்றின் துணையுடன் இங்கு இப்பொருண்மை அணுகப்படுதல் இக்கல்வியின் தொடக்கநிலை மட்டுமாம்.

## ஆய்தல்

இப்பொருளுள் புகுமிடத்துச் சில எண்ணங்கள் - கேள்விகள் எழுகின்றன.

முதுமை என்றால் என்ன? அது வயதடிப்படையினதா? வயது எனும்போது கீழ்-மேல் வரம்பு உண்டா? மனிதனுக்கு மட்டுமா அல்லது பிற உயிர் - உயிரிலி இனங்கட்கும் முதுமை கருதப்படுமா? இனத்தினர்க்கும் இடத்தினர்க்கும் ஏற்ப, முதுமையடைதலில் வயது வேறுபாடு அமையுமா? வயது ஏறினாலும், உள-உடல் நிலைகளால் 'முதுமை தோன்றாமை' உண்டா?

மூப்பு விரும்பப்படுகின்றதா வெறுக்கப்படுகிறதா? முதுமை சிறப்பா இழிவா? போற்றுதலுக்குரியதா பழித்தலுக்காளாவதா? பயனுடையதா பயனற்றதா? இவ் இரு நிலைகளுமே உண்டா - ஏற்புடையதா? எவ்வெப்போது காணப்படுகிறது?

முதுமை உடல் நிலையினது மட்டுமா? அன்றி உயிர் - உள - மன நிலையினது எனலாமா? இத்தகு பிறநிலைகளில் கருதத்தக்க கூறுகள் எவையெவை? ஆண்-பெண் முதுமை தனித்த சிந்தனைக்கு உரியதா?

நரை-திரை-மூப்பு என்பன படிநிலைகளா? 'மூப்பு-பிணி-சாக்காடு' என்பதைத் தொடர் சங்கிலியாகக் கருதலாமா? ஊனமும் முதுமையும், பிணியும் முதுமையும் என இணைத்துக் காணல் தகுமா?

சமுதாயம் முதியவர்க்குத் தரும் இடம் என்ன? முதியவர்க்குக் கொடுக்கப்படும் சமூக மதிப்பென்ன? சமுதாயம் முதியவர்க்குப் பாதுகாப்புத் தருகிறதா-முதியவரைப் பேணுகிறதா - புறக்கணிக்கிறதா? புறந்தள்ளப்படுதலும் ஒதுக்கப்படுதலும் எதை உணர்த்துகின்றன? முதியோர் இல்லங்கள் எதற்குச் சான்று?

நரைமூதாளர் முன்னின்று நிகழ்த்தும் செயற்பாடுகள் - சடங்குகள் - நிகழ்ச்சிகள் சமூகத்தில் உண்டா? கல்வி, அறிவுரை, ஆலோசனை போன்ற சூழல்களில் முதியவர்க்கா அறிஞர்க்கா - அதாவது வயதுக்கா அறிவுக்கா முதன்மை இடம்? ஏன்? 'சிறுமுது குறைவி' என்பதால் இளமையில் அறிவு அருமை எனவும், முதுமையும் அறிவும் இணைவுடையனவாதல் இயல்பும் பொதுவுமாம் எனவும் கருதலாமா? அறிவுக்கும் முதுமைக்கும், கல்விக்கும் வயதுக்கும் என்ன தொடர்பு?

தமிழ் இலக்கியத்தில் பாத்திரங்களாக முதியவர் வருமிடம் தனித்த சிந்தனை வழங்குமா? முதியவர்க்குரிய ஆடை, அணி, உணவு, கடமை, செயல், தொழில், பண்பு, உணர்வு.... போன்றன இலக்கிய விளக்கம் பெறுகின்றனவா? வயது முதுமை, முதிய உருவம்,

முதியவர் வேடம் என்பனவற்றின் இடம் என்ன? இலக்கியப் புனைகூறில் முதுமை, தனித்து - சிறப்பிடம் வகிக்கிறதா?

இலக்கியம் தவிரப் பிற துறைகள் - ஓவியம், சிற்பம், நிகழ் கலைகள், வரலாறு, கல்வெட்டு, செப்பேடு, அரசியல் ..... ஆகியவற்றின் தரவுகள் இக்கல்விக்கு உதவுமாறு எங்ஙனம்?

முதுமை தவிர்க்க - அல்லது நீக்க வழிகள் (காயகல்பம்) பற்றிய சிந்தனை எதனை உணர்த்துகின்றது? நிலையாமை அறிவுறுத்த முதுமை பயன்படுதல், அவ் அறிவுரையே முதுமை எனப்படுதல் - ஆகிய இணைவும் சிந்திக்கத்தக்கது. இப்பல கேள்விகளும், பிரிந்து நின்று தனித்தனியே யன்றி, இணைத்துக் கொண்டு சிந்தித்தற்கேற்றன.

**சொல்**

தமிழ்ப் பேரகராதி, முதுமை எனும் சொற்கு, 1. பழமை. 2. மூப்பு. 3. முதுமொழி. 4. முற்றின தன்மை. 5. முதுகாஞ்சி எனப் பொருள் தருகின்றது (தொகுதி 6, ப.3266). இச்சொல்லின் முதல் வருகை தொல்காப்பியத்தில் அமைகின்றது. ஐந்தாம், ஆறாம் வேற்றுமைப் பொருளில் 'முதுமை' சுட்டப்பெறுகின்றது (தொல்.சொல். 2, வேற்.17,19). புறத்திணையில் (19), 'கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்' என்பதில் முதுகாஞ்சித்துறை அமைகின்றது. களவியாக்கமும் (57), மெய்ப்பாட்டியலும் (6) மூப்பு என்ற சொல்லை ஆள்கின்றன. 'முரஞ்சல் முதிர்வே' எனும் உரியியல் நூற்பாவும் (35), முதுசொல், முதுமொழி என வரும் செய்யுளியல் செய்திகளும் (75,158,170) தொடர்புடை நிலையில் இங்கு இணைத்துக் காணத்தக்கன.

இவற்றை நோக்க, முதிர், முதுமை, மூப்பு எனும் சொற்கள் 'முதுமை' தொடர்பாகக் கருதப்படலாம் என்பது புலப்படுகின்றது.

சான்று:

மனை முதிர் மகளிரொடு குரவை தூங்கும் (அகம்.232.10)

பொது செய் கம்பலை முதுசெம் பெண்டிர் (அகம்.86.9)

எம், முதுமை யெள்ள லஃ்தமைகுந் தில்ல (அகம்.6.14,15)

நாளது செலவும் மூப்பினது வரவும் (அகம்.353.4)

மேலும் இவற்றின் அடியாக உருவாகும் முதி(ய), மூ(த்த), முற்(றிய)[1] என்பனவும் முதுமை குறிக்கலாம்.

சான்று :

> இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி (பெரும்.268)
>
> மாக்கள், மூத்த யாக்கையொடு பிணி இன்று கழிய
> (பதிற்.22.9,10)

தொல்காப்பியம் முதல், தற்காலப் படைப்புகள் வரை நிகண்டு, அகராதி உட்பட - இப் பொருண்மையின் சொற்களும் வரவும் திரட்டப்பட்டால் இத்துறையின் பரப்பை அறிய இயலலாம்.[2] மரபியலில் இளமை தொடர்பான சொற்களைக் கூறிய தொல்காப்பியம் முதுமைச் சொற்களைத் தராமை தனித்த சிந்தனைக்குரியது. அன்றியும், இன்று மிகுதியாகப் பயன்படும் 'கிழ' பண்டு பெரும்பான்மை 'தலைமை' சுட்டலும் அருகியே முதுமை குறித்தலும் எண்ணத்தக்கது.

> கிழவர் கிழவியர் என்னாது ஏழ்காறும்
> மழ ஈன்று மல்லற் கேள் மன்னுக என்மாரும்
> (பரி.11.120-1)

எனும் பரிபாடற் பகுதி அருகிக் குறிப்புத் தந்தது.

### விளக்கம்

இளமைக்கு வேறானது - மாறானது முதுமை; ஆனால் இளமையைத் தொடர்ந்து - இளமை முடிந்து தோன்றுவது. இளமையும் முதுமையும் அடுத்தடுத்து வைக்கப்பெறுதலும் (அகம்.30.4, 348.12; பரி.10.19; மணி.6.99),

> ..... காளையாந் தன்மை செத்துங் காமுறு மிளமை செத்தும்
> மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரு மூப்புமாகி.....
> (குண்டல.9)

---

1. பார்க்க : பிங்கலம் 1949 : முதுமை மூப்பு முரஞ்சுதன் முற்றுதல்;
   1950 : விளைவும் சாம்பலும் விதந்து கொளப்படுமே.
   3973 : முற்றுதற் பெயரும் பழமையும் முதுமை.
   (கழகப் பதிப்பு, 1968)
2. தமிழ்ப் பேரகராதியில் சுமார் 150 'மூப்புச் சொற்கள்' கிடைக்கின்றன. பார்க்க : இணைப்பு.

எனத் தொடர்பு தரப்படுதலும் இதனை உணர்த்தும். இவ்விருநிலையின் வகுப்புக் கோட்டை வயதடிப்படையில் சுட்டுமிடத்துக் கருத்து வேறுபாடுகள் புலப்படுகின்றன. நாற்பது வயதில் முதுமை தொடங்குகிறது என்பது மருத்துவக் கருத்து (சென்னைத் தொலைக்காட்சி, உச்சி முதல் பாதம் வரை: 13.3.90). தமிழ்ப் பேரகராதி, 'முதுமகன்' என்பதை 'முப்பதுக்கு மேற்பட்ட பிராயமுள்ளவன்' எனவும், மூத்தோன் என்பதை 48 வயதுக்கு மேல் 64 வயதுக்குட்பட்ட மனிதன் எனவும், முதுபெண்டு என்பதை 32 முதல் 40 வயதுக்குட்பட்ட 'பேரிளம்பெண்' எனவும், விருத்தை - 55 பிராயங் கடந்தவள் எனவும் ஆக்குவது பாட்டியல் சிந்தனையை ஒரளவு ஒட்டியதாகும்.[3] ஆண்டடிப்படையில், காலக்கழிவடிப்படையில் முதுமை கருதப்படலாம் என்பதனை,

நாளது செலவும் மூப்பினது வரவும் (அகம்.353.4)

வாழு நாளோ டியாண்டு பல வுண்மையின்
....... .......... .......... .......... .........
முன்றிற் போகா முதிர்வினள் யாயும் (புறம்.159)

யாண்டு பலவாக நரையில வாகுதல் .... (புறம்.191)

ஆகிய பாடற் சூழல் உணர்த்தும். மேலும், இளமைக்கு அடுத்தபடியாக அமைவது மூப்பு; தொடர்வது மரணம் - என்ற கருத்தும் கொள்ள இடனமையும்.

முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்
வாழ்நாள் வகை அளவு அறிஞரும் இல்லை (நற்.314)

மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழ விறல் தாயம் ..... (புறம்.75)

கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓராஅங்கு (கலி.12.17)

என்பன சான்று. மனித வாணாளை நான்காகப் பகுக்குமிடத்து வார்த்தக மெனவும், ஐந்தாகப் பகுக்கும்போது முதியோன் எனவும், ஆறாகக் காணும்போது விருத்தம் எனவும், ஏழாகக் கணிக்கும்போது முதுமகன் எனவும் அகராதி முதலியன சுட்டுவது, முதுமை பற்றியும் பலவகையான கருத்துகள் இருந்ததைக் காட்டலாம். எனினும் அனைத்துப் பட்டியலிலும் இது இறுதியிடம் பெறல் ஒப்புமைக் கூறு ஆகும்.

---

3. பார்க்க : பன்னிருபாட்டியல் : 135: பொய்கையார், அவிநயனார் மேற்கோட் செய்யுட்கள் (கழகம், 1970).

## தோற்றம்

காட்சிப் புலனுக்கு முதுமை தென்படுதல் 'நரை'யில் தொடங்குகின்றது; இதையே முதுமையின் ஆரம்பமாகவும் கருதுவர் (உச்சி முதல் பாதம் வரை, மு.சு). 'நரைகூடிக் கிழப்பருவ மெய்தி' (பாரதி) என முதுமையை நரையுடன் சுட்டுவது இலக்கிய இயல்புமாகும். முதியரிலும், நரையின் மிகுதி, குறைவு பற்றி இரு நிலைகள் அமைவதைப் பரிபாடல், 'முதியர்..... விரவு நரையோரும், வெறு நரையோரும்' (10.19, 22) என்பதால் குறிப்பிடும். நரைமூதாளர் (புறம்.52, அகம்.377), நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும் (நற்.10) எனப் பொதுவாகவும்; நரை வெண் கூந்தல் (புறம்.276), மூத்தோரன்ன வெண்தலைப் புணரி (அகம்.90) என நிறம் சுட்டியும்;

நூல் விரித்தன்ன கதுப்பினள் .... (புறம்.159)

மனவுக் கோப்பன்ன நல் நெடுங் கூந்தல்... (குறு.23)

மீனுண் கொக்கின் றூவி யன்ன
வான் நரைக் கூந்தல் ...... (புறம்.277)

கயன் முள் என்ன நரை ..... (புறம்.195)

எனப் பல்வேறுவமை சுட்டியும் இரு பாலார்க்கும் வருகின்றது.

தோல், தசைகளில் ஏற்படும் சுருக்கம், தொய்வு, தளர்வு ஆகியன முதுமை என்பதில் விளக்கமுறும் மற்றொரு கூறாகும். 'திரை' என இது சுட்டப்பெறுதல் அமைகின்றது : - 'திரை கவுள்' (புறம்.195). ஆடவரைவிட பெண்டிர்க்கு இவ்வுடற்றளர்வு காட்டப்படுவது சிந்திக்கத்தக்கது.[4]

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள்..... (புறம்.278)

நடை தளர்தல், தனித்து நடக்க இயலாமை, ஊன்றுகோல் தேவைப்படல் என்பன முதுமையின் மற்றொரு வெளிப்பாடு. கழிந்த இளமைக்காக இரங்கும்-கையாறுரைக்கும் பாடல் 'தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்'றமையை (புறம்.243) அளிக்கின்றது. பெருஞ்சித்திரனாரின் தாயார்,

---

4. நற்றிணை. 10; புறநானூறு 276; மருதச் சூழலில், குழந்தை பெற்ற தலைவி தன்னை முதுமையுற்றவளாகச் சுட்டல் அமையும்; அகம்.6.15; நற்.370.6; குறு.181.7.

> கோல் காலாகக் குறும்பல வொதுங்கி.....
> ..... முன்றிற் போகா முதிர்வினள்...... (புறம்.159)

எனச் சித்திரிக்கப் பெறுகின்றாள். இவற்றுடன் 'வளைந்த யாக்கை'யும் உடைய மறையோனைச் சிலப்பதிகாரம் (15.45) காட்டுகிறது. கூன் போன்ற ஊனம், முதுமைச் சூழலிலும் ஏற்படும் பாங்கு இங்குப் புலப்படுகின்றது.

முதுமைத் தோற்றத்தின் இந்தக் கூறுகளுடன், பேச்சு, பார்வை,[5] கேட்டல் திறன் ஆகியனவற்றிலும் குறிப்பிட்ட குறைபாடு அமைதல் இலக்கியத்தில் ஓரளவு இடம்பெறுகின்றது. 'இருமிடை மிடைந்த சில சொல் பெருமூதாளரேம்' (புறம்.243) என உரை நிலையும், 'கண் துயின்று (மறைந்து) முன்றிற் போகா முதிர்வினள்' (புறம்.159) எனக் கட்புலக்குறைவும் சுட்டுப்பெறுகின்றன. சுரமஞ்சரியின் தோழியர் கூற்று முதிய வேடமிட்டு வந்த சீவகனைக் 'கழிய மூப்பிற் செவி கேளார்' (2013) எனத் தருவது இங்கு இணைத்துக் கருதத் தக்கது.[6]

முதுமையின் மற்றிரு நிலைகளாக நோயும், ஊனமும் காட்டப்படல் ஓரளவு அருகியேனும் அமைகின்றது. 'இருமிடை (இருமல்) மிடைந்து' (புறம்.243) என முன்சுட்டிய இடமும், 'கனைக்கு நெஞ்சும்' (திருவிளை. பரஞ்சோதி.23.20) என 'விருத்த', உருவின் சிவபிரான் காட்டப்படுதலும், 'எய்ப்பென்னை வந்து நலியும் போது' (பெரிய.திரு.4.10.1) என்பதும் பிணி நிலை குறிக்கலாம். கலித்தொகை, 'முடமுதிர் பார்ப்பானை'க் காட்சிப்படுத்தும்போது நோயும் ஊனமும் முதுமையும் இணைந்த பாங்கு தெரிகின்றது.

> திரத் தறைந்த தன் கம்பலும்
> காரக் குறைந்து கறைப்பட்டு வந்து நம்
> சேரியின் போகா முடமுதிர் பார்ப்பான்.... (கலி.65.6-8)

மிகுவயது காரணமாக ஏற்படும் இந்நிலைகள் மருத்துவத்தில் தனித்துறையாகக் கருதிக் கையாளப்படுதல் இங்குக் கருதத் தக்கது.[7]

---

5. பார்க்க : இரா. நிர்மலா, மூப்பில் கண்கள் அடையும் மாற்றம் - ஓர் அறிவியல் பார்வை : ச. அகத்தியலிங்கம், இராம. சுந்தரம், வளர் தமிழில் அறிவியல், தஞ்சை, 1989, பக்.157-162.

6. பல் விழுதல், தலைமுடி உதிர்தல், முகர்ச்சித் திறன் குறைதல்.... எனப் பிறபல பாங்கும் கருதப்படல் கூடும்.

7. Geriatrics-the medical speciality concerned with the diseases of old age. Encyclopedia Americana, American Corporation, NewYork. 1970. Vol.12., p.496.
   The Branch of Science concerned with aging its causes and effects is called gerontology, Ibid. p.563.

## செயல்

முதியோர் பற்றிய குறிப்புகள் இருவேறு காட்சி நல்குகின்றன. முன்கண்ட சில குறிப்புகள் அவர் செயலின்மையைக் காட்ட, பிற சில தரவுகள் அவர் செயலற்ற நிலைக்கு வராமையை உணர்த்துகின்றன. மீன் வேட்டல் தொழிலில் இளையருடன் முதியரும் கிளையுடன் துவன்றி ஈடுபடுதல், யானை தினை வெளவியது எனக் கேட்டுச் சிலை ஆய்ந்து முதியவரும் இளையவரும் கிளையுடன் குழிஇச் செல்லல் ஆகிய காட்சிகளை அகநானூறு தரும் (30, 348); தாபத வாகைத் துறைப் பாடல்கள் (புறம்.251,252) முதுமைக்குரியதாகத் தவத்தைத் தருவதாகத் தெரிகின்றது. உழைப்பும் தவமுமமாகிய செயல்கள் ஒரு பாலாக, பொழுதுபோக்குச் செயல்கள் சிலவும் காட்டப்படுகின்றன. வையையில் புதுநீர்ப் பெருக்கும் நீரணி விழவும் அமைவதில், 'நரையாளர்' பங்கு கொள்கின்றனர் (பரி.10); வல் (சூது) விளையாட்டிலும் ஈடுபட்டுள்ளனர்.

> கொழுங்குடி போகிய பெரும்பாழ் மன்றத்து
> நரைமூதாளர் அதிர் தலை இறக்கி
> கவை மனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய
> (அகம்.377)

> கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்
> பலிகண் மாறிய பாழ்படு பொதியில்
> நரை மூதாளர் நாயிடக் குழிந்த
> வல்லி னல்லகம் (புறம்.52)

பணி இன்மை, ஒய்வு நிலை என்பன இப்பொழுதுபோக்கு வழி உணரப்பெறலாம்.

## முதியோர் பேணல்

செயலாற்ற இயன்ற நிலையிலன்றி, வலுவிழந்த நிலையினராக முதியோர் அமையுமிடத்து அவரைப் பாதுகாத்தல் - புரத்தல் - பேணல் காணப்படுகின்றது. இதனை அறமாக, அரசன் கடமையாகக் கருதியிருக்கலாம்.

செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடும்போது,

> வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
> இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
> தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல் (பதிற்.70)

எனத் தருவதும், மாமூலனார் 'முதியர் பேணிய உதியஞ் சேரல்' (அகம்.233) எனத் தருவதும் முன்னோர், மூதாதையர் - எனவும் அமைதல் கூடும். எனினும், போர்ச் சூழலில் பாதுகாக்கப்படுபவர் பட்டியலில் புறநானூறு (9) உட்படுத்தாத போதும், சிலப்பதிகாரம் நெருப்பிலிருந்து காக்கப்படுவோராக இவரையும் தந்தது.

> பார்ப்பா ரறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர்
> மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு...
>
> (21.53-54)

என இது அமையும். இம் மூத்தோர்க்கு உணவளித்துப் பின்பு தான் உண்ணலை முறையாக மக்கள் கொண்டமையை, ஆசாரக்கோவை உணர்த்துகின்றது (21).

எனினும், மணிமேகலை 'பேணா மாக்கள்' (28.223) எனவும், 'பேணுநர் இல்லோர்' (13.112) எனவும் குறிப்பிடும் இடங்கள் 'அநாதை'களைப் போல ஒருவேளை முதியவரையும் குறித்திருக்கலாமோ என்பது ஐயம்; ஊனமுற்றோரோடு இவர்க்கு அவள் உணவளிக்கின்றாள்.

## பயன் மதிப்பு

புறநானூறு, அறிவுறுத்தற் சூழலில், 'பயனில் மூப்பின் பல் சான்றீரே' (195) எனக் கூறுவது அமையினும், பிறவிடத்துள் முதியோர் பல்வகையான நிகழ்வுகளில் இடம்பெற்றுப் பயனுடைய மாந்தராய் அமைவது புலப்படுகின்றது. அகத்திலும், புறத்திலும்-அரசியலிலும், வாழ்வியலிலும் இவர் தனியிடமும் தனிப்பேறும் கொண்டுள்ளனர் போலும். எனினும், முதுமை மட்டும் போதாது, அறச் சார்பும் வேண்டும் என்பது, 'அறம் சாராதான் மூப்பே போல் அழிதக்காள்' (கலி.38.19) என்பதில் அமையும்.

கபிலர், இரும்பொறையைப் புகழும்போது, 'நின்வயின் முழுது உணர்ந்து ஒழுக்கும் நரைமூதாளனை' (பதிற்.74.23-24)ச் சுட்டுவதும், 'செருக் கண்டு, நரைமூதாளர் கை பிணி விடுத்து' என, 'சமாதானம்' செய்பவரைக் குடவாயிற் கீரத்தனார் காட்டுவதும் (அகம்.366.9-10) ஒரு வகை. திருமணம் பேசலில் முதியோர் முன்நிற்பதும் (குறு.146), திருமண நிகழ்வில் முது செம்பெண்டிர் பங்கேற்பதும் (அகம்.86) பிறிதொரு நிலை. அகப்பாடற்றலைவிக்குத் துணை நிற்கும் செவிலி வயதானவளாக அமைதல்,

> நரை விராவுற்ற நறுமென் கூந்தற்
> செம்முது செவிலியர் பல பாராட்ட.... (அகம்.254)

கட்டும் கழங்குமிட்டுக் குறிகேட்டலும், வெறியாடலும், விரிச்சி கேட்டலும் முதுவேலன், செம்முது பெண்டிருடன் காட்டப்படல்,[8]

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப (முல்லை.10)

.... முது வேலன், கழங்கு மெய்ப்படுத்து... (ஐங்.245)

நெல் நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா.... (புறம்.280)

அன்னை, செம் முது பெண்டிரொடு நெல் முன் நிறீஇ
கட்டின் கேட்கும்..... (நற்.288)

எனப் பிற சூழலும் உள. அடைக்கலப்படுத்த மாதரியான முதுமகள் பயன்படல், குரவையயர்தலிலும் அம் முதுமகள் முன்னிற்றல் (சிலம்பு.15,17) என்பனவும் கருதப்படலாம்.

## மதிப்பும் விருப்பும்

'என்னுடன் முதுமை கூர்; சிறப்பு இனிமேல் தான்; வாழ்வின் இவ் இறுதிக்காக முதற்பகுதி ஆக்கப் பெற்றது; இளமை பாதி மட்டுமே' என்ற ப்ரௌனிங்கின் பாடல்,[9] முதுமையைப் போற்றுகிறது எனவோ, முதுமையுடன் ஒப்புராவகிறது எனவோ கூறலாம். முதுமையை விரும்பத்தக்கதாக ஆக்கும் முயற்சியும் இதில் புலப்படுவதாகத் தோன்றுகின்றது. தமிழ் இத்தகு நிலை காட்டுகிறதா என்பது ஐயம்.[10]

எனினும் பழமையைச் சிறப்பித்தல் என்ற நிலையில் முதுமை உயர்வுடையதாக மதிக்கப்பெற்ற நிலை காணப்பெறுகின்றது; ஆயின் முதிய உருவம் விரும்பப்படவில்லையோ எனும் எண்ணமும் எழுகின்றது.

---

8. முதுவாய்ப் பெண்டிர் (அகம்.22), முதுவாய்ப்பெண்டு (அகம்.63), முதுவாய்ப் பொய்வல் பெண்டிர் (அகம்.98), முதுவாய்வேல(ன்) (குறு.362.1, நற்.282.5, அகம்.195.14, 388.19) - என 'முதுமை' பன்முறை வரினும் அவை வாய்மைக்கு அடையாகவும் கருதப்படலாம். அறிவு வாய்ந்த பெண்டிர், தெய்வத் தன்மையுடைய அறிவு வாய்ந்த வேலன் என உரையாசிரியர் எழுதுதல் இவ் ஐயம் ஏற்படுத்தும்.

9. Robert Browning : Rabbi Ben Ezra, (Grow old along with me.......)

10. காமம் சான்ற கடைகோட் காலை... சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (தொல்.பொருள்.51) என்பது கருதக்கூடும். பாரதிதாசனின் குடும்ப விளக்கு, பழைய நினைவுகளில் ஈடுபடும் முதியவரைக் காட்டுகின்றது (முதியோர் காதல்).

தொன்மை அல்லது பழமை பற்றி, கடவுளர் தெய்வங்கள் பலரும் 'முது'எனச் சுட்டப்பெறுகின்றனர்: தொல் முது கடவுட் பின்னர் மேய (மதுரை.41)

அயன் : தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக (கலி.2.1)

மால் : முதுமைக்கு, ஊழி யாவரும் உணரா ஆழி முதல்வ (பரி.2.17)

அரன் : நீணிமிர் சடை முது முதல்வன் (புறம்.166.1-2)

யமன் : செயிர்த் தொழின் முதியோன் (சிலம்பு.27.7)

சம்பாபதி : முதுமூதாட்டி யிரங்கினள் மொழிவோள் (மணி.6.157)

அன்றியும் இச் சார்பில், வேதம், முதுமறை (சிலம்பு.17.26.4) எனப்படுதலும், வேதியர் மாமுது மறையோன் (சிலம்பு.11.31), முது மறை யந்தணர் (மணி.13.56) எனப்படுதலும் காணப்பெறுகின்றன. மாமுது பார்ப்பான் (சிலம்பு.1.52), பார்ப்பன முதுமகன் (மணி.5.33) எனக் குறிப்பிட்ட இனத்து மனிதரின் முதுமையும் காட்டப்படுகின்றது.

முதுமையை விலக்குதல் அல்லது தடுத்தல் என்பது தொடர்பான எண்ணம் கிடைப்பதால்,[11] இந்நிலை முழுமையாக விரும்பப்படவில்லை என்ற கருத்து வலியுறுத்தப்பெறும். யாண்டு பலவாக நரையில வாகிய பிசிராந்தையார் நிலையும் (புறம்.191), இளமை வேண்டிப்பெற்ற யயாதியின் பாங்கும் இங்கு எண்ணத்தக்கன.

## அறிவும் கல்வியும் அறிவுரையும்

மூப்பு, அறிவும் கல்வியும் நிறைந்ததாதல் இலக்கிய உட்பொதி கருத்தாகத் தென்படுகின்றது. புறத்திணையில், 'கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்' என முதுகாஞ்சி விளக்கப்படுதல் (19), அறிவுடைய முதியோரின் அறிவுரைச் செயலாகப் புலப்படுகின்றது. 'அறிவான் மிக்கோர் அல்லாதார்க்குச் சொன்னது' என இளம்பூரணமும், 'இளமைத் தன்மை கழிந்து அறிவு

11. இரா. நிர்மலா, மூவாமை காப்பதோர் மருந்து, அகத்தியலிங்கமும் பிறரும், ஆய்வுக் கோவை, இபகதஆம, 1989, தொகுதி - 3, பக்.522-27; டி.கே.வி.ராஜன், மூப்பு வராமல் தடுக்க முடியுமா, குங்குமம். 16.3.'90.

மிக்கோர்..... காட்டிய'து என நச்சினார்க்கினியரும் தரும் விளக்கம் எண்ணற் பாலது. கலித்தொகை, 'கல்லாது முதிர்ந்தவன் கண்ணிலா நெஞ்சம்.....' (130.6) என, கல்வி இல்லாத மூப்பு குறைவுடையது என்று உணர்த்துகின்றது. அன்றியும்,

ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடையோ னாறரசுஞ் செல்லும் (புறம்.183)

என்பதன் வழி, வயது மட்டும் இருப்பதைவிட, அறிவு அல்லது கல்வி அமைவதே சிறப்புடையது என்பது புலப்படும். முதுமை - அறிவு இணைவு காரணமாக, அவையறிதலில் 'முதுவருள், முந்து கிளவாச் செறிவு, நன்று' எனப்படுகிறது (குறள்.715).

மேலும், அறிவுரை கூறுதல் என வரும்போது, இளமை வாய்ந்த ஒருவரைவிட முதுமையுடைய ஒருவர் ஏற்புடையராகக் கருதப்படல் தனித்த சிந்தனைக்குரியது. சோழன் கரிகாற் பெருவளத்தான் முதியனாய் வந்து வழக்கைத் தீர்த்தல்;[12] அரச மாதேவிக்கு வாசந்தவை எனும் நரைமூதாட்டி அறிவுரை கூறல் (மணி.23) ஆகியன சான்றாகும்.

அறிவுரை கூற முதியோர் பயன்பட்டனர் என்றால், அறிவுறுத்த முதுமை கையாளப்படுகிறது; இளமையின் நிலையாமை, முதுமையைச் சுட்டித் தரப்படுதல் மிகுதி. மணிமேகலை, நரை மூதாட்டி ஒருத்தியைக் காட்டி உதயகுமாரனுக்கு யாக்கை நிலையாமையை உணர்த்துகின்றாள் (மணி.20.40-69). தொல்காப்பியமும் 'நாளது சின்மையும் இளமையது அருமையும்' (அகத்.44) என வேறு சூழலில் உணர்த்தும்.

## இலக்கிய மாந்தர்

முதியவர் இலக்கியப் பாத்திரங்களாக வருதல் தனித்த ஆய்வுக்குரியது. முதன்மை-துணைமைப் பாத்திர வகைப்பாட்டிற்கேற்ப இவரது இன்றியமையாமை கணிக்கப் பெறலாம். கோவலன் கருணை மறவனாகக் காட்டப்பெற ஒரு முதியவன் வரல் போன்ற பயன்பாட்டுச் சூழல்; நயந்த மகளிரைப் பெறக் கந்தனும், சீவகனும் முதுமை

12. உரை முடிவு காணான் இளமையோன் என்ற
நரை முது மக்கள் உவப்ப, நரை முடித்து
சொல்லால் முறை செய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும் (பழ.21)

கொண்ட வேடச் சூழல்; சிவபிரான் சுந்தரரைத் தடுத்தாளவும், சில திருவிளையாடல்களிலும் முதிய உருவினனாக வந்த பாங்கு என இது பல்கும்.[13] முதுமை அல்லது முதிய உருவம், விரும்பியதை நிறைவேற்றிக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமைதல் இச் சிலவிடங்களில் வெளிப்படும்.

## நிறைதல்

முழுமையான தரவுகளும் பன்முக நோக்கும் மட்டுமே முதுமை பற்றிய தெளிவான உண்மைகளை வழங்க முடியும். உளவியல், மருத்துவத் துறைகள் பட்டியலிடும் பல செய்திகளுக்கு நேரான தமிழிலக்கியத் தரவுகள் கிடைக்கும் வாய்ப்பு குறைவாக அமைதல் தனித்த சிந்தனைக்குரியது. கூட்டுக் குடும்ப அமைப்பில் 'முதுகுரவரின்' இடம்; குறிப்பிட்ட பணிப் பொறுப்புகளுக்கு முதியோரைத் தேர்ந்து கொளல்; முதுமை வருமுன்பே அதற்காகத் தம்மைத் தயார் செய்து கொள்ளல்; ஆடவரை விட மகளிர் முன்பே முதுமையடைதல் எனும் கருத்தின் வன்மை மென்மை; 'தொன்று மூத்த உயிரினும், உயிரொடு நின்று மூத்த யாக்கை' (புறம்.24) என்பதால் 'உயிரி'ன் மூப்பு கருதுதல் :

> மொய்த்து வளர் பேரழகு மூத்த வடி வேயோ
> அத்தகைய மூப்பெனும் அதன் படிவ மேயோ
>
> (பெரிய.5.32)

என்பதால் மூப்பு 'அழகு'டையதாதல்; இலக்கியத் தரவுகள் வாழ்வியல் உண்மையுடன் ஒத்துப் போதலும் போகாமையும் அமையக் காரணம் - போன்ற இன்னும் பலவும் ஆழ்சிந்தனைக்கும் மேல் ஆய்வுக்கும் உரியன.

## இணைப்பு மூப்புச் சொற்கள்

| | |
|---|---|
| அபரவயசு | முதிர்ந்த வயது |
| அம்மையார் | முதியவள் |
| அவ்வை | கிழவி |
| ஆயுமுதியோர் | வயது முதிர்ந்தவர் |

---

13. சிலம்பு.15.42-53; சீவக.2009-17; கந்தபுராணம்-வள்ளி திருமணப் படலம்; பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம்; நம்பி திருவிளையாடல் - வளையல் விற்ற படலம்; பரஞ்சோதி திருவிளையாடல் - விருத்த குமார பாலனான படலம்...

| | |
|---|---|
| காலங்கண்டவன் | வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவன் |
| கிழடன் | கிழவன் |
| கிழடி | கிழவி |
| கிழடு | முதுமை, முதியது |
| கிழடுகட்டை | வயது முதிர்ந்து உபயோகமற்றவ -ன் -ள் |
| கிழண்டு போதல் | கிழத்தன்மையடைதல் |
| கிழத்தனம் | முதுமை |
| கிழப்பிணம் | செயலற்ற கிழத்தனமுள்ளவ -ள் -ன் |
| கிழம் | முதுமை, முதுமையடைந்த -வன் -வள் -து |
| கிழம்படுதல் | முதுமையடைதல் |
| கிழமை | முதுமை |
| கிழவன் | வயது முதிர்ந்தவன் |
| கிழவி | முதியவள் |
| கிழவு | கிழத்தனம் |
| கிழவோன் | முதியவன் |
| குடுகுடுகிழவன் | தடுமாறி நடக்கும் கிழவன் |
| கூனற்கிழவன் | உடல் வளைந்த முதியோன் |
| சரை | நரைமயிர், கிழத்தனம் |
| சரைத்தல் | கிழத்தனம் அடைதல் |
| சழங்கு | முதுமைத் தளர்ச்சி |
| சாம்பல் | முதுமை |
| சாமி | மூத்தோன் |

| | |
|---|---|
| சிவோபாதி | பாலியம், கௌமாரம், யௌவனம், வார்த்தகமென்ற 4 பருவம் |
| சுபமிருத்து | முதிர்ந்த பருவத்தில் நேரும் நன்மரணம் |
| சுரித்த மூஞ்சி | மூப்பினால் திரைத்த முகம் |
| சொட்டை | தலைவழுக்கை |
| சொட்டைத்தலை | வழுக்கை விழுந்த தலை |
| ஞான விருத்தன் | அறிவால் முதிர்ந்தவன் |
| தள்ளாத காலம் | கிழப்பருவம் |
| தள்ளாமை | தளர்ச்சி |
| தட்டானை | கிழக்குரங்கு |
| தாத்தா | வயது முதிர்ந்தவன் |
| தாய்க்கிழவி | தாசியின் தாய் |
| தாழ்ந்த வயசு | முதிர்ந்த பருவம் |
| திருமூப்பு | அரசபதவி மூப்பினால் எய்துவது |
| திரை | வயது முதிர்ச்சியால் தோல் திரங்குதல் |
| தொங்கு கிழவன் | தொண்டு கிழவன் |
| தொண்டு கிழவன் | முதிர்ந்த கிழவன் |
| நரை | மூப்பு; வெளுத்த மயிர் |
| நரைஞர் | வயது சென்றவர் |
| நரைப்பு | மயிர் வெண்மையாகை |
| நரைமை | மூப்பு |
| நரையன் | நரைத்தவன், பருவமின்றி நரைத்தவன் |

| | |
|---|---|
| நரையுந் திரையுமில்லான் | காகம் (மூப்படையாதது) |
| நாட்செல்லுதல் | வயதாதல் |
| பக்கப் பழுத்தல் | மிக முதிர்தல் |
| பஞ்சடைதல் | பார்வை மங்குதல் |
| பஞ்சறை கிழவன் | தளர்ந்த கிழவன் |
| படுகிழவன் | தொண்டு கிழவன் |
| பலிதம் | நரை |
| பலிதை | கிழவி |
| பழம் | வயது முதிர்ந்தோன் |
| பழம்பஞ்சனம் | வயது முதிர்ந்தோன் |
| பழம்புண்ணாளி | அனுபவமுதிர்ந்தவன் |
| பழுத்தல் | மூப்படைதல் |
| பழுத்தபழம் | முதிர்கிழவன் |
| பழைய மனிதன் | வயது சென்றவன் |
| பாட்டி | கிழவி |
| பாரச் சாவு | வயது முதிர்ந்தோரின் மரணம் |
| பிஞ்சிற் பழுத்தல் | இளமையிலே முதிர்வடைதல் |
| புராதனம் | கிழத்தனம் |
| பூர்விகன் | வயது முதிர்ந்தவன் |
| பெரிய மனுஷன் | வயது முதிர்ந்தவன் |
| பெரிய மனுஷி | வயது முதிர்ந்தவள் |
| பெரியவர் | முதியவர் |
| பெரியவள் | வயது முதிர்ந்தவள் |
| பெரியார் | மூத்தோர் |

| | |
|---|---|
| பெருஞ்சாவு | வயதில் முதிர்ந்தோரது மரணம் |
| பெருமுதியன் | கோயில் அதிகாரிகளுள் ஒருவன் |
| முடிந்தபொழுது | முதிர்ந்த வயது |
| முதாரி | முதுமையுறுகை |
| முதியவன் | பிரமன், மூத்தோன், முதிர்ந்தவன் |
| முதியன் | முதியவன் |
| முதியாள் | மூத்தவள் |
| முதியான் | முதியவன் |
| முதியோர் | அறிஞர் |
| முதியோள் | கிழப்பருவம் அடைந்தவள் |
| முதிர்தல் | இளமைத் தன்மை நீங்கி முற்றுதல் |
| முதிர்ச்சி | வயதின் முதுமை |
| முதிர்ப்பு | முதிர்ச்சி |
| முதிர்பு | முதிர்வு |
| முதிர்வு | முதிர்ச்சி |
| முதிரிமை | முதுமை |
| முதுபெண்டு | வயதானவள் |
| முதுமக்கட்டாழி | மிகவும் வயது முதிர்ந்தவர்களை வைத்துப் பாதுகாக்கும் சாடி வகை |
| முதுமக்கள் | வயது சென்றோர் |
| முதுமகள் | முதுபெண்டு |
| முதுமகன் | வயது சென்றவன் |

| | |
|---|---|
| முதுமுறை | மூத்தமுறைமை |
| முதுமூப்பு | மிக முதிர்ந்த வயது |
| முதுமை | மூப்பு |
| முதுவர் | மூத்தோர் |
| முதுவோர் | முதுவர் |
| முப்பாட்டன் | முதுமை-உறவுப் பெயர் |
| முப்பாட்டி | முதுமை-உறவுப் பெயர் |
| முரஞ்சுதல் | முதிர்தல் |
| முரஞ்சு | முதிர்கை |
| முருகுதல் | முதிர்தல் |
| முற்றல் | மூப்பு |
| முற்றவை | பாட்டி |
| முற்றுதல் | முதுமையாதல் |
| மூத்தல் | முதுமையுறுதல் |
| மூ | மூப்பு |
| மூத்தப்பன் | பாட்டன் |
| மூத்தார் | மூத்தோர் (முதியவர்) |
| மூத்தாள் | முதியவள் |
| மூத்தோர் | முதியவர் |
| மூத்தோன் | முதியவன், 48-64-க்குட்பட்ட மனிதர் |
| மூதாட்டி | முதியவள் |
| மூதாதை | பாட்டன் |
| மூதாய் | பாட்டி |
| மூதாளன் | முதியவன் |

| | |
|---|---|
| மூது | முதுமை |
| மூதுணர்ந்தோர் | அறிவு முதிர்ந்தோர் |
| மூதுணர்வு | அறிவுமுதிர்வு |
| மூப்பான் | முதியோன் |
| மூப்பி | முதுமகள் |
| மூப்பு | முதுமை |
| மூரி | கிழம் |
| மூரிப்போதல் | முதுமையால் வலிமையற்றுப் போதல் |
| மெய்படு பருவம் | பாளை, பாலன், காளை, இளையோன், முதியோன் என்ற ஐவகை ஆண்மக்கட் பருவம் |
| வயசன் | வயசானவன் |
| வயசாளி | வயசானவன் |
| வயசானவன் | முதியவன் |
| வயசுகாலம் | முதுமைப்பருவம் |
| வயது சென்றவன் | முதியவன் |
| வயதுவம் | முதிர்வயது |
| வயோதிகம் | முதுமை |
| வயோதிகன் | கிழவன் |
| வயோதிபம் | வயோதிகம் |
| வல்லாமை | தள்ளாமை |
| வலுகிழம் | பலமுள்ள கிழம்; மிக்க கிழத்தனமுள்ள -வன் -வள் -து |

| | |
|---|---|
| வன்கிழம் | தொண்டுகிழம்<br>வலுகிழமானவன் -வள் -து |
| வாக்குமாறுதல் | கிழத்தனம் வருதல் |
| வார்த்தக்கியம் | வார்த்தகம் |
| வார்த்தகம் | கிழத்தனம்; கிழவர் குழு |
| வார்த்தவ்வியம் | வார்த்தகம் |
| வார்த்திகம் | வார்த்தகம் |
| விருத்தம் | மக்கட் பருவம் ஆறனுள்<br>ஒன்றான மூப்பு |
| விருத்தன் | முதுமையோன் |
| விருத்தாப்பியம் | முதுமை |
| விருத்தை | அதிக வயதானவள்; 55<br>பிராயங்கடந்தவள் |
| விளைவு | முதுமை |
| வெள்ளொளிப் பருவம் | வெள்ளெழுத்துண்டாம்<br>வயது |
| ஜ்யேஷ்டன் | வயதில் மூத்தவன் |
| ஜாம்பவான் | மிகவும் முதியவன் |
| ஷேக் | வயது முதிர்ந்த பெரியார்<br>என்று பொருள்படும் ஒரு<br>மரியாதைச் சொல் |

# இறப்பு

**விளக்கம்**

உடலைவிட்டு உயிர் நீங்கும் நிலை - மீண்டும் அவ்வுடல் அவ்வுயிரைப் பெறவியலா நிலையில் - இறப்பு எனக் குறித்தற்குரியது. இறப்பு இயல்பாகவோ இயல்பன்றியோ அமையலாம். மூப்பைத் தொடர்ந்த இறப்பு முன்னவகையையும், நோய் - விபத்து - பலி - கொலை போன்ற சூழல் பின்வகையையும் அமைக்கலாம்.

அடையாளமாகவும் (குறி - Sign, Signal), சுட்டாகவும் (குறிப்பு - Suggestion), கருத்து - வினை - தன்மை/இயல்பு - சார்பு போன்ற ஏதேனும் ஒன்றன் தொடர்பு காரணமாகவும் (குறியீடு - Symbol), அருவ, உருவக் கருத்துப் பொருட்கள் இறப்பைக் குறிக்கின்றன.

இறப்பு, உலகளாவிய உண்மை, இன்றியமையா முடிவு என்ற நிலையில் நேரடிக் குறியும் குறிப்புப் பெறுவதுடன், குறியீடு வழியும் தன் ஆளுமையை நிலைநாட்டுகின்றது. இறப்பு அவா (death-wish), எதிர்வரும் மரணம், இறப்பு, இறப்புக்குப் பின்நிலை, மறுமை என வகைப்பட்டுக் காணத்தக்கதாகக் குறிப்புகள் அமைகின்றன.

இறப்பைக் குறிக்கும் சொற்கள் அதன் இயல்பை/தன்மையை உணர்த்துகின்றன. திவாகரம் (கழகம், 1958),

> "துஞ்சல் பொன்றல் விளிதல் வீதல்
> முஞ்சல் துவன்றல் முடிவு உலத்தல் வீடல்
> மாய்தல் இறத்தல் மாளல் தபுதல்
> சாதலென்ன சாற்றினர் புலவர்" (ப.208)

எனப் பதினான்கு சொற்களைத் தருகிறது. இவற்றினடிப்படையில்/ இவற்றின் பொருட் சார்பில், சில குறியீடுகள் நேரடியாகப் பொருந்துமாறு புலப்படுகிறது (மடிதல் போன்ற சில சொற்கள் இதில் அமையவில்லை).

இறத்தல் - கடத்தல் என்ற அடிப்படையில் பயணம்; மாய்தல் - மறைதல் அல்லது அழிதல் என்ற பாங்கில், காட்சியிலிருந்து

தற்காலிகமாகவேனும் மறையும் மதி, கதிர் போன்றனவும் பிற அழியும் பொருட்களும் (perishable); சாதல்-மங்குதல், குன்றுதல் என்ற பான்மையில் நிலைத்து நிற்காத (transient) நறுமணம், எரிந்துருகும் மெழுகுவர்த்தி, விளக்கொளி; துஞ்சுதல் -உறங்குதல் என்பதால் தூக்கம்; வீதல், வீடல் -வாடுதல் என்பதால் மலர் போன்றன; முடிவு என்பதால் காலம் போன்றவற்றின் முடிவு; துவன்றல், உலத்தல், தபுதல் போன்றவற்றால் உலர்ந்த/பட்ட மரம் அல்லது வேரற்றுச் சாய்ந்த/வெட்டப்பட்ட மரம் - எனப் பல மரணக் குறிவழங்கல் பொருத்திக் காணப்பெறலாம்.

இறப்பு ஒரு பேரிழப்பு என்ற நிலையில், இழப்புச் சூழல்கள், இருந்ததன் இன்மை என்பனவும் இதனைச் சுட்டலாம். இறப்பால், உடல் உயிர் நிலையிலிருந்து, உயர் நிலையிலிருந்து - தாழ்ந்து பிணநிலை பெறுவதால், இழிதல்/தாழ்தல்/மேலிருந்து கீழ்வருதல் சூழல்களும் இறப்புக் குறிப்புத் தரலாம். இறப்பு, சார்ந்தவர்க்குத் துன்பமானது என்ற நிலையில் துயரம், ஏக்கப்பெருமூச்சு, அழுகை, ஒப்பாரி, ஓலம் போன்றனவும் கருதப்பெறலாம்.

மேலும், சார்பு காரணமாக, தலை தொங்குதல், கடைவாயில் பால் வழிதல், மூச்சடங்குதல் (உயிர் நீத்தல்/ஆவி கெடுதல்), இறந்த உடல், பிணத்தை மூடும் துணி, ஆடை நிறம், பிணத்தின் சுற்றிலும் வைக்கப்படும் பொருட்கள், இறப்புச் சடங்குகளில் கையாளப்பெறும் பொருட்களும் அவற்றின் செயல்/இயக்கமும்; சாமணி, மலர் வளையம், கால்கழி கட்டில், புதைகுழி, ஈமத்தாழி, ஈமம், கொள்ளி, நன்காடு போன்றனவும், கல்லறை, நடுகல் போன்ற சின்னமும்; மண் சாம்பல் எலும்பு(க்கூடு) போன்ற எச்சமும்; நீர் தெளித்தல், தலை முழுகுதல், பிண்டம் வைத்தல் போன்ற பின்னிகழ்வுகளும் பிறவும் மரணம் சுட்டி அமைகின்றன. முக்காடிடுதல், மொட்டையிடல் போன்றனவும் உள. கருத்து நீட்சியாக மறுமையும் இறப்பில் உட்படுத்தப்பெறுகிறது.

நம்பிக்கை யடிப்படையில், கூற்று/யமன், ஆவி/பூதம், இறந்தவருலகு போன்றன; அச்சச் சார்பு காரணமாகக் கருமை, இருட்டு, நிழல், காருவா (அமாவாசை), இரவு, இரவுப் பறவைகளும் (கோட்டான்/கூகை) அவற்றினொலியும், நாய் -நரி கூவுதல் (ஊளை) போன்ற 'அமங்கலத் தொனிகள்' என்பனவும் குறிப்பாகி யமையத்தக்கன.

எதிர்பாராத திடீர்ச் சாவு என்ற பாங்கிலும், இயல்பல்லாச் சாவு என்ற பான்மையிலும் இடி, விண்மீன் விழுதல், சிந்திய குருதி,

உடைந்த பாண்டம், மூழ்கும் படகு/கப்பல், நஞ்சு, பாம்பு தீண்டல், ஊனமுறுதல் (கை-அறு-நிலை), (கொலைக்) கருவிகள் அல்லது போராயுதங்கள் என்பன இதனைக் குறிக்கலாம்.

இறப்புக்கு இத்தகு எண்ணிறந்த குறி-யிடுதல்கள் அமைய, இறப்பும் பிற பலவற்றிற்குத் தான் குறியாகுதல் உண்டு. இதனை மடைமாற்ற நிலை எனக் கருதக் கூடலாம். ஆபத்து, இழப்பு, உறவு அறுதல், உறக்கம், ஊனமுறல், கால முடிவு, கொடிய நோய், சமாதி, சலிப்பு/சோர்வு, பிரசவம், (பருவ/கால) மாற்றம், விடுதலை (மீட்பு), விபத்து... என இது பல்க வாய்ப்புண்டு. மீறுதல், பாவம் என்பன கிறித்தவ சமயச் சார்பில் மரணமாகக் குறிபெறுதல் இங்கு இணைத்துக் காட்டப்படலாம். மேலும் விதைத்தல், அறுவடை என்பனவும் விவிலியத்தில் இறப்புத் தொடர்புடன் காட்டப்படல் சிந்திக்கத் தக்கது.

## இறப்புக் குறியீடு

மொழி, இலக்கியம், குறியீடு பற்றிய அகராதிகள், வாழ்வியல் காட்சிகள், பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், கலைகள் போன்றன இத்தகு குறியீட்டு எண்ணங்களை வழங்க வல்லன. கனவுகள் வழங்கும் இறப்புக் குறியீடுகள் தனித்த சிந்தனைக்குரியன. வரும் மரணத்தை முன்னுணர்த்தும் வண்ணம் உட்பொருள் கருதிக் காணத்தக்க (Interpret) நிலையும் சிறப்பாகக் காணற்குரியது. இறப்புச் சார்ந்த சில வழக்கங்கள், உருமாறி வாழ்வியல் முறையில் இடம்பெறும் பாங்கும் உய்த்து உணரத்தக்கது (ஈமம் - தீமிதித்தல்).

இறப்புப் பற்றிய சிந்தனைகள் மக்களிடையே - சமுதாயங்களிடையே வேறுபடுதல் காரணமாக, இறப்பைக் குறிக்கும் சொல்/பொருட்களும் அதற்கேற்ப வேறுபடக் கூடியன. இறப்பு ஒரு முடிந்த முடிபு என்ற கருத்தினர் தரும் குறிப்பு, படிமம் அல்லது குறியீடு வேறாகவும்; ஒரு மறுமையை, மறு உலக வாழ்வை, மறுபிறப்பை நோக்கிய - சுழற்சிக் கோட்பாட்டுக் - கருத்தினர் தருவன வேறாகவும் அமையலாம். சமயச் சார்பு காரணமாகவும் இவை வேறுபட்டுக் காணப்படலாம். கால வேறுபாடு, பண்பாட்டு வளர்ச்சி அல்லது மாற்றம் என்பனவும் வேறுபாடுகட்குக் களன் நல்கலாம்.

ஒரு மொழியினரின், ஒரு பகுதியில் வாழ் மக்களின் இத்தகு இறப்பு வெளியீட்டுக் கூறுகள் தொகுத்துக் காணப்படும்போது, காலத்தால் ஏற்பட்ட கருத்து மாறுபாடுகளைக் கணிக்க முடியலாம். எல்லாக் காலத்திற்கும் உரியதாகத் தொடர்ந்து (Consistant) அமைவனவும், பண்டைக்காலத்தில் மட்டும் வழங்கி அழிந்தனவும்,

இடையில் தோன்றி நின்றனவும், இன்று தற்காலத்தில் உருவாயினவும், படைப்பாளரால் தன்னிலையில் (Personal/Private) உருவாக்கப் பெற்றனவும் இனங்காணப் பெறலாம்.

மேலும், இக்குறியீடுகள் வழியே, அவை வழங்கும் மக்களின் இறப்புச் சிந்தனையும், மரணத்தின் பின்நிலை பற்றிய கோட்பாடுகளும் மீட்டுருவாக்கம் பெறவோ (Reconstruct), இனங்காணப் பெறவோ (Identify) முடியும். உடல் இறப்பு - ஆன்ம இறப்பு/இறவாமை; உடல் ஆன்மா (Body Soul ), உலவு ஆன்மா (Wandering Soul); போன்ற நம்பிக்கை வயப்பட்ட சிந்தனைகள், அடிப்படையுடன் தெளிவு பெறலாம்.

பல பண்பாடுகளிடையேயுள்ள குறியீடுகளை ஒத்தும் உறழ்ந்தும் காணும்போது, உலகளாவிய ஒப்புமைக் கூறுகளையும், தனித்து நிற்கும் (Unique) சிறப்புக் கருத்துகளையும் பகுத்து உணர முடியலாம்.

இக்கருத்தின் குறியீடுகளைப் பல்வகையில் பகுத்துக் காண முடியும். இறப்புச் சூழலுக்கேற்பப் பகுத்தல் ஒருவகை. இயல்பான இறப்புச் சூழலைக் குறிக்கும் கருத்து வடிவங்கள் வேறாகலாம் என்ற கருதுகோள் இப்பகுப்பின் அடிப்படை. கொலைச் சூழல்,

**அடுதல், வீட்டல், அணங்கல், வெட்டல்,**
**படுத்தல் என்றிவை கொலை செயற்பால.**

(திவாகரம், மு.சு., ப.209) என வினை வேறுபாடு தருவதுடன், 'மரணம்' என்ற இயல்பில் காணப்படாத 'சிந்திய குருதி' என்பதைக் குறியாகக் கொள்கிறது. கொலையிலும், தற்கொலை, உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தல் (அஞ்சனம்?), வடக்கிருத்தல் போன்றன தனித்துக் கருதும் வண்ணம் வாய்ப்பு நல்கலாம். மேலும், போர்ச் சூழலில் இறப்பு போர்க்கருவிகளாலும், நோய்ச்சூழல் இறப்பு 'நோய்த் தெய்வங்க'ளாலும் குறிக்கப்படலாமோ என்பதும் ஐயம் நீக்கப்பட வேண்டியதாகும்.

இறப்புக்கு வரும் சில குறியீடுகள், அதற்கு "நேர் மாறான" பிறப்பு வாழ்வு என்பனவற்றுக்கும் வரலாம்; சாதல் குறியீடு காதலுக்கும் ஆகின்றது. இவை போன்றன தனித்த ஆய்வுக்கும் அணுகுதலுக்கும் உரியன; இதிலிருந்து விலகி, ஒருகோட்டின் ஈரெல்லைகளான பிறப்பும் - இறப்பும், ஒளி - இருள்; பகல் - இரவு என இணைவும் - வேறுபாடும் காட்டும் ஈரிணைகளாக அமைவது மற்றொரு கோணப் பார்வைக்குரியது.

இலக்கிய மரபிற்குமட்டுமுரிய தனித்த குறிகள் (கருவி, நிலம்) சில காணப்படலாம் என்பது, நெய்தல் (சாப்பறை : ஓரி னெய்தல் கறங்க, புறம்.194), பாலை (முதுபாலை - புறம்.253-56) போன்றவற்றால், பெறப்படுகின்றது. ஆடல் (சாக்கூத்து - the dance of death), போராட்டம் (மரணப் போராட்டம்), கண்ணி (death snare) என்பன போன்று பிறபலவும் பயன்பாட்டிலிருந்து தேரத்தக்கன.

இறப்பைக் குறிக்க, குறிப்பிட்ட நாள், கிழமை, மாதம், திசை - நேரம் - கோள் போன்றன உளவா என்பதும் ஆழ் ஆய்வில் உட்படலாம். சான்றாகப் பெப்ருவரி மாதம், இறந்தோர்க்குரிய கடன் செய்யும் மாதமாக - ஆண்டிறுதி மாதமாக அமைவதும்,* அவ்வாறே ஆடி மாதம் இங்குப் பின்பற்றப்படுவதும் ஒத்து வைத்துக் கருதப்படலாம்.

இறப்புக் கடவுள், இறப்புத் தூதுவன் எனச் சார்புடைய கூறுகளின் எண்ணங்கள் வழியும் குறியீடுகளை உணரலாம்.

இறந்தவர் உலகு (Land of the Dead) எங்கே, எப்படி அமைகிறது என்பது தொடர்பான சிந்தனைகளுக்கேற்பச் சில குறியீடு அமையலாம். சான்றாக, கடல் அல்லது ஏரிக்குள் (நீரின் கீழ்) அமைகிறது அல்லது மலை (க் குகை)க்குள் அமைகிறது என்பதற்கேற்ப, படகில் பயணம் செல்லல் அல்லது மலை முழைக்குள் (பிலம் புகுதல்) செல்லுதல் என்பன வருகின்றன. மேலுலகம் என்ற கருத்து, (குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே - குறள்.338) பறத்தலைத் தரக் கூடும். (தீவு - Island. A death Symbol) என்பதும் நீர்ப்பயணத்தை அளிக்கலாம்). 'விசும்பின் வலவனேவா வானவூர்தி (புறம்.27) என்பதும் இங்கு இணைத்துக் காணத்தக்கது.

## கதிர் மறைவும் இறப்பும்

தமிழிலக்கியங்கள் தரும் சில சாக்குறிகள், தெளிவானவை யாகவும் ஆழமும் அழுத்தமும் உள்ளவையாகவும் அமைவதால் தொடர்ந்த பயிற்சி கொள்கின்றன. உலகளாவிய தன்மையும் இவை பெறுவதால் உயர்வும் சிறப்பும் பெறுகின்றன.

---

* February -1. Name : In Rome the 12th (=last) month of the Calender; a. Februa = Make liberation; b. 'Februere' = to purify; Ceremonies of Purification and cults of the dead.

- Dictionary of Symbols and Imagery, p.179.

உலகுக்கு இருள் நீக்கி ஒளி நல்கும் கதிரும் மதியும் மறைதல் (அஸ்தமனம்) இறப்புச் சார்பு கொள்வது பொதுமை. சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடுமிடத்துக் கதிரவன் உவமையாவதில், கதிர்மறைவு 'இறப்பா'கக் குறிபெறுகிறது.

கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி.... (புறம்.8.5-8)

சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் புகழும்போது, பிறப்பும்-இறப்பும்...மதியின் செயலால் வெளிப்படுவதைத் தருகின்றார்.

தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரும்.... (புறம்.27.11-14)

சிலப்பதிகாரம், கானல்வரியில், மாதவி கூற்றில் ஐந்து முறை கதிரவன் மறைவைத் தருகிறது. கோவலனின் பிரிவு மட்டுமன்றி இறப்பும் இங்கு உட்படுவது தெரிகிறது.

இளையிருள் பரந்ததுவே யெற்செய்வான் மறைந்தனனே
(சிலம்பு.7-40.1)

கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
(சிலம்பு.7-41.1)

மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தவிம் மருண்மாலை
(சிலம்பு.7-41.4)

பறவை பாட்டடங்கினவே பகல் செய்வான் மறைந்தனே
(சிலம்பு.7-42.1)

பையு ணோய் கூரப் பகல் செய்வான் போய் வீழ
(சிலம்பு.7-50.1)

கம்பனும், கதிரவனின் இறப்புப்-பிறப்புத் தத்துவத்தைக் கண்டு தொடர்ச்சி காட்டுவது குறிப்பிடத் தக்கது:

துறக்கமே முதல ஆய தூயன யாவையேனும்
மறக்குமா நினையல் அம்ம வரம்பு இல தோற்றும்
மாக்கள்

இறக்குமாறு இது என்பான்போல் முன்னைநாள்
இறந்தான் பின்நாள்
பிறக்குமாறு இது என்பான்போல் பிறந்தனன் பிறவா
வெய்யோன்

(கம்பன்.**1976**)

(பார்க்க : கம்பன் கற்பனை, பக்.125-126).

## குறியீட்டாக்கம்

பல நூல்களிடையே வரும் இக் குறியீட்டுத் தொடர்ச்சி போன்றே, ஒரு நூலும் தன்னுள் இறப்புப் பற்றிய குறியிடுதலின் இணைவு காட்டக் கூடும். சிலம்பில், கோவலனின் இறப்பை முன்குறிக்கும் சில கூறுகள் வழி இதனை அணுகிக் காணலாம். ஒரு குறியீடு எவ்வாறு உருவாகிறது அல்லது ஆக்கம் பெறுகிறது எனக் காணவும் இது உதவலாம்.

சிலப்பதிகாரத்தின் 15-ஆம், 16-ஆம் காதைகள் 'விலங்கு'க் குறிப்புகள் சிலவற்றைத் தருகின்றன. கோவலனின் சாவை ஒட்டி இவை அமைவதால் தனித்த சிந்தனைக்குரியன. அவன் கனவில்,

கூறை கோட்பட்டுக் கோட்டுமா ஊரவும் (சிலம்பு.15.98) என வருகிறது. சிலம்பு விற்க, ஆயர்பாடி நீங்கும்போது ஏறு எதிர்ந்தது.

பல்லான்கோவல ரில்ல நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோன்
இமிலே றெதிர்ந்த திழுக்கென வறியான்
தன்குல மறியுந் தகுதியன் றாதலின்

(சிலம்பு.**16.98-101**)

தொடர்ந்த செலவில் பொற்கொல்லனைக் காண்கின்றான். (வேறுபடப் பொருள் கொள்ளப்படினும்) அப்பொற்கொல்லன் 'விலங்கு' நடையினனாகக் காட்டப்படுகின்றான்.

மெய்ப்பை புக்கு விலங்கு நடைச் செலவிற்
கைக்கோற் கொல்லனைக் கண்டன னாகி

(சிலம்பு.**16.107-8**)

இவ்விலங்குக் குறி (கோட்டுமா - இமிலேறு - விலங்கு) சங்க இலக்கியம் தரும் கூற்றுவன் ஊர்தியான எருமையுடன் தொடர்புபடுத்திக் குறியீடாகக் கொள்ளப்படலாம்.

தொல்காப்பியம் முதலே கூற்றம் பற்றிய சுட்டுதல் அமைந்து, சங்க இலக்கியத்தில் பல் பெயர்களுடன் விரிந்த ஆட்சி கொள்ளினும், வாகனம் பற்றிய சுட்டுதல் பரிபாடலில் மட்டும் வருவது தெரிகிறது (பார்க்க : தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.204).

எருமை யிருந்தோட்டி யெள்ளீயுங் காளை (பரி.8.86)

என வருவதைத் தொடர்ந்து, சிலம்பும் 'எருமைக் கடும்பரி யூர்வோன்' (26.215) எனத் தருவதால், இணைத்துக் காண வாய்ப்பு மிகுகிறது. கூற்றுவன் இறப்புக் குறியாகி, அத் தொடர்பால் அவன் வாகனமும் மரணத்தை முன்சுட்டி அமைகிறது எனக் கொள்ள முடியலாம். கனாநூல் கருத்துப்படி, எருமை, வருமிறப்பைக் குறிப்பாகத் தருவதை உணர்த்துவர் (பார்க்க : இலக்கியக் கனவுகள், பக்.44-47).

## குறியீட்டொப்புமை

இருவேறு பண்பாடுகளிடையே ஒப்புமை காட்டுகின்ற இறப்புக் குறியீடுகள் பற்றிய சிந்தனைகள் தனித்துக் கொள்ளப்படலாம். முன்சுட்டிய கதிரவன் மறைவும் இறப்புத் தொடர்பும் இதற்கொரு சான்றாகும்.

அடிவானத்தில் கதிரவனின் திடீர் மறைவு, சாம்சன், ஹெர்குலிஸ், சிக்பிரிட் போன்ற வீரத்தலைவரின் திடீர் இறப்புடன் தொடர்புபடுத்தப்படுகிறது*.

மேலும் இவ்விரண்டிலும், கதிர் மறைவு முழுமையான இறப்பாக அன்றி, மீண்டும் பிறத்தல் அல்லது உயிர்த்தெழுதல் என்ற நிலையிலும் இணைவு காட்டுவது, முன்சுட்டிய கம்பன் கவிதையையும், மேற்படி நூலின் பிறிதொரு கருத்தையும் (ப.303) பார்க்கத் தெரிகிறது.

வீழும் விண்மீன் குறியீடும், இந்நிலையில் சுட்டத்தக்கது. புறநானூறு, வானிலிருந்து ஒரு மீன் விழுந்ததன் பயனாக மன்னன் இறந்துபட்டான் எனத் தருகிறது.

...... ஒரு மீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண் டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
பறையிசை யருவி நன்னாட்டுப் பொருநன்

---

* The sudden disappearance of the sun below the horizon is related to the sudden death of heroes such as Samson, Hercules and Siegfried (A Dictionary of Symbols, p.304.)

*நோயில னாயி னன்றுமற் றில்லென....*
*அஞ்சின மெழுநாள் வந்தன், றின்றே......*
*மேலோ ருலக மெய்தினன்....* (புறம்.**229**)

தம் மன்னன் விண்மீன் நிலைக்கவும், பகை மன்னன் வான்மீன் வீழவும் வேண்டும் புலவர் கூற்றும் இப்பாங்கினது.

*நின்று நிலைஇயர் நின் னாண்மீ னில்லாது*
*படாஅச் செலீ இயர் நின் பகைவர் மீனே* (புறம்.**24.24-25**)

ஒத்த கருத்தாக, மங்கும் நட்சத்திரத்தை ஆன்ம இறப்பாகவும், நிலைத்த விண்மீனை நித்திய வாழ்வாகவும் டி.எஸ். எலியட் கொள்வதாகத் தருவர்.* மேலும், ஆபிரகாம் லிங்கனின் மறைவையொட்டி, வால்ட் விட்மன் (*1819-1892*) கவிதை புனையும் போது, மறைந்த மேதையை வீழ்ந்த நாண்மீனாகப் பயின்று காட்டுவார்.

*வாசல் முற்றத்தில் போனமுறை லில்லாக் பூத்தபோது*
*அந்தப் பெரிய விண்மீன் மேற்கு வானில் இரவில்*
*முன்னதாகவே இறங்கியபோது.....*
*இடையறாது மலரும் லில்லாக், மேற்கில் இறங்கும்*
*விண்மீன்.....*
*மேற்கில் வீழ்ந்த ஆற்றலுடைய விண்மீனே!*
*இரவின் நிழல்களே - அழுங்கும் கண்ணீர்நிறை இரவே!*
*மறைந்த பெருவிண்மீனே!*
*விண்மீனை மறைக்கும் காரிருளே!.......***

## தனிக்குறியீடு

ஒப்புமையுடைய குறியீடுகள் காணப்படுவது போலவே தனித் தன்மையுடையனவும் கண்டுகொள்ளப்பெறலாம்.

முன்சுட்டிய வால்ட் விட்மனின் பாடல், அழகுடையதாக, இதமானதாக இறப்பைக் காட்டுகிறது; அமைதியுடையதாக,

---

* T.S. Elliot (Hollow Man), a. "fading stars": Spiritual death; b. "Perpectual Star": eternal life.

- Dictionary of Symbols and Imagery, p.440.

** When lilacs last in the door yard bloom'd And the great star early droope'd in the Western sky in the night... Lilac blooming perennial and drooping star in the west.... O powerful western fallen Star! O shades of night-O moody, tear-ful night! O great Star disappear'd - O the black murk that hides the star!.... (Master Poems. p.687)

மிருதுவானதாகக் குறிக்கிறது; கரிய தாயாக, வலிமையுடைய மீட்போளாக இறப்பைச் சுட்டுகிறது; மேலும் அன்புக் கடலாக, ஆனந்தக் களிப்பாக இறப்பின் அனுபவம் சுட்டப்பெறுகிறது. இவை, ஒத்த குறிப்புகள் பிறவிடங்களில் கிடைக்கும் வரை, தனித்தனவாகக் கருதப் பெறலாம்.

வா அழகிய இதமான இறப்பே......
அமைதியாக வருகின்ற...... மிருதுவான இறப்பே.....
மென்பாதங்களுடன் அருகில் எப்போதும்
மிதந்திடும் கரிய தாயே .......
வலிமையான மீட்போளே நெருங்கி வா
அவ்வாறமையும் போது
நீ அவர்களை எடுத்துக் கொண்டபோது
இறப்பே
உன் அன்பின் மிதவைக் கடலில் தொலைந்தவர்களை
உன் பெருமகிழ்வுப் பெருக்கில் புதைந்தவர்களை
இறந்தவர்களை
நான் மகிழ்வுடன் பாடுவேன்*

மேலும், எமிலி டிக்கின்சனின் (1830-1886) இறப்புப் பற்றிய பல பாடல்கள் தமக்கெனத் தனித்த பல குறியீடுகளை, சொல்லாட்சிகளை, காட்சிகளை, படிமங்களைக் கொண்டு தனித்தன்மை பெறுகின்றன. இழப்பும், முடிவும் ('I never lost as much but twice'; 'My life closed twice before its close') இறப்பாவது பொதுமையாயினும், அதனைப் பண்பாளனுடனான பயணமாகக் காட்டுவதில் புதுமை தெரிகிறது.

நான் இறப்புக்காகக் காத்து நிற்க முடியாததால்
அன்புடன் அவன் நின்றான் எனக்காக;
அந்த ஊர்தியில் நாங்கள் மட்டும்
அத்துடன் சாவாமையும்
சென்றோம் நாங்கள் மெதுவாக
அவசரம் ஏதும் அவன் அறியவில்லை

---

Come lovely and soothing death,.....
.... Serenely arriving.... delicate death.
Dark mother always gliding near with soft feet
Approach strong deliveress,
When it is so, When thou hast taken them I joyously sing the dead,
Lost in the loving floating ocean of thee
Laved in the flood of thy bliss O death... (Master Poems, p.693)

**நானும், அப்பண்பாளனுக்காக**
**விலக்கி வைத்தேன்**
**என் வேலையை - ஓய்வையும் கூட!****

கூற்றத்தைக்கொடியதாக - கொடூரமானதாக - அச்சந்தருவதாகக் காட்டும் மரபுக்கு வேறாக இப்புலப்பாடு அமைகிறது. அரசனாக (King, Emperor)வும் இப்புலவரால் கூற்று தரப்படுதல் உண்டு.

**நிறைவுரை**

இட, கால, தர வரையறையின்றி அங்குமிங்குமாக அறியப்படும் தரவுகளின் அடிப்படையில் அணுகும்போது, இறப்பைப் பற்றிய மேற்கண்ட பார்வைகள் கிடைக்கின்றன.

சாவு குறித்த எல்லா வினைச் சொற்களும் திரட்டப்பெற்று பொருட் தேர்ச்சியைக் கணிக்கலாம். முழுமையான மூலத்தரவுகளின டிப்படையிலமையும் கல்வி நிறைவான செய்திகளை வழங்க முடியும்.

மூப்பு-பிணி-சாக்காடு என அணுகும் பௌத்தம் போன்று, ஒவ்வொரு மத அடிப்படையிலும் காண, சில சிறப்பு உண்மைகள் புலனாகலாம்.

சமூகவியல், உளவியல், மானுடவியல், மெய்யியல்.... என்பனவற்றிற்கேற்ப இறப்புக் கருத்து மாறுபடுவதும் அவற்றிற்கேற்பக் குறி - குறிப்பு - குறியீடுகள் உருவாவதும் ஆழ் கல்விக்குரியன. மருத்துவம் போன்ற அறிவியல் துறைகளின் பார்வைக் கோணங்களும் கருத்து மேம்பாடுகளை உணர உதவும்.

இறப்பைப் பற்றிய மனிதனின் சிந்தனை என்ன என்று உணர, இவையும் இவற்றின் சார்பில் உருவாகும் குறியீடுகளும் துணையாகும்.

---

** Because I could not stop for death
He kindly stopped for me
The carriage held but just ourselves
And immortality
We slowly drove. He knew no haste,
And I had put away
My labour and my leisure too
For his civility......

(Master Poems, p.745)

# செல்வமும் வறுமையும்

பொருளாதாரக் கோட்டின் இரு முனைகளைச் செல்வமும் வறுமையும் காட்டுகின்றன. பொருள் ஏற்றத் தாழ்வுகள் பற்றியே பொருளாதாரம் ஒரு தனித் துறையாக முகிழ்த்ததோ என எண்ணலாம். இக்கருத்து வரையறுக்கப்பட்டால், 'பொருள் என்பது என்ன' எனும் சிந்தனை எழுகின்றது. விலை மதிப்புடையதும், பருப்பொருளாக இருப்பதும் தான் பொருளா? அன்றாடத் தேவையை நிறைவு செய்யும் எளிய இன்றியமையாமைகள் பொருளல்லவா? 'பணத்தால் எதையும் பெறலாம்' என நினைக்கும் (?) நிலையில் பணமே பொருளா - பணம் மட்டுமே பொருளா? என்ற எண்ணங்களும் வருகின்றன.

சங்க இலக்கியம் 'பொருள்' என்பதைப் பற்றிப் பலவாறாகப் பேசுகின்றது. செல்வம், வறுமை என்பனவற்றையும் கையாளுகின்றது. எனினும் பொருளும் செல்வமும் (Wealth) இணைத்தே தரப்பட்டன என்பதற்கில்லை. செல்வம் என்பது என்ன? செல்வ நிலை எது? எவையெவை செல்வமாகக் கருதப்பட்டன - கருதப்படுகின்றன? காலந்தோறும் இதில் கருத்து வேறுபாடு அமையக் கூடுமா? பொருள் போன்று செல்வமும் பருப்பொருள் தானா? அழியா - நீங்கா இயல்புடையதா? செல்வ நிலை வெளிப்படுவது எவ்வெவற்றால்? செல்வம் மிகுவது எப்படி? சேர்க்கப்படுவது எப்படி? முன்னோர் செல்வம் தம் காலத்து ஈட்டும் செல்வம், பின்னோர்க்கு வைத்துச் செல்லும் செல்வம் எனும் பான்மைகள் உண்டா? செல்வம் பற்றிய கோட்பாடு பலருக்கும் பலவிதமாக அமையக் கூடுமா? - போன்ற பல எண்ணங்களும் பொருளாதாரச் சிந்தனையில் துணைபுரியலாம். செல்வம் (=செல்வது), வெறுக்கை (=வெறுத்தற்குரியது?) என்பன போன்று செல்வத்தைக் குறித்து வரும் சொற்களும் தமிழரின் தனித்த எண்ணங்களைத் தெளிவுறுத்தலாம். 'செல்வன்' எனப் பயிலும் பெயர் நிலையும் சங்கச் சிந்தனையை விளக்கலாம்.

வறுமை பற்றியும் இத்தகு சிந்தனைகள் காணப்படலாம். செல்வமும் வறுமையும் எங்குத் தொடர்புறுகின்றன, எங்கு விலகுகின்றன என்பது எண்ணத்தக்கது. செல்வமும் நுகர்ச்சியும் சார்புடையனவாக அமைகின்றன எனக் கொண்டால், வறுமை

நுகர்ச்சிக் குறைவு எனக் காணலாமா? நல்குரவு போன்ற பிற சொற்கள் ஏதேனும் தனித்த கருத்தை உணர்த்தக் கூடுமா? வறுமைக்குக் காரணம் என்ன? வறுமையின் நிலை என்ன? உணவு போன்ற அடிப்படைத் தேவைகளிலுமுள்ள குறைபாடுதானா? வறியவரா செல்வரா சங்க காலத்தில் மிகுதி? சங்க இலக்கியம் மிகுதியாகப் பேசுவது செல்வம் பற்றியா வறுமை பற்றியா? ஏன்? அகப்பாடலா, புறப்பாடலா இவற்றிற்கு இடமிகுதி யளிக்கின்றன? போன்ற அணுகுதலும் விரிவாய்வில் அமைய வாய்ப்புளது.

மூன்று பேரரசுகளாலும், பல வள்ளல்களாலும், குறுநில மன்னர்களாலும், வேளிர்களாலும் ஆளப்பட்ட தமிழகம் முழுமையும் சங்க காலத்தில் ஒரே பொருளாதார நிலை காட்டினதா அன்றிப் பல பொருளாதார நிலைகள் காட்டினதா என எண்ண இடமுண்டு. வேறுபட்ட பொருளாதார நிலை இருக்குமெனின், சேரர் பொருளாதாரத்தைக் கணிக்கப் பதிற்றுப்பத்தும், சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடல்கள் போன்றனவும் உதவக் கூடுமோ எனவும் கருதலாம். சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரைக் காலத்தால் பிற்பட்டதாகக் கருதப்படும் கலித்தொகை, ஒரே காலப் பெரும்பகுதியின் வேறுபட்ட பொருளாதார நிலையையும் காட்டக்கூடும் எனக் கருதலாம். சோழநாட்டிற்கு நெல்லும், பாண்டிய நாட்டிற்கு முத்தும், சேர நாட்டிற்கு யானையும் பொருளடிப் படையானதா எனவும் விரிந்த பார்வையில் கணிக்கலாம்.

## செல்வம்

### சொற்கள்

செல்வம், மிகுதியாக நினைக்கப்பட்ட ஒன்றாக அமைவதைப் பழந்தமிழ் இலக்கியச் சொற்கள் காட்டுகின்றன. பல சொல் பயிலல், செல்வத்தின் பல்வகையை, பல் நிலையையும் காட்டலாம். **செல்வம்** என்ற சொல் பயிற்சியுடையதாகவும், அதனடிப்படையில் செல்வ (பதிற்.38), செல்வி (பதிற்.31), செல்வர் (பதிற்.59) என்ற சொல்லமைப்புகள் வருவதும் தெரிகின்றது. செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிய கபிலரின், பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்து,

**செல்வக் கோவே சேரலர் மருக (பதிற்.63)**

**வில்லோர் மெய்ம்மறை சேர்ந்தோர் செல்வ (பதிற்.65)**

**செல்வக் கோமான் (பதிற்.67)**

என அவனைச் செல்வமுடையவனாகவும், பிறர்க்குச் செல்வமாக அமைந்தவனாகவும் காட்டுகின்றது. குண்டுகட் பாலியாதனின் புறப்பாடலும் (புறம்.387) இம்மன்னனைப் பாடிய பெயர்நிலை, பிற தமிழ் மன்னர்க்கு இல்லாதது போலும்.

கலித்தொகை, செல்வத்திற்கு இணையான சொற்களாக உடைமை, வளமை ஆகியவற்றையும் தருகின்றது. உளம் வவ்விய இளையோள்பால் கைக்கிளைத்தலைவன் 'சொல்லிச் சொல்லெதிர் பெறாமை' இதனைத் தருகின்றது. அடுக்கிய தாழிசைகளால் பொருளொப்புமை புலப்படுகின்றது.

தம், வளமையாற் போத்தந்த நுமர் தவறில்லென்பாய்...
தம், உடைமையாற் போத்தந்த நுமர் தவறில்லென்பாய்...
தம், செல்வத்தாற் போத்தந்த நுமர் தவறில்லென்பாய்.....
(கலி.58)

அன்றியும், பொருள், ஆக்கம் எனவும் செல்வத்தைக் குறித்துச் சொற்கள் இடம்பெற்றன. பொருள் இன்மை வறுமை எனவும், ஈகைத் திறமுடையான் பெறும்செல்வம் ஆக்கம் எனவும், பொருந்துவதாகத் தெரிகின்றது.

பொரு ளிலான் இளமைபோல் புல்லென்றாள் வைகறை
அருள் வல்லான் ஆக்கம்போல் அணிபெறும்....
திறஞ் சேர்ந்தான் ஆக்கம் போல் திருத்தகும்... (கலி.38)

திரு, வெறுக்கை எனும் சொற்களும் செல்வம் பற்றியன.

பெருந்திரு நிலைஇய வீங்குசோற் றகன்மனை (கலி.83)

பாணர் புரவல பரிசிலர் வெறுக்கை (பதிற்.65)

புறநானூற்றை நோக்க, கூழ், சீர், கொண்டி என்பதும் செல்வச் சார்பு காட்டுவதாகத் தோன்றுகின்றது. பிற பொருண்மைகளும் இச்சொற்கள் சிலவற்றிற்கு உள்ளமை எண்ணத்தக்கது.

வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர் (புறம்.126)

நெடுவே ளாதன் போந்தை யன்ன
பெருஞ்சி றருங் கொண்டியளே (புறம்.338)

தைஇத் திங்கட் டண்கயம் போலக்
கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர் (புறம்.70)

வேந்தரும் விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும்
அருகா தியும் வண்மை (புறம்.320)

## செல்வங்கள்

பொருளும் பிற பலவும் செல்வமாக அமைந்து பன்மை காட்டுகின்றன. தேவை பற்றியும், பயன் குறித்தும் பல்வகைச் செல்வங்கள் அமைவதுடன், சூழ்நிலையும், மனநிலையும் கூட செல்வம் பற்றிய வேறுபட்ட கணிப்புகளைத் தருவதாகக் கொள்ளலாம். எல்லாக் காலத்திற்கும் ஏற்புடைய கருத்துகளாகவும் சில அமைகின்றன.

### உடைமை

உடைமை (Possession) செல்வமாகக் கருதப்படுவது அடிப்படையாகவும், இயல்பாகவும் அமைகின்றது.

படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் (புறம்.188)

எவ்வெவ் உடைமைகள் செல்வநிலை தருகின்றன என்பது இங்கு வெளிப்படப் புலப்படாத போதும் பிற பல குறிப்புகள் செல்வ அடிப்படை எது எனவும் எவையெவை செல்வமாகலாம் எனவும் உணர்த்துகின்றன. மாந்தர் இயல்புக் கேற்பவும், வாழ்நிலைக் கேற்பவும் இவை மாறவும் கூடும்.

## அரசச் செல்வம்

மன்னனைப் பொறுத்தவரை நாடு செல்வமாக அமைகின்றதோ எனும் எண்ணம், 'ஆங்க, நாடு கெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே' (புறம்.35) என்பதிலும், நகர் செல்வமாகுதல் (திருநகர்.புறம்.377) சேரனைப் 'புகார்ச் செல்வ' (பதிற்.73) என்பதிலும் தெரிகின்றது. நெல்லும், விளைபொருட்களும் இவற்றைச் செல்வமாக்குவதை,

தடந்தாட்
பிணிக் கதிர் நெல்லின் செம்மண் மூதூர் (புறம்.97)

வையங் காவலர் வளங்கெழு திருநகர் (புறம்.261)

மடங்கா விளையுள் நாடு (புறம்.200)

போன்ற குறிப்புகள் தெரிவிக்கின்றன.

நாடும் நகரும் மட்டுமன்றி, வீடும் 'திருவுடைத் திருநகர்' (புறம்.379), நன்மனை நெடுநகர் (ஐங்.236) எனச் சுட்டப்படலால் வீட்டின் செல்வநிலையும் கருதத் தக்கது. ஐங்குறுநூற்றுத் தாயின் வேண்டுதல், நாட்டை, வீட்டைச் செல்வமுடையதாக்கும் பொருட்களை உணரச் செய்கின்றன. நெல் முதலிய உழவு விளை பொருட்களும், பொன் போன்ற மதிப்புடைய உலோகக் கனிப்பொருட்களும், இயங்கும் உயிர்ப்பொருளான நிரையும், உழவு மாடும் இதில் உட்படுகின்றன. இவை நாட்டின், சமுதாயத்தின் பொருளாதாரத்தை நிறுவுகின்றன.

நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க (ஐங்.1)

விளைக வயலே (ஐங்.2)

பால் பல ஊறுக பகடு பல சிறக்க (ஐங்.3)

நெல் மலிந்த மனைப் பொன்மலிந்த மறுகிற் (புறம்.338)

பொன்னகர் (ஐங்.247)

பல்லெருத் துள்ளு நல்லெருது நோக்கி
வீறுவீறாயும் உழவன் (புறம்.298)

நிரை செல்வமாகுதல் பற்றியே பகைநாட்டு நிரைகவர்தல் மன்னர், வீரரிடம் அமைவதும் (புறம்.257,258), மாடு செல்வம் எனப் பொருள்படுதலும் (குறள்.400) அமைகின்றன என்பது வெளிப்படை. தன் நாட்டிலும், தான் பாதுகாத்த நாட்டிலும் செல்வமாக அமைந்த இவை, வெல்லப்பட்ட பகை நாட்டில் அழிக்கப்படுவதைப் பதிற்றுப்பத்தும் புறநானூறும் பரவலாகக் காட்டுவது இங்கு எண்ணத் தக்கது. செல்வத்தை அழிப்பதால், பகைவரைப் பொருளிலாதாராக்கி, பொருளாதாரத்திலும் அவரைத் தமக்குக் கீழ்ப்படுத்தி, அண்டிப்பிழைக்கச் செய்யும் (Dependent) நிலையாக இது தெரிகின்றது.

அரசனுக்கு, ஆட்சியே செல்வமாகக் கருதப்பட்டது என்பதனைக் கோவூர் கிழாரின், 'ஓங்கு புகழ் மண்ணாள் செல்வ மெய்திய நும்மோரன்ன செம்மல்' (புறம்.47) எனும் பாடலடிகள் விளக்கும். ஆட்சியும், நாடுமான இச்செல்வம் (பயங் கெழு தாயம், புறம்.135), மன்னர் பரம்பரையின் 'தாயம்' ஆக (நுந்தை தாயம், புறம்.202) அமைந்து உரிமையும் உடைமையும் தொடர்ந்து கிழமை பூண்பதைக் காட்டுகின்றது (புறம்.75). தன் மக்களைப் பகைத்துப் போருக்குத் துணிந்த கோப்பெருஞ் சோழனைப் புல்லாற்றூர் எயிற்றியனார் தெருட்டும்போது இக்கருத்து வெளிப்படுகின்றது.

நீ, உயர்ந்தோ ருலக மெய்திப் பின்னும்
ஒழித்த தாய மவர்க் குரித் தன்றே...
எண்ணில் காட்சி யிளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க் கெஞ்சுவையே
அமர்வெஞ் செல்வ.... (புறம்.213)

இச்செல்வம், பகைவர் வாட, முன் தலைமுறையினரால் ஈட்டப்பட்டதாகவும், இறைவர்க்கு ஒப்பதாகவும் அமைகின்றது.

ஆலமர் கடவு ளன்னநின் செல்வம்.....
ஒன்னார்வாட வருங்கலந் தந்து நும்
பொன்னுடை நெடுநகர்நிறைய வைத்தநின்
முன்னோர்....... (புறம்.198)

இவ்வாறு, ஈட்டி, பரம்பரையாகப் பாதுகாக்கப்படாது, அரசனுடன் அழியும் செல்வ நிலையு முள்ளமையைக் கலித்தொகை உணர்த்தும்.

நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்
இவனிற் றோன்றிய இவையென இரங்கப்
புரைதவ நாடிப் பொய்தபுத் தினிதாண்ட
அரசனோ டுடன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போல்
(கலி.130)

இங்குச் செல்வமாகக் கருதப்படுவது பொருட் செல்வமா அன்றி நயன், வாய்மை, நடுநிலைமை எனும் அறச் செல்வங்களா என்பது உய்த்துணரத் தக்கது. அரசியலறம் அரசின் சிறந்த செல்வம் எனக் கூறலா மெனினும், பகைவென்றதனால், அரசன் செல்வனாதலும் (கலி.105) இன்றியமையாதது போலும். அருங்கல வெறுக்கை (புறம்.146,378) எனும் தொடர் பொன்னணி முதலிய பண்டச் சேர்க்கை அரசுக்குச் செல்வமாகியதைக் காட்டுகின்றது.

அரசர், 'பொது மொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வராக' (கலி.68) அமைந்போதும், அரசன் மட்டுமே செல்வன் என்பதில்லை. 'உலகத்தோரே பலர்மன் செல்வர்' (38) எனும் பதிற்றுப்பத்துத் தொடர் இதனை உணர்த்தும். எனினும் இத்தகு செல்வர்க்கெல்லாம் மேலான செல்வனாக அவன் அமைந்ததைச் 'செல்வர் செல்வ' (பதிற்.59) என்பதும், அவனால் அவனை அண்டினோரும் செல்வராயினரென்பதை 'சேர்ந்தோர் செல்வ' (பதிற்.65) என்பதும் உணர்த்தும். இதனால் 'செல்வத் தோன்றல்' (புறம்.150) என அரசன் சுட்டப்படுகின்றான்.

அரசனின் செல்வம் பல புலவரால் பல்வகையில் சுட்டப்படுகின்றது. தமிழக மன்னர் மூவரும் செல்வராகக் குறிக்கப்

படுகின்றனர் - 'வீயாத் திருவின் விறல் கெழு தானை மூவர்' (புறம்.122), 'முற்றிய திருவின் மூவர்' (புறம்.205). அழியாததும், முழுமையானதாகவும் அமைவதே செல்வம் எனும் எண்ணமும் இங்குப் புலப்படுகின்றது. அன்றியும், 'பாடுநர் கொளக் கொளக் குறையாச் செல்வத்து' (82) எனவும்,

வருநர் வரையாச் செழும் பல் தாரம்
கொளக் கொளக் குறையாது தலைத்தலைச் சிறப்ப (88)

எனவும் பதிற்றுப்பத்து கூறுவதும், எடுக்க எடுக்கக் குறையாது, மிகுவதே செல்வமாதலை உணர்த்தும். அரசனின் செல்வம் பல்லாற்றானும் குறிக்கப்படுவதும் இங்கு எண்ணத் தக்கது.

வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து, வண்டன்
(பதிற்.31)

கொற்றத் திருவின் உரவோர் உம்பல்
முரசு கெழு வேந்த ரரசு கெழு திருவே (புறம்.75)

நள்ளி நின், அசைவி னோன்றா ணசை வள னேத்தி
(புறம்.148)

நின் தாள்படு செல்வங் காண்டொறு மருள (புறம்.161)

மண்கெழு தானை யொண்பூண் வேந்தர்
வெண் குடைச் செல்வம் (புறம்.197)

இசைப் புறனாக நீ யோம்பிய பொருளே (புறம்.29)

விலைவன் போலான், வெறுக்கை நன்குடையன்
(புறம்.152)

## கொடைச் செல்வம்

பெரும்பாலும் அரசச் செல்வம் கொடைச் செல்வ மாவதைப் புறநானூறும் பதிற்றுப்பத்தும் பரவலாகப் பேசுகின்றன. ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற அகப் பாடல்கள், வறுமையிலுழலும் புலவரின் பொருள் வேட்கையையும் பரிசில் கடா நிலையையும் நேரடியாகத் தரும் வாய்ப்புடையனவல்ல ஆதலால் இப்பாங்கு அருகியது. அன்றியும் பலரும் சாரும் - நாடும், அரசச் செல்வத்திற்கும், ஒரு சிலரையே புரக்கும் பெருக்கின் தனி மனிதச் செல்வத்திற்குமுள்ள வேறுபாடும் இதற்குக் காரணமாகலாம். செல்வத்துப் பயனே ஈதல் (புறம்.189) எனவும், உடையோ ரீதலு மில்லோ ரிரத்தலும் கடவது (புறம்.38)

எனவும் செல்வரின் இன்றியமையாப் பண்பாகக் கொடை சுட்டப்படுகின்றது.

பதிற்றுப்பத்து மன்னனைப் 'பரிசிலர் வெறுக்கை' (*38,65*) எனச் சுட்டி அவனே செல்வனாக, செல்வமாக இரப்போர்க் கமைந்ததைக் காட்டும். 'தன்னிற் சிறந்தது பிறிதொன்றின்மையின்' (புறம்.*165*) குமணன் தன்னையே ஈத்ததும் இது. கொடுக்காமல் சேர்த்து வைக்கப்பட்ட செல்வமுடையரசர் புலவரால் பழிக்கப்படுகின்றனர்.

சுவைக் கினிதாகிய குய்யுடை யடிசில்
பிறர்க் கீவின்றித் தம்வயி றருத்தி
உரைசா லோங்குபுக ழொரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்... (புறம்.*127*)

துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வர்
இன்மையி னிரப்போர்க் கீஇயாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே (புறம்.*165*)

கொடையாளியான மன்னன் செல்வம், 'பரிசிலர் செல்வ' மாகின்றது (புறம்.*265*). 'இரவலரைப் புரவெதிர் கொள்ளும் பெருஞ் செய்யாடவர் உடைமை, அவருடைமையாகின்றது' (புறம்.*199*). சோழனின் 'அருங்கல வெறுக்கை' (புறம்.*378*), வஞ்சி பாடியவனுக் காகின்றது. இத்தகு கொடை, நீரற்ற நிலத்தில் 'பெயல் பெய்தன்ன செல்வத்'ததாக அமைகின்றது (புறம்.*381*). பாணர்க்கு 'அகலாச் செல்வமும்' (புறம்.*34*), பாடினிக்கும் விறலிக்கும் பொன் மலரும் (புறம்.*29,126,141,319*), புலவர்க்குப் 'பகடு தரு செந்நெல் போரொடும் நல்கி'யவனுமாக (புறம்.*390*) மன்னன் அமைகின்றான். அருகி, நாட்டின் பொருளாதாரமும் மன்னன் செல்வாதாரமும் சிறப்பாகவன்றி யமைந்ததையும், எனினும் கொடுக்க விரும்பும் மன்னனையும் சங்க இலக்கியம் காட்டும்.

கைப்பொருள் யாதொன்று மிலனே (புறம்.*313*)

நிரப்பாது கொடுக்குஞ் செல்வமு மிலனே
இல்லென மறுக்குஞ் சிறுமையுமிலனே... (புறம்.*180*)

பரிசில் தேர், யானை, பொன், ஆடை, உணவு எனப் பலவாக அமைவது புலப்பட்ட போதும், 'முகனை' (புறம்.*368,369,370,371*) எனும் சொல், அது முகந்து செல்லத்தக்க, எடுத்து - கொண்டு செல்லத்தக்க செல்வமாக அமையுமோ எனும் எண்ணத்தையும்

தோற்றுவிக்கின்றது. அகலாச் செல்வத்திற்கும் இம் முகவைக்கும் வேறுபாடு அமைவதாகத் தெரிகின்றது. பதிற்றுப்பத்தின் பதிகங்கள் மிக வேறுபட்ட பரிசில்களை - செல்வங்களைப் புலவர் பெறுவதாகக் காட்டுவதும் இங்கு எண்ணத் தக்கது.

## தனிமனிதச் செல்வம்

கொடை வழியாக, புலவரும், கலைவல்லாரும் பெற்ற செல்வம், தனியுடைமையாகின்றது எனலாம். எனினும் அவர்கள் கலைச் செல்வராகக் காட்டப்படுகின்றனரே யன்றிப் பொருட்செல்வராக நிலைத்தமை காட்டப்படவில்லை. 'ஓம்பா துண்டு கூம்பாதுவீசி' (புறம்.47), 'எல்லோர்க்கும் கொடுமதி' (புறம்.163) என்ற புலவர் கூற்று அவரைக் கொடைச் செல்வராக்குகின்றது.

தனிமனிதச் செல்வம் பற்றிய குறிப்புகள் ஓரளவு, அருகின. செல்வம், திரு, வெறுக்கை போன்ற சொற்களும் அருகி, பெரும்பாலும் 'பொருள்' எனும் சொல்லே இச் சூழலில் பயின்றதும் எண்ணத் தக்கது. செல்வம், ஆடம்பரச் சார்பும், பொருள், தேவைச் சார்பும் காட்டுகின்றதோ என எண்ணலாம். முன்னதில் விலைமதிப்பும் பெறலருமையும் மிகுதி எனலாம். முன்னது அரசச் சார்பும், பின்னது மக்கட் சார்பும் காட்டும் போலும் எனவும் எண்ணலாம்.

துணையோர் செல்வம் (ஐங்.50) எனவும், கேளிர்கள் நெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள் (கலி.149) எனவும் அகப்பாடல் தருவது தனிமனிதரின் செல்வ நிலை சுட்டியது. அன்றியும் செல்வர்க்கு, பொன் புனை கயிற்ற யானையுடைமையும் அருகி வெளிப்பட்டது (ஐங்.356). குறிஞ்சிக் கலித் தலைவி அடற்பொற் சிரகத்தால் வாக்கி உண்ணுநீர் ஊட்டலும் (கலி.51), மருதக்கலித் தலைவியின் குழந்தையின் அணிகல வருணனையும் செல்வ நிலை புலப்படுத்தும் :

> **(காலவை, சுடுபொன் வளைஇய ஈரமை சுற்றொடு**
> **பொடியழல் புறந்தந்த செய்வுறு கிண்கிணி;**
> **உடுத்தவை, கைவினை பொலிந்த காசமை பொலங்காழ்மேல்**
> **மையில் செந்துகிர்க் கோவை யவற்றின்மேல்**
> **தைஇய பூந்துகில் ஐதுகழல் ஒருதிரை;**
> **கையதை, அலவன் கண்பெற அடங்கச் சுற்றிய**
> **பலவுறு கண்ணுள் சிலகோல் அவிர்தொடி;**
> **பூண்டவை, எறியா வாளும் எற்றா மழுவும்**
> **செறியக் கட்டி ஈரிடைத் தாழ்ந்த**

*பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்*
*மையற விளங்கிய ஆனேற் றவிர்பூண்;*
*தூடின, இருங்கடல் முத்தமும் பன்மணி பிறவுமாங்*
*கொருங்குடன் கோத்த உருளமை முக்காழ்மேல்....*

(கலி.**85**)

கலியில் மருதத் தலைவியின் இல்லே வளமையுடையதாகக் காட்டப் படுகின்றது எனத் தோன்றுகின்றது. செழுங்குடிச் செல்வர் (81) எனவும், கூழுடை நல் இல் (90) எனவும் பதிற்றுப்பத்தும் தருவதை நோக்க, நகர நாகரிகமே செல்வமுடையதாகவும், அதற்கு மாறாகப் பிற நிலப்பகுதிகள் செல்வக் குவிவுக்கு இடமளிக்காதும் அமைந்தன போலும். இது பற்றியே பொருளீட்டச் செல்லும் தலைவனும் தான் வாழ் நிலப் பகுதியைக் கடந்து, (வள்ளலை நாடிப் பழுமரமுள்ளிய பறவை போல் செல்லும் இரவலரைப் போல) செல்வம் மிக்க இடம் நோக்கிச் செல்கிறான்.

## பொருட் செல்வம்

அகமும் புறமும் பொருளைப் பற்றிப் பேசிய போதும், அகத்தின் பாலைத் திணை, பொருள்வயின் பிரியும் தலைவனைக் காட்டி, பொருளுக்கு இடமிகுதி அளிக்கின்றது. வாழ்வியல், மிகுதியாகப் பொருளால் பிணிப்புண்டதால், 'பொருட்பிணி' என்ற தொடரைக் கவிஞர் கையாள்கின்றனர்.

*நின்றதில் பொருட்பிணி முற்றிய* (ஐங்.**336**)

*அருஞ்செயற் பொருட்பிணி பொருந்திரு வுறுக* (ஐங்.**355**)

*ஒழிகினிப் பெருமநின் பொருட்பிணிச் செலவே* (கலி.**4**)

*சேய்நாட்டுப், பிரிந்து செய் பொருட்பிணி....* (கலி.**29**)

'அரும்பொருள்' எனவும் 'விழுப்பொருள்' எனவும் 'ஒண் பொருள்' எனவும் (கலி.150) பொருள் தொடர்பான தொடர்களமைவது, அதன் பெறற்கருமையையும், உயர் தகுதியையும் உணர்த்தி, உலகிலும், வாழ்விலும் அதன் முதன்மையை வலியுறுத்துகின்றது. மிக்க முயற்சியா லீட்டப்படுவதாலும் அரும் பொருளாயிற்று எனலாம்.

*அரும்பொருள் செய்வினை தப்பற்கு முரித்தே* (ஐங்.**302**)

*அரும்பொருள் வேட்கைய மாகி* (ஐங்.**359**)

இதற்கு மாறாக, ஈதற் பொருளும், மகட்கொடையோடு சார்ந்த பொருளும் 'விழுப் பொருளா'கச் சுட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

> இவள் தந்தை, காதலின் யார்க்கும் கொடுக்கும் விழுப்பொருள்
> யாது நீ வேண்டியது (கலி.61)

> வீத லறியா விழுப்பொருள் நச்சியார்க்
> கீதன்மாட் டொத்தி (கலி.86)

> முழங்கு கடன் முழவின் முசுறி யன்ன
> நலஞ்சால் விழுப்பொருள் பணிந்து வந்து கொடுப்பினும்
> புரைய ரல்லோர் வரையல ளிவளென.... (புறம்.343)

> துறை நணி மருதத் திறுக்கு மூறொடு
> நிறைசால் விழுப்பொருள் தருத லொன்றோ (புறம்.344)

மகட்பாற் காஞ்சியில், 'இவள் தன் ஐ மாரே செல்வம் வேண்டார்' (புறம்.345) என்பதால் செல்வமும் விழுப்பொருளும் இணைவதாகக் கருதலாம்.

பொருளும் பொன்னும் இணைவுறுவதாகவும் கருத முடிகின்றது. கபிலர், 'கோடி பல வடுக்கிய பொருநுமக் குதவிய நீடு நிலை யரையம்' (புறம்.202) என மொழிந்ததை உரையாசிரியர், 'பல கோடியாக அடுக்கப்பட்ட பொன்னை நுங்களுக்கு உதவிய நீடிய நிலையையுடைய அரையம்....' என விளக்குவது இவ் எண்ணத்தைத் தருகின்றது.

### பொருளீட்டல்

பொருளீட்டற்காகச் செல்லும் தலைவன் செலவு (பயணம்), 'வரவா'க அமைகின்றது. இப்பொருள் வரவு பற்றி அவர் செல்லல் (துன்பம்) ஒழிகின்றது. செல்வம் சேகரித்தல், அல்லது பொருளீட்டல் எளிய காரியமாகத் தரப்படவில்லை. பொருளின் அருமையைக் கலித்தொகை பலபடப் பேசுகின்றது.

> அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்பப்
> பிரிந்துறை சூழாதி யைய....... .........
> சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவா (கலி.18)

பரிசிலர் முகந்து செல்லும் 'முகவை' போலன்றிப் பொருளீட்டல் கடினமாக அமைவது இங்குப் புலப்படுகின்றது. முயற்சி யிருப்பினும் செல்வம் எல்லோரிடமும் சேராமையும் சிந்திக்கப்படுகின்றது.

கிழவ ரின்னோ ரென்னாது பொருடான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்
அன்ன பொருள்வயிற் பிரிவோய்...... (கலி.21)

இவ்வாறு பொருளுக்கும், பொருட் செயலுக்கும் எதிரான கருத்துகள் தலைவன் பிரிவைத் தாங்கலாற்றா அகப் பெண் பாத்திரங்கள் கூற்றில் வெளிப்படுவது சிந்திக்கத் தக்கது (எனைப் பயஞ் செய்யுமோ கொண்க நின் பிரிவே, ஐங்.305). வாழ்வியலுக்கு இன்றியமையாததும் வேண்டப்படுவதுமாகிய பொருள், நன்மையற்றதாகவும் இனிமையற்றதாகவும் சுட்டப்படும் இந்நிலையால் பொருளாதார முரண் சிந்தனை பொருந்துகின்றது.

நன்றில் கொண்க நின் பொருளே (ஐங்.307)

இனிதோ, இறுவரை நாட நீ இறந்து செய் பொருளே
(ஐங்.309)

நம்வயின், மெய்யுற விரும்பிய கைகவர் முயக்கினும்
இனிய மன்ற தாமே
பனியிருங் குன்றஞ் சென்றோர்க்குப் பொருளே (ஐங்.337)

இச்சூழல், 'காதற் செல்வம்' பற்றிய எண்ணத்திற்கு அடிகோலுகின்றது.

## காதற் செல்வம்

செல்வம், 'அறனும், பொருளும், இன்பமுமாகிய மூன்றும்' செய்யவல்லது எனப் புறநானூறு (28) கூறினும், அகப் பாடல்கள் இன்பமே பொருளெனவும், காதலியே செல்வமெனவும் கருதிய பாங்கை வெளிப்படுத்துகின்றன. மாந்தருக்கேற்பச் செல்வம் பற்றிய கருத்து மாறுபடலாம் என்பதை இச்சூழல் உணர்த்தும். கலித்தொகையின் பாலைப் பாடல்களில் சேரமன்னன் பெருங்கடுங்கோ, 'பொருள் பொருளா, காதல் பொருளா' என இக்கருத்தை வலியுறுத்தல் நோக்கத் தக்கது.

மலையிறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
நிலைஇய கற்பினாள்... பிரியாமை பொருளாயினல்லதை..
கல்லிறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
புல்லகம் பிரியாமை பொருளாயி னல்லதை.....
கடனிறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ....
தடமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை;

(கலி.2)

இவ் ஆய்வுக்கு ஒரு படி மேலாகச் சென்று, பொருளினும் சிறந்தது காதலி-காதலெனவும், தலைவி பொருளாக மதிக்கத் தக்கவ ளென்பதும், இல்வாழ்வே பொருளென்பதும் பொருந்துகின்றன.

அருஞ்சுரம்
இறந்து நீர் செய்யும் பொருளினும் யாமுமக்குச்
சிறந்தன மாத லறிந்தனி ராயின் (கலி.5)

எம்மையும் பொருளாக மதித்தீத்தை (கலி.14)

விழையக் கூடின்.... அது மனும் பொருளே (கலி.8)

பொருள் செய்வதைவிட, தலைவிக்கு அருள் செய்வதே சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. பொருள் செயப் பிரிதலால், தலைவிக்கு ஏற்படும் இழப்பு, இப்பொருளால் மீட்க முடியாத நிலையினதாகச் சுட்டப்படுகின்றது.

புரிபுநீ புறமாறிப் போக்கெண்ணிப் புதிதிண்டிப்
பெருகிய செல்வத்தாற் பெயர்தர லொல்வதோ
செயலையந் தளிரேய்க்கு மெழினல மந்நலம்
பசலையா லுணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்
(கலி.15)

'பொருளல்லாற் பொருளு முண்டோ' (கலி.14) எனவும், 'செய்பொருள் முற்றிய வளமையா னாகும் பொருளிது' (கலி.12) எனவும், ஈட்டுதலுற்ற செல்வம் பற்றிய தலைவன் கருத்திற்கு மாறாக, இளமையும் காமமும் இருப்பின் விரும்பத்தக்க பிற செல்வம் வேறில்லை எனும் எண்ணம் முத்தாய்ப்பாக அமைகின்றது.

இளமையுங் காமமு மோராங்குப் பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ (கலி.18)

தலைவிக்குத் தலைவனும், அவனுக்கு அவளும் செல்வமாக அமைந்தனர் எனலாம். 'கனவினான் எய்திய செல்வத் தனையதே ஐய எமக்கு நின் மார்பு' (கலி.68) என்பதுடன், தலைவியின் எழிலும் பசப்பும் 'பொன்'னாகக் காட்டப்படுவதும் (சிலேடை?) இவ் எண்ணத்தை அளிக்கின்றன.

என்செய்வாங் கொல் இனி நாம்
பொன் செய்வாம் (கலி.60)

விரிந்தொலி கூந்தால் கண்டை யெமக்குப்
பெரும் பொன் படுகுவை பண்டு......

பெரும்பொன் படுக
முழுவதுடையமோ யாம்....
இரும்பீர் வடியன்ன உண்கட்கும் எல்லாம்
பெரும்பொனுண் டென்பாயினி.....
முத்தேர் முறுவலாய் நீபடும் பொன்னெல்லாம்
முத்தி யெறிந்து விடற்கு...... (கலி.64)
என்செய்தாள் கொல்லென்பீர் கேட்டீமின்
பொன்செய்தேன் (கலி.143)

## குழந்தைச் செல்வம்

அகத் தலைமக்கட்குக் காதல் செல்வமாக அமைந்தாலும், அகம், புறமாகிய இரு நிலையிலும் 'மக்கட் பேறு' செல்வமாகக் கருதப்படுவதாகத் தெரிகின்றது. 'ஈன்று புறந் தருத'லால் (புறம்.312) போர்த் தொழிலுக்கேற்ற உழைப்பாளி உருவாகுவதும், உழைப்பு பொருளாதாரத்தை நிறுவுவதும் இணைத்துச் சிந்திக்கத் தக்கன. இதனால், குழந்தை தனிமனிதச் செல்வமாக மட்டுமன்றி நாட்டுச் செல்வமாகவும் அமையத் தக்கதென எண்ணலாம்.

பிசிராந்தையாரை, 'யாண்டு பலவாக நரையில வாகுதல் யாங்காகியர்' (புறம்.191) என வினவியபோது அவர் தனக்குப் பொருளாதார நிறைவு (சுபிட்சம்) இருப்பதாகக் கூறவில்லை; ஆனால் 'மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்' எனக் குழந்தைச் செல்வத்தையே சுட்டித் தொடங்கினார். எத்துணைப் பெருஞ்செல்வராயினும், 'மயக்குறு மக்களை யில்லோர்க்குப் பயக்குறை யில்லைத் தாம் வாழும் நாளே' (புறம்.188) என மன்னனொருவனும் பிள்ளைப் பேற்றின் பெருமை கூறினான்.

குழந்தை, செல்வன் எனவும், செல்வம் எனவும், பொன் போன்றதெனவும் குறிக்கப்படுகின்றது.

செல்வக் கொண்கன் செல்வன் (ஐங்.104)

இக் குழந்தையாகிய செல்வம் பற்றியே தந்தையும் 'செல்வனாக', செல்வமுடையவனாகச் சுட்டப்பட்டிருக்கலாம்.

எம்இல்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மா வாராதே (புறம்.273)

மூத்த பிள்ளையாராகிய முருகனை யுடைமையின், சிவன், 'செல்வன்' எனப்பட்டிருக்கலாம்.

ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வருமென் உயிர் (கலி.81)

ஆலமர் செல்வன் அணிசார் மகன் விழா (கலி.83)

'தந்தை பெயரன்' (ஐங்.403) எனக் கால்வழியாக மகவமைவதும் எண்ணத்தக்கது. கலித்தொகை, பெண் மகவைச் செல்வமாகச் சுட்டியதுடன், பெற்றோர் அல்லது குடியின் வறுமையை நீக்க வந்த செல்வமாகவும் கருத இடனளிக்கின்றது.

இவளே....... நல்கூர்ந்தார் செல்வ மகள் (கலி.50)

ஈங்கிதோர், நல்கூர்ந்தார் செல்வ மகள் (கலி.56)

பெருஞ்சித்திரனாரின் புறப்பாடல், 'யாயும் பசந்த மேனியொடு படரட வருந்தி மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்' (159) எனக் குழந்தைப் பெருக்கை அருகிச் சுட்டினும், இறைவனை வேண்டிப் பெறு நிலையில் குழந்தை - 'தவப்புதல்வி' அரியதாகவும் அமைந்ததை ஐங்குறுநூறு தரும்.

குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற வெள்வளைக் குறுமகள் (257)

பெருஞ்சி ரருங் கொண்டியளே......
ஓரெயின் மன்னன் ஒருமட மகளே...... (புறம்.338)

எனப் புறநானூறும் செல்வ மகளைக் காட்டும்.

'பொன்போற் புதல்வன்' என ஐங்குறுநூறும் (265), புறநானூறும் (9) புதல்வன் செல்வமாதலைக் காட்ட, புறநானூறே 'பேணித் தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும்' (புறம்.9) அதன் தேவைப் பயன்பாட்டையும் சுட்டுகின்றது. இதனால் செல்வ மகனின் இறப்பு, தாய்க்கு இழப்பாகவும் அமைகின்றது.

என்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளும்
ஆனாது புகழு மன்னை
யாங்காகுவள் கொ லளிய டானே (புறம்.254)

## கல்விச் செல்வம்

'கேடில் விழுச்செல்வம் கல்வி' (குறள்.400) என வள்ளுவர் கூறியது போலத் தெளிவாகவும் வெளிப்படவும் கல்வி என்பது செல்வம் எனும் கருத்து புலப்படாத போதும் சங்க நூல்கள் கல்விச் சிறப்பையும் கல்வி நிலையையும் கூறுவதால் இது உய்த்துணரத்தக்கது.

'பொருள்' எனப்படும் செல்வத்தையும் மிகுதியாகக் கொடுத்துப் பெறத்தக்கதாகக் கல்வி அமைந்து, பொருளினும் சிறப்புடையதாகின்றது. 'உற்றுழியுதவியு முறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' (புறம்.183) எனப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறுவதுடன், கலித்தொகையும் ஓதலைத் தருவது எண்ணத்தக்கது.

> பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
> மையற்ற படிவத்தான் (மறுத்தர லொல்வதோ) (கலி.5)

செவ்விய கல்வி கற்ற 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரால்' (புறம்.191) ஊர் சிறப்பதுடன், கல்வியாளன் பால் தாயும், அரசும் சார்பு கொண்டு, அக் கல்வியால் கீழ்ப்பாலோனும் மேலோன் ஆகச் செய்கின்றது. கேள்வி முற்றிய வேள்வி அந்தணர் (361) எனவும் சில சொல்லாற் பல கேள்வியர் (360) அரசர் எனவும், ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி (73), வெறுத்த கேள்வி விளங்குபுகழ் (53) புலவன் எனவும், சில்செவித்தாகிய கேள்விப் பாணன் (68) எனவும் புறநானூறு பலர் கல்வியாளராக அமைவதைக் கூறுவதும், கல்வியறிவினர் ஒளியோர் (53) எனப்படலும் இணைத்து நினைக்கத் தக்கன. செவ்வையாகக் கொள்ளப்படாக் கல்விச் செல்வம் அழிவுறுகின்றது.

> கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண்
> தப்பித்தான் பொருளே போல் தமியவே தேயுமால்
> (கலி.149)

## செல்வ இயல்பும் நிலையும்

பல்வகைச் செல்வங்கள் பற்றிய இவ் எண்ணங்களுடன் பொருட் செல்வத்தின் ஒருசில இயல்புகள் தொடர்பான கருத்துகளும் இவ் இலக்கியங்களில் அமைகின்றன.

பொருள், நில்லா-நிலைக்கா இயல்பினது. யாழ்போன்றும், திரு போன்றும், அரசு போன்றும் அவற்றை விடவும் இது நிலையில்லாததாக வலியுறுத்தப்படுகின்றது.

> யாழினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ....
> திருவினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ.....
> அரைசினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ...
> (கலி.8)

பொருட்செயலில் ஈடுபட்ட தலைவனைச் செலவழுங்குவிக்கும் அகச் சூழலன்றிப் புறமும் செல்வ நிலையாமையைத் தந்தது. அரசர் செல்வமும் நிலையாது எனவும், இதனால் அரசனுக்குச் செல்வம் துணையல்ல என்பதும் அமைகின்றன.

> அன்னோர் செல்வமு மன்னி நில்லா
> தின்னு மற்றதன் பண்பே (புறம்.360)

> துணையே
> வைத்த தன்றே வெறுக்கை (புறம்.357)

செவ்வையான வழியிலன்றி ஈட்டப்படும் பொருட் செல்வம் 'தேயும்' இயல்பினதாகக் கூறப்படுகின்றது.

> விச்சைக்கண்
> தப்பித்தான் பொருளே போல் தமியவே தேயுமால்...
> கேளிர்கள் நெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
> தாளிலான் குடியேபோல் தமியவே தேயுமால் (கலி.149)

வரம்பிகந்து நச்சப்பட்ட பிண்டம் அனுபவிக்கப்படாது கெடுதலைப் புறநானூறு (184) காட்டும். செல்வமுடையோரால், அது அனுபவிக்கப்படாது அவரைத் தப்புதலும் கூடும் என்பதையும் இந்நூல் கூறும் (189).

இதற்கு மாறாக, செல்வம் பெருகும் இயல்பினதாகவும் அமைகின்றது. திதின்மையும், மடியின்மையும், உழைப்பும் காரணமாகின்றன.

> திதிலான் செல்வம்போல் திங்கரை மரன் நந்த (கலி.27)

> மடியிலான் செல்வம் போல் மரன் நந்த (கலி.35)

> பாண்டியஞ் செய்வான் பொருளினும்
> ஈண்டுக இவள் நலம் (கலி.136)

தவறாக ஈட்டப்பட்ட பொருள், உடையோர்க்கு நன்மை யன்றி எக்காலமும் தீமையே பயக்கின்றது.

> செம்மையி னிகந்தொரீஇ பொருள்செய்வார்க் கப்பொரு
> ளிம்மையு மறுமையும் பகையாவ தறியாயோ (கலி.14)

பொருள், அரிதாய அறனெய்தி யருளியோர்க் களித்தலும் தரும் (கலி.11) என்பதால், செல்வத்துப் பயன் ஈதலாக அமைகின்றது

(புறம்.189). ஈதலில் குறைகாட்டாது அறனறிந் தொழுகிய தீதிலான் செல்வம் (கலி.27) செழிக்க, 'நாம் உண்போம்' எனச் சேர்த்த செல்வம் இழக்கப்படுகின்றது. 'செல்வம் படியுண்பார் நுகர்ச்சி போல் பல்சினை மிஞிறார்ப்ப' (கலி.35) என்பதில் நுகர்ச்சி அல்லது துய்ப்பு செல்வச் சார்பில் அமைகின்றது வெளிப்படுகின்றது. அருந்தவமும் (கலி.30), நல்வினையும் (புறம்.214) இம்மை-மறுமை நுகர்ச்சி தருவனவாக அமைவது தரப்படல் சுட்டத் தக்கது. துறவுச் செல்வமும், மறுமைச் செல்வமும் பற்றிய எண்ணம் இங்கு இணைகின்றது.

செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்.... (புறம்.18)

வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட்டனரே காதல ரதனால்
விட்டாரை விடாஅ டிருவே
விடாஅ தோரிவள் விடப்பட்டோரே (புறம்.358)

பொருள், எளியதாகவன்றி யரியதாக அமைந்ததும் 'செல்லா துயங்கி யிருந்தார்க் குயர்ந்த பொருளும் அரிதின்' (கலி.92) என்பதில் தெரிகின்றது.

சமுதாயத்தின் செல்வநிலை வெளிப்பாடாக விழா அமைகின்றது எனலாம். செழிப்பும், பாதுகாப்பும், மகிழ்ச்சியுமாக இது இணைகின்றது.

சாறுபடு திருவின் நனைமகிழானே (பதிற்.65)

ஒலித்தலை விழவின் மலியும் யாணர் நாடு (பதிற்.22)

இந்திர விழவும் (ஐங்.62), காமன் விழாவும் (கலி.30,35), முருகன் விழாவும் (கலி.83) பிறவும் அறியப்படுகின்றன.

## வறுமை

செல்வத்தை நோக்க, வறுமை பற்றிய எண்ணங்களும் குறிப்புகளும் குறைவாகவே இந்நூல்களில் அமைகின்றன. இதனால், வறுமை குறைவாக இருந்தது எனவோ, அதனை மிகுத்துப் பேசுவதைப் புலவர் பரவலாகத் தேர்ந்துகொள்ளவில்லை எனவோ கருதலாம். புலவரும், கலைஞர்களான இரவலரும், பரிசிலரும் வறுமைச் சூழலில் காட்டப்படுமளவிற்குப் பொதுமக்கள் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை. பாலையின் ஆறலைதல் வேறுபாடாகக் கருதக் கூடும்; இது வறுமை பற்றியா எனவும் சிந்திக்கலாம். உழைக்கும் மக்கள்

வறுமையடையவில்லை எனவும், கலைஞர் புரபபாரின்மையால் வறுமையுற்றனர் எனவும் கூறல் இயலலாம்.

வறுமையும், செல்வம் போன்றே நிலையானதாக அன்றி இவையிரண்டும் வெறும் நிலைகளாகவே (Stages) அமைந்தமை வெளிப்படுகின்றது. இரவலரின் முன்னிலையும், பின்னிலையும் இவ் உண்மையை உணர்த்துகின்றன. அன்றியும், செல்வராக இருப்பவர் பின்பு வறுமையுறவும் கூடும் என்பதையும் காணமுடிகின்றது. கால வேறுபாட்டுடன் இவை அமைகின்றன.

செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவர்
ஒல்கிடத் துலப்பிலா உணர்விலார் தொடர்புபோல்
(கலி.**25**)

வில்லோர் வாழ்க்கைச் சீறூர் மதவலி
நனி நல்கூர்ந்தன னாயினும்..... (புறம்.**331**)

பிசிரோ னென்பனென் னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே (புறம்.**215**)

அலத்தற் காலை யாயினும், புரத்தல் வல்லன் (புறம்.**103**)

இவற்றில், செல்வத்துக்கு மாறாக ஒல்குதல், அல்லல் என்பன தரப்பட்டு, அலத்தல், நல்குரவு என்பதனுடன் மிடிமையைக் குறிக்கின்றன. செல்வமும் வறுமையும் ஈரெல்லையாகத் தொடர்புறுதல் இங்கமைவது போல, இவை இணைதலை, ‘நல்கூர்ந்தார் செல்வ மகள்’ என்பது காட்டுகின்றது எனலாம்.

வறம், வறுமை எனும் சொல் நிலைகள், வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவைகள் நிறைவடையாத ‘வறட்சி’ நிலையை உணர்த்தி உருவாயின எனலாம். நிலத்திற்கு வளம் தரும் நீரின்மை வறமாவது இணைத்து நினைக்கத் தக்கது.

அருவி அற்ற பெருவறற் காலையும் (பதிற்.**28**)

கழைகாய்ந் துலறிய வறங்கூர் நீளிடை (புறம். **370**)

அருவி மாறி யஞ்சுவரக் கடுகிப்
பெருவறங் கூர்ந்த வேனிற் காலை (புறம்.**224**)

வறுமை நீக்கிய மன்னன் ஈகை, மழையாகச் சுட்டப்படுவது இங்கு இணைத்துக் கருதத்தக்கது (புறம்.159, 160).

வாழ்வுக்குத் தேவையான அடிப்படை உணவுகூட இன்மை வறுமையாக அமைகின்றது.

> உண்ணா வறுங்கடும்பு உய்தல் வேண்டின் (புறம்.181)
>
> வைகலும், வல்சி இன்மையின் (புறம்.211)

இதனால் உணவு, பசிப்பகையாகவும் (புறம்.181), ஈவோன் பசிப் பகைஞனாகவும் (புறம்.181), பசிப்பகை கடிதல் வல்லானாகவும் (புறம்.400), பசிப்பிணி மருத்துவனாகவும் (புறம்.173) அமைகின்றான். உடையும், தோற்றமும் வறுமையை யுணர்த்துவதுடன், உணவும் அதனை வெளிப்படுத்தலாம்.

> குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
> முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
> நீருலையாக வேற்றி மோரின்
> றவிழ்பத மறந்து பாசடகு மிசைந்து (புறம்.159)

குருகு உடைத்து உண்ட வெள்ளகட்டு யாமையை, அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டுவதும் (ஐங்.81), கலையுணக் கிழிந்த முழவு மருள் பெரும்பழம் சிலைகெழு குறவர்க்கு அல்கு மிசைவாகுதலும் (புறம்.236), பறவை விலங்குகளால் உண்டொழியப் பட்ட பொருள் மனிதர்க்கு உணவாதலைக் காட்டி வறுமையை உணர்த்தும். 'என்னை புற்கை யுண்டும் பெருந்தோளன்னே' (புறம்.84) என வறுமையுற்ற தலைவன் உணவும், 'குடுமிக் கோமாற் கண்டு, நெடுநீர் புற்கை நீத்தனம் வரற்கே' (புறம்.64) எனும் விறலியாற்றுப்படையும் புல்லரிசிக் கூழான நீர்வடிவ எளிய-வறிய உணவைக் காட்டும். இறந்தோர்க்கு ஈயப்படும் உணவும் (புறம்.232,234,360,363), விதவையின் உணவும் (புறம்.246,250) புல்லியதாக அமைவது இங்கு இணைத்துக் கருதத்தக்கது; பொருளாதாரத் தாழ்வும், ஏழ்மையும் இவற்றில் புலப்படக் கூடும்.

எனினும் சில சூழல்கள், செல்வம் இகழப்படுதலையும் அல்லது போற்றப்படாமையையும், மாறாக வறுமை ஏற்றி மொழியப்படலையும் காட்டுகின்றன. ஈயப்படாச் செல்வமும், பொருள் வறுமையிருப்பினும் மன வறுமையில்லாமையும் இதற்குக் காரணமாகலாம்.

> மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்தும்
> உணர்ச்சி யில்லோர் உடைமை யுள்ளேம்
> நல்லறி வுடையோர் நல்குர
> வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே (புறம்.197)

செல்வமிருந்தும், ஈயாமையால் 'மனவறுமை' யமைந்ததைக் கலித்தொகையும் கூறும்.

சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி (10)

(உரவுத் தகை மழுங்கித் தன் இடும்பையா லொருவனை
இரப்பவன் நெஞ்சம்போற் புல்லென்றுப் புறமாறிக்)
கரப்பவன் நெஞ்சம்போல் மரமெல்லாம் இலைகூம்ப (120)

வறுமை, பல்வகையாகவும் பல் நிலையிலும் கொடியதாக, துன்பம் தருவதாகக் காட்டப்படுகின்றது. இளமையிருப்பினும், வறுமை, வாழ்க்கையை அனுபவிக்கத் தடையாக இருக்கின்றது. வறியவ னிளமைபோல் வாடிய சினை (10), எனவும் பொருளிலான் இளமை போற் புல்லென்றாள் (38) எனவும் கலித்தொகை இதனைத்தரும்.

வறுமை, நிரயம் போன்று கொடியது எனவும் (புறம்.376), பாம்பு போலத் துன்பம் தருவது எனவும் (புறம்.382), கல்குயின்றது போல் நீங்காதது எனவும் (புறம்.196), புறநானூறு உணர விரிக்கின்றது. 'என் அறிவு கெட நின்ற நல்கூர்மையே' (புறம்.266) என்பதில் பசி வரப் பத்தும் பறப்பது போல, வறுமை, அறிவு போன்ற நற்பாங்குகளையும் அழிப்பது வெளிப்படுகின்றது. வறுமையுற்றதால், விருந்துக்கு அஞ்சுதலும் இப்பாடலில் தரப்படுகின்றது.

வறுமையைக் குறிக்கும் சொற்கள் பல அதன் தன்மையினையும் உணர்த்த வல்லவையா யிருக்கின்றன. (செல்வம்/ பொருள்) இல்லாமையே வறுமை என்பதை 'இன்மை' எனும் சொல்லால் அது குறிக்கப்படும் நிலை உணர்த்தும் (புறம்.199).

இரப்போர்க் கீயா வின்மையா லுறவே (புறம்.72)

வயிரியர், இன்மை தீர்க்குங் குடிப் பிறந்தோயே (புறம்.164)

இதனடிப்படையில் வறியவர் 'இல்லோர்' ஆகின்றனர் (புறம்.38,55).

என்றும், உண்டாயிற் பதங்கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன் (புறம்.95)

வறுமை, அது உடையவரைச் செயலறச் செய்வதால் கையறவு (கையாறு) எனப்படுதலைப் 'பிறர் கையறவு தான் நாணுதலும் (157)

எனும் புறநானூற்று அடி காட்டும். மேலும், வறுமையும் துன்பமும் இணைந்து செல்வதால் துன்பத்தைக் குறிக்கும் பல சொற்களும் வறுமை எனப் பொருள்படுவதை இந் நூல்கள் வழித் தெரியமுடிகின்றது.

அல்லல் - செல்வன் கடைக்கொளச் சாஅய்ச் சான்றவர் அல்லல் களைதக்க கேளி ருழைச்சென்று (கலி.61)

அலர்தல் - ஆற்றுதல் என்பதொன் றலர்ந்தவர்க் குதவல் (கலி.133)

அற்றம் - இரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவண் உள்ளி வந்தனென் யானே (புறம்.158)

இடும்பை - இடும்பையால் இன்மை யுரைத்தார்க்கு.... (கலி.43)

உரவுத்தகை மழுங்கித்தன் இடும்பையா லொருவனை இரப்பவன் நெஞ்சம் போல (கலி.120)

புன்கண் - (பதிற்.57; கலி.47,61) இரவலர் புன்கண் தீர (பதிற்.54), புலனுழு துண்மார் புன்க ணஞ்சித் தமதுபகுத்துண்ணும் (புறம்.46)

வறுமை, பயனற்றதும் பொலிவற்றதுமாதலால் புன்மை எனவும் (நின்னினும் புல்லியே மன்னே - புறம்.141), தனிமைப்படுத்துவதால் புலம்பு எனவும் (பெருங் கையற்ற வெம் புலம்பு முந்துறுத்தே - புறம்.210), தளர்ச்சி தருவதால் ஒற்கம் எனவும் (ஒக்க லொற்கம் சொலிய - புறம்.327; கலி,149) குறிக்கப்பட்டது போலும்.

வறுமை காரணமாக இரப்பும் இரவலரும் உருவாகியமையைப் புறநானூறு முதலியன காட்டும். எனினும் பெருமிதம் குன்றாப் புலவரிரப்பை, 'இரவலர் புரவலை நீயு மல்லை' (புறம்.162), 'ஈயேன் என்றல் அதனினுமிழிந்தன்று' (புறம்.204) எனும் சொல்லும் - அறிவுரையும் விளக்கும். வாழ்வுக்குத் தேவையான பொருளும் (புறம்.364), கனவிற் கண்டன்ன செல்வமும் (புறம்.377,387), கேட்டதெல்லாமும் (புறம்.171) அளித்து மன்னர் புரந்ததால், இரவலர் வாழ்வு 'பழுமரம் உள்ளிய பறவை' (புறம்.370,173,47,199,209) போலமைகின்றது. அரசச் செல்வம் இவர்களைக் கவர்ந்ததை,

நின், பலர் புகழ் செல்வம் இனிது கண்டிகுமே (பதிற்.11)

கேட்டற் கினிது நின் செல்வம், கேட்டொறும்
காண்டல் விருப்பொடு..... (பதிற்.12)

என்பன காட்டும்.

செல்வக் குவிப்பும், செல்வத்தை நோக்கிய செலவும் ஒரு பக்கமும், செல்வத்தை ஈந்து புரத்தலும், அதை ஏற்கும் வறிய இரவலர் மறுபக்கமுமாக அமைந்து, இன்றுள்ள செல்வ - வறுமை நிலை அன்றும் இருந்ததை உணர்த்துகின்றன.

---

* இக்கட்டுரைக்குப் புறநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றின் குறிப்புகளும் பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகியவற்றின் கருத்துகளும் பயன்கொள்ளப் பட்டுள்ளன.

# பாரதியும் பொருளாதாரமும்

## (உரைநடை வழி)

### முன்மொழி

பாரத நாட்டு விடுதலையும், சமுதாய முன்னேற்றமும், சாதிக்கட்டு நீக்கமும், மொழியுணர்வும் மக்கள் நேயமும் கொண்டு பாடியும், எழுதியும், உழைத்தும் இயங்கிய பாரதியாருக்குப் பொருளாதாரம் பற்றிய எத்தகு சிந்தனை அமைந்தது எனக் காண முயலுதல் பொருத்தமுடையதாகலாம். உலக அறிவும், நாட்டுணர்வும், சுற்றிலும் வாழ்ந்த மக்கள் வாழ்வும் மட்டுமன்றி, அவர் வாழ்வின் தன்னனுபவமும் பொருளாதாரம் பற்றிச் சிந்திக்கும் வாய்ப்பை, அறியும் வழியை அவருக்கு நல்கியிருக்கலாம். இவ் எண்ண அனுபவ வெளிப்பாடுகள் கவிதையிலும், உரைநடையிலும் இடம்பெற வாய்ப்புளது. கதை, புதினம் போன்ற புனைவு உரைநடைகளில் மட்டுமன்றி, கட்டுரைகளிலும், பத்திரிகையாளராக இருந்ததால் அவற்றின் பகுதிகளிலும் இவை அமையலாம்.

பலபோதும் வறுமையில் உழலும் நிலையிருந்ததால், அவர் தனிமனிதப் பொருளாதாரம் பற்றிச் சிந்தித்திருக்கக்கூடும். மக்கட் சமுதாயத்தைப் பற்றிய மனக்கவலையுடையவராக அமைந்ததால், சமூகப் பொருளாதாரம் குறித்தும் எண்ணியிருக்கலாம். நாட்டுப்பற்றும் நாட்டு நிலை பற்றிய அறிவும் நாட்டின் பொருளாதாரச் சிந்தனையையும் வழங்கியிருக்கலாம். முதல் உலக யுத்த காலம், வெளிநாட்டார் ஆதிக்கத்தின் - ஆட்சியின் கீழுள்ள அடிமை வாழ்வு எனும் சூழல் காரணமாக, இந்தியா கொண்டிருந்த பொருளாதாரச் சீர்கேடு, தாழ்நிலை, சமநிலையின்மை இவற்றைக் கண்டு காட்டியிருக்கலாம். இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் சாதன வளர்ச்சிச் சூழலால், பத்திரிகை முதலியன வழி, உலகில் மக்களின் வறுமை, பஞ்சம், பட்டினி நிலைமைகளையும், உழைப்புக் கடுமை-கொடுமைகளையும் கேட்டும், அறிந்தும், ஏற்ற சிந்தனைகளைத் தந்திருக்கலாம்.

இத்தகு எண்ணங்களைக் கவிஞர் எச்சூழலில் மிகுதியாகத் தருகின்றார்? கவிதையிலா - உரைநடையிலா - எவ் இலக்கிய நடையில் பரவலாகத் தருகின்றார்? எந்த அளவுக்குப் பத்திரிகையை ஊடாகக் கொண்டார்? பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்தபோதா, பிரஞ்சுப் புதுச்சேரியிலிருந்தபோதா இதுபற்றிய எண்ணங்களுக் மிகுதியாக இடம் அளித்தார்? போன்ற பல தனிப்பார்வைக்கு உரியன.

## பாரதி : பொருள் - சொல், இடம்

கவியாற்றல் காரணமாக ஒன்பது வயதில் 'பாரதி'ப் பட்டம் பெற்ற கவிச்செம்மல், 'பொருளாதாரம்' என்ற சொல்லைப் பயன்கொண்டதாகத் தெரியவில்லை. ஆயின் இத்துறையைக் (Economics) குறிக்க 'பொருள் நூல்' என்ற தொடரைச் சமூகக் கட்டுரைகளில் தேசியக் கல்விபற்றிப் பேசுமிடத்தும் (ப.59), 'செல்வ நிலை' என்பதைச் 'சக்கரவர்த்தினி' கட்டுரையொன்றிலும் (ப.31) கையாள்கின்றார்.

பொருள், செல்வம் என்ற இவற்றின் அடிப்படைச் சொற்கள் கவிஞனால் ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் விரிக்கப்படுகின்றமை, விளக்கப்படுகின்றமை, அவரிடம் இக்கருத்து பெற்ற இடத்தைக் காட்டுகின்றது.

> பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும், புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இனப் பெருமை சேருதல் - இவையெல்லாம் செல்வம், இச் செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை (தமிழருக்கு, ப.4)

> செல்வம் இனிது, அது முயற்சியினால் சேர்க்கப்படுவது. பயனுள்ள தொழிலை மேன்மேலும் ஊக்கத்துடனும் அறிவுடனும் செய்வதால் பொருள் பெருகும் (தமிழருக்கு, ப.46)

> சேர்க்கப்படுவது செல்வம். மனிதனுக்கு இன்பம் தரும் பண்டங்களையும் அவற்றைக் கொள்வதற்கு நல்ல கருவியாகிய பொன்னையும் சேகரித்து வைக்க வேண்டும் (தமிழருக்கு, ப.45)

இவ்விரு சொற்களைப் போலவே, பாரதி, சம்பத்து என்ற சொல்லையும் கையாளுகின்றார்.

> சம்பத்து என்பது ஸமஸ்கிருதச் சொல். இதன் பொருள் செல்வம். ஆனால் இங்கே செல்வம் என்பது திரவியத்தையும், பூஸ்திதியையும், ஆடு மாடுகளையும் மாத்திரமே குறிப்பிடுவதன்று: 1. அறிவுச் செல்வம் 2. ஒழுக்கச் செல்வம் 3. பொருட்செல்வம் ஆகிய மூன்றையும் குறிப்பிடும். (ஆரிய சம்பத்து, தமிழருக்கு. ப.67)

இவ்விளக்கங்கள், பொருளியலார் கருதும் 'எதுபொருள்' எனும் விளக்கத்தோடு ஓரளவு அண்மி அமையலாம். நிலம், பொன், ஆடுமாடு, இன்பப் பண்டங்கள், கலை என்பனவும், அதனை ஈட்டும் அறிவு, முயற்சி, தொழில் என்பனவும், உழைப்பில் உதவும் மக்கள் என்பதுவும் முதன்மைப்படுத்தப்படுவதாக நினைக்கக் கூடும்.

'சித்த'னாகவும், தத்துவச் சிந்தனையாளனாகவும், இறைவாதியாகவும், பலநிலையிலும் 'பர'ச் சிந்தனையாளனாக உரைநடையில் வெளிப்படும் பாரதியிடம், பொருட்சிந்தனை பெற்ற இடத்தைக் கட்டுரைகள் சில முன்னின்று மொழிகின்றன. கலை, மாதர், தத்துவம், சமூகம் என நாற்பொருள் கூறும் 'பாரதி நூல்க'ளின் கட்டுரை சில, இந்நிலையில் குறிப்பிடத்தக்கன. 'சமூக'த் தொகுதியில் (4), செல்வம் எனும் தலைப்பில் இரு கட்டுரைகள் (பக்.170-198) உள. அத்துடன், தொழிலுக்கும் செல்வத்துக்கு முள்ள சம்பந்தம் என்ற துணைத் தலைப்புடன், தொழிலாளர் (ப.138) எனும் கட்டுரையும் அமைந்தது. மற்றொரு கட்டுரையான வருங்காலம் (ப.135) என்பது வியாபாரம் பற்றிப் பேச, எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை (ப.127), தற்காலத்தும் பிரச்சினையாகத் தொடரும் 'வரதட்சணை' குறித்தது. **'தமிழருக்கு'** எனும் பிறிதொரு தொகுதி, புதியதாகத் 'தொழில்' (ப.121) எனும் கட்டுரையுடன், வறுமையின் பயன் (ப.52), ஆரிய ஸம்பத்து (ப.67), செல்வர் கடமை (ப.75) எனும் பகுதிகளை வழங்குகிறது. **'பாரதி புதையல்** தொகுதி-3' தரும் 'நமது மாடாதிபதிகளும் தொழில் அபிவிருத்தியும்' எனும் கட்டுரையும் புலவரின் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் சிறப்பிடம் பெறுகின்றது. **'சில சிந்தனைகள்'** எனும் திரட்டில், வியாபார மஹிமை (ப.17), சமத்துவம் (ப.69), வறுமை தீர (ப.72) உழைப்பு (ப.88) எனும் தலைப்புகளும் அவரது எண்ணங்களுக்கு இடனாயும் களனாயும் அமைகின்றன. 'பாரதி தரிசனம்' வழங்கும் 'பாரதியாரின் "இந்தியா" பத்திரிகைக் கட்டுரைகள்', பல வகையான பொருளாதாரச் செய்திகட்கு இடனளிக்கின்றன. இதன் தொகுப்பாசிரியர் இளசை மணியன், தொழில் (தொகுதி-1, ப.201), தொழிலாளர் (தொகுதி 2, ப.176), தொழிலாளர்-தொழில் நிறுத்தம்

(1-ப.209) என அமைக்கும் பகுதிகள் அவ்வப் பொருள் பற்றிப் பல கட்டுரைகளைக் கொண்டன. இவை போகவும், இந்தியாவில் பஞ்சம் (2-ப.213), கிழ் பெங்காளத்துப் பஞ்சம் (1-ப.58), சுதேசிய நிதி (1-ப.148), பைஸா நிதி (2-ப.165), சுதேசிய பாங்கி, சென்னையில் ஒரு இந்திய பேங்கி (1-பக்.165,167), மதராஸ் பேங்கி (1-ப.333); ஓர் புதிய சுதேசிய புகைக் கப்பல் கம்பெனி (1-ப.185), தூத்துக்குடி சுதேசிய ஸ்டீமர் கம்பெனி (2-ப.172), சுதேசியக் கல்வி - பணம் (1-பக்.221), ஆர்பத்நாட் கம்பெனியாரின் சிதறல் (1-ப.318), பின்னிக் கம்பெனியார் படுத்துவிட்டார்கள் (1-ப.323); திருவாங்கூர் விவசாய வியாபாரக் கம்பெனி (1-ப.324), இடி (1-ப.337); அந்நிய நாட்டுச் சரக்கை விலக்குவதில் உறுதி (2-ப.162), காங்கிரஸும் அந்நிய தேச சரக்கு விலக்கும் (2-ப.39), ராஜாங்க வரவு செலவு (2-ப.124), சென்னை மாகாண வரவு செலவு கணக்கு (2-ப.221), நேஷனல் காலேஜ் யோசனை (2-ப.207), மனிதன் வேலை செய்யப் பிறந்தான் (2-ப.214), நிலம் யாருடையது (2-ப.222), இத்தகு பல கட்டுரைகள், சுருக்கமாகவும், விரிவாகவும் அமைகின்றன. இவை பொருளாதாரத்தை மையப்படுத்திப் பேசுவதுடன், இன்னும் பல கட்டுரைகளும், பகுதிகளும், 'பத்திராதிபரின் குறிப்புகளும்' (Editorials) இத்தகு எண்ணங்கட்கு இடமளிக்கின்றன. மிகவும் பரவலாகவும், பயின்றும் பாரதியிடம் 'பொருள்' இடம்பெற்றதை இவை காட்டுகின்றன.

## பொருளியல்

பாரதியிடம் பொருளாதாரச் சிந்தனைகள் காணப்பட்டதுடன் பொருளியல் எனும் துறை யறிவும் ஆழமாக இடம்பெற்றிருந்தது. இவ் அறிவு ஒவ்வொரு மாணவனும் பெறுதற்குரியது என்பதை ஆரம்பப் பள்ளிக்கூட தேசீய கல்விப் பாடத்திட்டத்தில் அத்துறைக்கு அளிக்கப்படும் இடம் உணர்த்தும். மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தீர்வை, அது பொது நன்மைக்குரிய காரியங்கட்குப் பயன்படுதல் என்பன அரசாங்கப் பொருளாதாரத் தொடர்புடையன; விளைபொருள், செய்பொருள், கைத்தொழில் பற்றிய குறிப்புகள் 'உற்பத்தியை' மையங்கொண்டன; வியாபாரம், கூட்டு வியாபாரம் என்பன 'மாற்று'த் தொடர்பின. இவை பாடத்தில் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

பொருளியலை விளக்கும்போது, அதற்கு நான்கு அல்லது ஐந்து 'முக்கியப் பிரிவுகள்' அத்துறை அறிஞரால் தரப்படுகின்றன.

> .... அவற்றைப் பொருளியல் அறிஞர்கள் நுகர்வு (Consumption), உற்பத்தி (Production), மாற்று (Exchange), பகிர்வு

> (Distribution) என்ற நான்கு பெரும் பிரிவுகளின் கீழ் ஆய்வு செய்துள்ளனர் - சமீப காலத்தில் பொருளியலாளர்கள் பொது நிதியையும் (Public Finance), பொருளியலின் மற்றொரு முக்கிய பிரிவாகச் சேர்த்துள்ளனர் (பொருளியல், ப.25)

இவை பல கோணத்தில், பல நிலைகளில் பாரதியின் உரைநடையில் காணப்படுகின்றன. அன்றியும், இப்பிரிவுகளின் கீழமையக் கூடிய பல உட்பகுதிகள் தொடர்பான எண்ணங்களும் அவரிடம் உள்ளன.

> இந்த ஐந்து பெரும் பிரிவுகளின்கீழ் மனித விருப்பங்கள், நுகர்வு விதிகள், ஆக்கக் காரணிகள், வாணிகம், பொருள் களின் விலை நிர்ணயம், பணம், வங்கி, வாரம், வட்டி, கூலி, இலாபம், வரிவிதிப்புப் போன்ற பல உட்பகுதிகள் அடங்குகின்றன. (பொருளியல், ப.25)

இவற்றுடன், பஞ்சம், பட்டினி, வறுமை, பற்றாக்குறை (தட்டுப்பாடு), கல்விக் கட்டணம், சந்தா, சம்பளம், பங்கு (Shares), சீட்டு, பரிசுச் சீட்டு (Lottery), நஷ்ட ஈடு, வருவாய், முதலீடு, கடன், சொத்து முதலிய பல கூறுகள் பற்றிய கருத்துகள் பாரதியிடம் காணப்படுகின்றன.

**பணம் - செல்வம்**

பாரதியாரிடம் பணம், அல்லது செல்வம் பற்றிய அணுகுமுறையில் இருவகையான கோட்பாடுகள் தெரிகின்றன. 1. பொருளை, முதன்மைப்படுத்தி, மையப்படுத்திப் பேசுதல் ஒருநிலை.

> காலை கண்விழிக்கும் போதே 'பணம்' என்ற ஞாபகம் (சில சிந்தனைகள், ப.9)

> பணம், பொதுக்கல்வி, விடுதலை மூன்றும் இல்லாவிட்டால் அந்நாட்டில் மானம் ஏது (சமூகம், ப.128)

> அறிவே வலிமை, கல்வியே செல்வத்தின் தாய் (சமூகம், ப.142)

> ஒரு செட்டி வியாபாரத்தில் ஏழையாய் நொந்துபோய் தனது வீட்டுப் பஞ்சாங்கத் தையரிடம் 'பணக்காரனாவதற்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டான். நவக்ரஹ பூஜை நடத்த வேண்டும் என்று அய்யர் சொன்னார் (சமூகம், ப.199)

> ஒவ்வொருவனுக்கும் மூன்றுவித சக்தி வேண்டும். 1. அறிவு, 2. செல்வம் 3. தைரியம் (தமிழருக்கு, ப.11)

இவ் எண்ணங்களுக்கு, கவிஞரின் வாழ்வும், சூழலும், உடன்கால மக்களின் தேவையும், இந்தியாவில் பெரும்பான்மை ஏழ்மையும், வறுமையும் காணப்பட்டமையும், சுதேசியம் வெற்றிபெற்று வெள்ளையனை வெளியேற்றப் போதிய பண பக்கபலம் இன்மை பற்றிய மனக்குறையும், ஒத்த பிற நிலைகளும் காரணமாகலாம்.

கவிஞரின் வாழ்க்கையில் பணத் தேவை இருந்தது என்பதை அவரே கூறியுள்ளாரா என்பது தெரியவில்லை; கவிதை, தந்தை வறுமையுற்றதை வெளிப்படுத்துகின்றது (சுயசரிதை, 39); பாரதியை அறிந்தவர் பலர் அவர் பொருளாதார நிலைபற்றிய சில செய்திகளைக் கூறுகின்றனர். பாரதி புதையல், ஜமீன்தார் கொடுத்து வந்த தொகை, மாதம் 25 ரூ தான் (ப.142); காசியில் அவர் கடைசியாக ஒரு பள்ளியில் ஆசிரியர் பதவி பெற்று மாதம் 20 ரூ சம்பாதித்து வந்தார் (ப.140); மித்திரன் பத்திரிகையில் அவருக்குக் கிடைத்த சம்பளம் 40 ரூ தான். அது அவருடைய செலவுக்குப் போதுமானதாக இருக்கவில்லை (ப.147); சாமிநாதையர், மித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயரைக் கேட்டுக்கொண்டதையொட்டி பாரதியாருக்கு மாதம் 10 ரூ சம்பள உயர்வு கிடைத்தது (பக்.150-151); இந்தியா வாரப் பத்திரிகை ஆசிரியர் பாரதிக்கு ஐம்பது ரூபாய் சம்பளம் (ப.161); மித்திரனை முழுமையாக விட்டபிறகு, மாதம் நூறு ரூபாய் பெற்றுக் கொண்டு இந்தியா பத்திரிகையில் மட்டுமே முழுக் கவனம் செலுத்த ஆரம்பித்தார் (ப.161) எனத் தரும் செய்திகள், பல வேளைகளிலும் அவர் பொருள் நிலையை விளக்க வல்லன. 1903-1921-க்கு இடைப்பட்ட காலப்பகுதியில், கிராமத்திலும் (கடையம்), ஜமீனிலும் (எட்டையபுரம்), சென்னையிலும், புதுவையிலும் பணத்தின் மதிப்பு எவ்வாறு இருந்தது என அறியப்பட்டால், இன்னும் தெளிவாகப் பாரதியின் பொருள் நிலையைப் புரிய முடியலாம். அதன்மூலம் அவரது அணுகுமுறையையும் விளங்கிக்கொள்ளக்கூடும்.

இப்பொருண்மையை எண்ணங்கள் ஒருபாலாக, 2. செல்வத்தை 'வெறுத்து'க் கூறல், செல்வ நாட்டத்தைக் கடிதல், செல்வத்தைப் பெரிதெனக் கருதக்கூடாது என அறிவுறுத்தல் போன்று செல்வத்தை விலக்கும் நிலையும் காணப்படுகின்றது. கவிஞரின் புதுவை வாழ்வில் அரவிந்தரோடு ஏற்பட்ட தொடர்பு காரணமாகத் 'தத்துவ விசாரம்' ஏற்பட்டமையும், புறப் பொருட்களை - பருப்பொருட்களைப் பற்றிய சிந்தனையைவிட உள்நோக்கிய சிந்தனைகளில் மனம் ஈடுபட்டமையின் வளர்ச்சியும், செல்வமின்மையால் ஏற்பட்ட சோர்வும், செல்வர் பலர் செய்யும்

திமையால் ஏற்பட்ட கசப்பும், தேவையான பணம் இல்லாத ஏமாற்றமும் இத்தகு பிற நிலைகளும் ஒருவேளை இதற்குக் காரணமோ என எண்ணலாம்.

> .... செல்வம் தேடுவதையே ஒரு பெரிய தர்மமாக நினைத்த படியால் பலவித அசௌகரியங்கள் நேரிடுகின்றன. நாம் செல்வத்தைப் பெரிதாக வைக்கக்கூடாது (தமிழருக்கு, ப.20)

> ..... எந்தத் தவறு செய்தாவது பணம் தேடுவோர், பணத்தையே தெய்வமென்று கொண்டோர், -.... இவர்கள் மனதிலே தம்மை மேதாவிகளாக நினைத்திருக்கிறார்கள். இவர்கள் மேதாவித்தனம் மடத்தனம் (தமிழருக்கு, ப.21)

> நான் வேண்டிக் கரையத் தக்கது யாது?.... நான் செல்வத்தை வேண்டி அழுங்குவேனா? செல்வம் என்ன பயன் தரும்? நோவின்றிக் காக்குமோ? அன்று; நோவுகளை விளைவிக்கும்; பகையின்றிக் காக்குமா? அன்று; பகையைப் பெருக்கும்; கவலைகளும் அச்சங்களும் இன்றிக் காக்குமா? அன்று; அவற்றை மிகுதிப்படுத்தும். மரணமின்றிக் காக்குமா? காக்காது. எனில், அதனை வேண்டி அழுங்குதல் பெரும் பேதமை யன்றோ (தமிழருக்கு ப.40),

வாழ்க்கையின் இருவேறு காலப்பகுதியின் மனநிலையாக இவை அமையக்கூடுமா என நினைக்கலாம்.

## ஏற்றத் தாழ்வு

பொருளாதார ஒப்புநிலையின்மை பற்றி, சமூகத்தில் ஏழை, பணக்காரன் எனும் ஏற்றத்தாழ்வுகள் அமைகின்றன. தொழில் திறனும், உழைப்பும் இருந்த போதும், வரவுக்கும் செலவுக்கும் இடையே சிக்கிய ஏழை, தொடர்ந்து ஏழையாகவே அமைகிறான். பரம்பரை செல்வ நிலையும், பின்னும் சேரும் செல்வமும் பற்றி பணமுடையவன் அவ்வாறே தொடர்கிறான். பொருளுடைமை குறித்து மக்களிடையே அமையும் படிநிலைகளைப் பாரதி கருதியது, அவர் இந்தியா பத்திரிகைக்கு ஏற்படுத்திய 'சந்தா' விவரத்தாலும் விளங்கும் (தனிப்பிரதி ஒரு அணா).

நமது பத்திரிகையின் சந்தா விவரம்

| | ரூ.அ.பை. |
|---|---|
| எல்லா கவர்மெண்டாருக்கும் | 50.0.0 |
| ஜமீன்தார்கள், ராஜாக்கள் முதலியவர்களுக்கு | 30.0.0 |
| மாதம் ரூ.200-க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு | 15.0.0 |
| மற்றவர்களுக்கு | 3.0.0 |

(தமிழ்ப் பத்திரிகைகள், ப.20)

தனிமனிதனின் ஏழ்மை பற்றியும், நாட்டின் பொருளாதாரக் கீழ்நிலை குறித்தும் நினைக்கும் வாய்ப்பு அமைகின்றது. ஒருவனுடைய உழைப்பில் பலர் வாழும் நிலை, குறைபாட்டுக்கு இடம் வகுக்கின்றது.

> ஒரு வாலிபன் தலையிலே ஒரு குடும்ப பாரத்தைச் சுமத்தும் போது அவனுக்குக் கண் பிதுங்கிப் போய்விடுகிறது
> (சமூகம், ப.9)

> நம்மவருள் ஒருவன் சம்பாதித்தால் ஒன்பது பேர்கள் வீட்டில் உட்கார்ந்து சாப்பிடுவது வழக்கமாய் இருக்கிறது
> (சில சிந்தனைகள், ப.88)

> ஒரு 16 வயது ஏழைப் பிள்ளை; தகப்பனில்லை; வீட்டிலே தாயாருக்கும் தங்கைக்கும் தனக்குமாக எங்கேனும் போய் நாலு பணம் கொண்டு வந்தால்தான் அன்றன்று அடுப்பு மூட்டலாம் (சில சிந்தனைகள், ப.133)

அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய, தின உழைப்பு வேண்டும். இவ் ஏழ்மை, இந்தியாவின் அக்கால நிலைமை என்று மட்டும் கூறிவிட முடியாது. நரகத் துன்பமாகவும், உலகில் வேறெந்த நாட்டிலு மில்லாததாகவும் இந்நாட்டு வறுமை அமைகின்றது; 'நாலுபணம்' என்பது குறிப்பிட்ட தொகையைக் குறிக்காமலும் இருக்கலாம். ஆனால், 'நாளொன்றுக்கு சராசரியாக நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு முக்காலணா வரும்படி யென்று கணக்காளிகள் சொல்லுகிறார்கள்' (சமூகம், ப.128) எனப் பிறிதோரிடத்தில் உண்மை நிலை காட்டப்படுகின்றது.

அடிப்படைத் தேவையான உணவு இன்மை எனும் வறுமை நிலை பாரதியால் தாங்கக் கூடாததாக இருந்ததைத் 'தனியொருவனுக்

குணவில்லை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம' என்ற கவிதைப் பகுதி காட்டுவது, உரைநடையிலும் உண்டு.

> கோடிக் கணக்கான ஜனங்கள் வயிறு நிறைய உணவு
> கிடைக்குமென்ற நிச்சய மில்லாமலும், லட்சக் கணக்கான
> ஜனங்கள் ஒரு வேளைக் கஞ்சி கிடைக்காமலே சுத்தப்
> பட்டினியால் கோர மரணம் எய்தும்படியாகவும்
> நேர்ந்திருக்கும் தற்கால நிலைமையை நாம் ஒரு க்ஷணங்
> கூட சகித்திருப்பது நியாயமில்லை (தமிழருக்கு, ப.143)

> சிறுதொகையான மனிதருக்கு அடுத்த வேளை ஆகாரம்
> கிடைப்பது நிச்சயமாகவும் பெருந்தொகையோர்க்கு அடுத்த
> வேளை சோறு நிச்சயமில்லாமலும் ஏற்பட்டிருக்கும்
> சம்பிரதாயம் மனிதரைத் தவிர வேறெந்த ஜாதி
> ஜீவர்களிடத்திலும் கிடையாது. (தமிழருக்கு, ப.135)

செல்வ, ஏழ்மை முரண் மாறவேண்டும் என்ற விருப்பில் அதற்கேற்ற வழிகளை நினைத்தலும் கவிஞரிடம் காணப்படுகிறது. தாம் நினைப்பதுடன் பிறரையும் எண்ணத் தூண்டுகிறார்.

> நமது நாட்டில் இப்பொழுது மிகுந்த செல்வமுடையவர்கள் சொற்பராயும், கொடிய தரித்திரத்தால் வருந்துகிறவர்கள் ஏராளமாயும் இருக்கிறார்கள். ஏழைக்கு எவ்வாறு உதவி செய்தால் வறுமையினின்றும், வறுமையின் கொடுமையால் அவர்கள் மாய்ந்து வரும் பாபங்களினின்றும் அவர்களை மீட்கலாம்? (பாரதி புதையல் 3, ப.82)

செல்வர் தம் செல்வத்தைப் பகிர்ந்து கொடுப்பதால் வறுமை நீங்கும் எனக் கவிஞர் கருதவில்லை. மடாதிபதிகள் அம்மடத்தின் செல்வத்தையும், பணத்தைக் குவித்து வைத்திருக்கும் சோம்பேறி அப்பொருளையும் முதலீடு செய்து, தொழில், வியாபாரம் என்பனவற்றைப் பெருக்கி, அதில் அவ் ஏழை மக்களுக்கு, தகுதிக்கேற்ப வேலையளித்து, உழைக்கச் செய்வதால் வறுமை நீங்கும்; தொழில் சிறப்பதால் முதலீடு செய்தவர் பயன் பெறுவதுடன், வேலை செய்வோர் உழைப்புக்கேற்ற ஊதியமும், வாழும் வழியும் பெறுகின்றனர். நிலவுடைமைகள், கிராமத்தின் வறுமையை நீக்க முயல்வரெனின், ஒவ்வொரு கிராமமும் வறுமையற்று, நாடு முழுவதிலும் வறுமை நீங்க முடியுமெனக் கருதுகிறார் கவிஞர். தம் மனைவியின் ஊரான கடையத்தையே சான்றாக்கி, நிலத்தையுடையோரும் ஏழை மக்களும் கூடி “தொழில் நிர்வாக சங்கம்”

அமைத்து, அனைவரும், பல்வகையான, தத்தமக்கேற்ற தொழில் செய்து உழைத்து உண்பதைச் சரியான திட்டமாக முன்மொழிகிறார்.

பஞ்சம், குறைபாடு போன்றவற்றால் ஏழைகளே பாதிக்கப்படுதையும், 'பஞ்சமரே' மிகுதியாக மடிவதையும் காட்டி, அத்தகையோரை முன்னேற்றுவதே செல்வர் கடமை எனவும் வேறு பல வகைகளில் 'தண்ட'மாகப் பணத்தைச் செலவழிக்கலாகாது எனவும் கருதுகிறார் கவிஞர். பஞ்சம் பற்றிய பல குறிப்பமையினும், பணமின்மையே பஞ்சம் எனும் எண்ணமும் உண்டு.

> பஞ்சம் பஞ்சம் என்ற சப்தம் நமது தேசத்தில் தற்காலம் மலிந்து விட்டது. நாட்டில் உண்டாகும் பஞ்சமெல்லாம் பணப் பஞ்சமே யன்றி தானியப் பஞ்சமன்று..... நெல் வாங்குவதற்குப் பணம் வேண்டும். அது இல்லாமல் மலைமலையாக தானியத்தைக் குவித்தாலும் பிரயோஜன மில்லை. ஒரு பைசாவிற்கு 10 வாழைப்பழம் மிக மலிவென்றால் அந்தப் பைசாவைக் கொடுத்தாலன்றோ பத்து பழங்களை யடையலாம். (பாரதி தரிசனம், 2 - ப.213)

இதற்கு மாறாகத் தானியம் போன்ற உணவுப் பொருள் குறைபாடும் 'இன்மை'யாக இணைத்துத் தரப்படுகின்றது.

> இந்தியாவில் விசேஷக் கஷ்டங்கள் இரண்டு. பணமில்லாதது ஒன்று.... பணக் கஷ்டமாவது வயிற்றுக்குப் போதிய ஆஹார மில்லாத கொடுமை. இந்தத் துன்பத்திற்கு முக்கியமான நிவர்த்தி யாதென்றால், நமது தேசத்தில் விளைந்து, உணவுக்குப் பயன்படக்கூடிய தானியங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகாமல் தடுத்துவிட வேண்டும்.... உணவுத் தானியங்களின் ஏற்றுமதியை எந்த நிமிஷத்தில் நிறுத்தி விடுகிறோமோ, அந்த நிமிஷ முதல் நம்முடைய ஜனங்களுக்குத் தட்டில்லாமல் யதேஷ்டமான ஆஹாரம் கிடைத்துக்கொண்டு வரும் (சமூகம், ப.112)

வறுமையின்றி மக்கள் வாழத் தேவையான பொருட்கள் நாட்டிலேயே விளைந்தபோதும், அரசாங்கம், அல்லது வியாபாரி, தம் வருவாயை நோக்கமாகக் கொண்டு தேவைப் பொருட்களை, ஏற்றுமதிப் பொருட்களாக்கி, நாட்டில் தட்டுப்பாடு ஏற்படக் காரணமாகின்றனர்; ஏற்றத் தாழ்வுகள் தொடர்கின்றன.

இதற்கு மாறான, சமத்துவம், 'சோசலிசம்' வாயிலாக அமையும் எனும் கருத்து பாரதியிடம் வெளிப்பட்டு நிற்கின்றது.

> சோஷலிஸ்ட் கட்சி என்பதைத் தமிழில் சமத்துவக் கட்சி என்று சொல்லலாம்... சொத்து விபாகம் செய்திருப்பதில், இப்போது சிலர் செல்வரென்றும் பலர் ஏழைகளென்றும் ஏற்பட்டிருப்பதை மாற்றி, உலகத்திலுள்ள சொத்தை, அதாவது பூமியை உலகத்து ஜனங்களுக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதும், தொழில் விஷயத்தில் இப்போது போட்டி முறை இருப்பதை மாற்றிக் கூடியுழைக்கும் முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதும்... கோட்பாடு
>
> (சில சிந்தனைகள், ப.69)

> தேசத்துப் பிறந்த ஸர்வ ஜனங்களுக்கும் தேசத்து செல்வம் பொது என்பது உண்மையாய் விடின், ஏழைகள் செல்வர் என்ற வேற்றுமையினால் உண்டாகும் தீமைகள் இல்லாமற் போகும்..... (சமூகம், பக்.153-4)

ருஷ்யத் தாக்கத்தால் கவிஞரிடம் விளைந்ததாக இப் பொதுவுடைமைக் கோட்பாடு அமைகின்றது.

### உற்பத்தி - உழைப்பு - தொழில்

மனித உழைப்பும், தொழிலும் உற்பத்திக்கு இன்றியமையாதன; இயற்கையின் விளைபொருட்கள் (தமிழருக்கு, ப.89) இவையின்றியே ஆகக் கூடியதெனினும், மக்கட் பெருக்குக்குத் தேவையான மிகுதியான உணவு முதலிய பொருட்களும் பல செயற்கைப் பொருட்களும் உழைப்பை மையங்கொண்டவை. கவிஞர் உழைப்புக்குத் தரும் விளக்கம் பயனுடைய தொழில் செய்வதே உழைப்பு எனக் காட்டுகின்றது.

> சீட்டாடுவதும் இராப்பகலாகத் தூங்குவதும் வம்பு பேசுவதும் உழைப்பாகாது. தனக்கும், தன் குடும்பத்துக்கும், தான் பிறந்த தேசத்திற்கும், மற்றவர்களுக்கும் உபயோகமான தொழிலைச் செய்வதே உழைப்பாகும்
>
> (சில சிந்தனைகள், ப.88)

மனிதனுக்கு வேண்டிய நுகர்ச்சிப் பொருட்கள் பலவற்றையும் இவ் உழைப்புத் தருகின்றது. அவை தேவைப்பொருட்களாக மட்டுமன்றி, ஆடம்பரப் பொருட்களாகவும் அமையக் கூடும். 'நுகர வேண்டுமென்ற நுகர்வோரின் விருப்பம் உற்பத்திக்கு வித்திடுகிறது' (பொருளியல், ப.27) என நுகர்ச்சியும் உற்பத்தியும் தொடர்புறல் இத்துறையினரால் விளக்கப்படுகின்றது.

> எவ்வகைப்பட்ட அறிவு முயற்சியாலேனும் சரீர முயற்சியாலேனும் சேகரிக்கப்படும் உணவு, துணி முதலிய அவசியப் பண்டங்களும், குதிரை வண்டிகள், ஆபரணங்கள், வாத்தியங்கள், பதுமைகள் முதலிய சௌக்கிய வஸ்துக்களும், (இவற்றை அனுபவிப்பதற்குச் சாதனங்களாகிய வீடு, தோட்டம் முதலியனவும், இப்பண்டங்களுக்கெல்லாம் பொதுக் குறியீடும் பிரதியுமாக மனிதரால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கும் பொற்காசு, வெள்ளிக்காசு, காகிதப் பணம் முதலியனவும் செல்வம் அல்லது அர்த்தம் எனப்படும்)
>
> (மாதர், பக்.68-69)

உழைப்பவன் எல்லாம் தொழிலாளியாக, தொழில் செய்பவனாக அமைகிறான். உழைப்பில் ஈடுபட்டால், முதலாளியும் தொழிலாளியே. உடலுழைப்பாக வன்றி அறிவுழைப்புச் செய்யும் 'குமாஸ்தாக்கள், உபாத்தியாயர்கள், நூலாசிரியர்கள்' ஆகியோரும் தொழிலாளியே (சமூகம், ப.144). அறிவுழைப்பாளிகளைத் தொழிலாளருடன் இணைத்துக் கருதும் நிலை பிற்காலத்தது; முற்காலத்தில் இல்லை.

> நூலாசிரியர்களும், உபாத்தியாயர்களும், மாஸம் 1000 ரூபாய் வாங்கும் குமஸ்தாக்களும், மாஸம் 2000 ரூபாய் ஸம்பாதிக்கும் பத்திராதிபர்களும் இவர்களைப் போன்ற பிறரும் தொழிலாளிகளுடன் சேர்த்து கணக்கிடுவதற்குரிய ரென்ற கொள்கை ஐரோப்பாவில் ஆரம்ப முதல் கிடையாது
>
> (சமூகம், ப.146)

தொழிற்புரட்சி ஐரோப்பாவில் ஏற்பட்டு, உலகெங்கிலும் பரந்து, இந்தியாவையும் தாக்கிய காலப்பகுதியில் இத்தகு எண்ணம் பாரதியிடம் அமைகின்றது.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் எனவும், ஆலைகள் வைப்போம், காகிதம் செய்வோம் எனவும் கவிதையில் முழங்கி, வெளிநாட்டுக் கரும்புத் தோட்டத்தில் இந்தியத் தொழிலாளர் படும் துன்பத்தை எடுத்துக் காட்டிய கவிஞரின் உரைநடைகள் பல தொழில்களைப் பற்றிப் பேசுகின்றன. 'பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரஷிப்பவர்கள்' எனப் பஞ்சமரைப் பற்றிக் கூறுமிடம் இனம், தொழில் தொடர்பைக் காட்டுகின்றது (சமூகம், ப.1). உழவுத் தொழில் சிறந்திருந்தால், உணவுக்காகப் பிறநாட்டை எதிர்பார்க்கும் நிலைமை இல்லை.

> இங்கிலாந்து முதலிய சில தேசங்களில் காலையில் எழுந்தால் ஆஹாரத்துக்கு மீன் தென் அமெரிக்காவிலிருந்து வரும்படியாக இருக்கும்; வெண்ணெய் ஆஸ்டிரேலியா விலிருந்து வரும்படியாக இருக்கும். இந் (இந்திய) நாட்டினரின் நிலைமை அப்படியில்லை. இங்கு பூமி நம்முடைய ஜனங்களுக்கெல்லாம் போதிய ஆஹாரம் கொடுக்கிறது; ஆதலால் ஏற்கெனவே போதிய அளவு பணம் குவித்து வைத்திருந்தாலன்றி உணவுக்கு வழி கிடையாது என்ற நிலைமை நம்முடைய தேசத்திற்கில்லை (சமூகம், ப.112)

இந்திய நாட்டின் செல்வாதாரம், நிலத்து விளைபொருளை அடிப்படையாகக் கொண்டமைந்தமையும், நாடு உணவுப் பொருள் உற்பத்தியில் சிறப்பு நிலை கொண்டிருந்தமையும் இதில் விளங்கும். 'வருங்காலம்' எனும் கட்டுரையில் நாட்டின் பொருளாதார ஏற்றத்திற்குரிய கைத்தொழில் முன்னேற்றம், இரும்புத் தொழில் ஆகியவற்றைச் சுட்டுகிறார். இரும்புத் தொழில் வலிமையும் செல்வமும் கொடுப்பது எனக் கூறுகின்றார். தொழிலில் கூட்டுத் தொழிலையே விரும்புகின்றார் (சமூகம், ப.60). பிற நாடுகளில் வியாபாரமாகக் கூடிய கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வதை விழைகிறார்.

> நேர்த்தியான சித்திரங்களும் வர்ணங்களும் சேர்த்துப்
> பட்டிலும் பஞ்சிலும் அழகான ஆடைகள் செய்யவல்ல
> தொழிலாளிகள் நமது நாட்டில் இருக்கிறார்கள்....
> வர்ணப்படம், தையல் வேலை.... மைத் தொழில்
> முதலிய சித்திர வேலைகளில் நமது ஜனங்களின் அறிவு
> மிகவும் சிறந்தது (சமூகம், பக்.135,136)

'என் தேசத்துக் கைக்கோளர் செய்த துணிகள்' (சமூகம், ப.41), ஜீவனத்துக்கு வேண்டிய கைத்தொழில்கள் (சமூகம், ப.42), சங்கீத வித்வான் (சமூகம், 137) போன்ற கலைத்தொழிலினர் என்போரை மட்டுமன்றி, கவிஞர் தம் கால நிலைக்கேற்ப அரசாங்க அலுவல் செய்வோரையும் காட்டுகின்றார். தொழிலடிப்படை இனப்பகுப்பு நிலைமாறி, யாரும் 'போலீஸாக, குமாஸ்தாவாக' அமையும் நிலை காணப்படுகிறது.

> போலீஸ் வேவுத் தொழில் செய்பவன் பிராமணன் ஆக
> மாட்டான். குமாஸ்தா வேலை செய்பவன் ஷத்திரியன்
> ஆக மாட்டான். சோம்பேறியாக முன்னோர் வைத்து
> விட்டுப்போன பொருளை யழித்துத் தின்பவன் வைசியன்
> ஆகமாட்டான். கைத்தொழில்களை எல்லாம் இறக்கக்

கொடுத்துவிட்டுச் சோற்றுக்குக் கஷ்டமடைவோர்
சூத்திரர் ஆகமாட்டார்கள் (தமிழருக்கு, பக்.60-61)

'15 ரூபாய் குமஸ்தா' (சமூகம், ப.6) எனவும், 'கோட்டையில் ரெவின்யூ போர்டு ஆபிஸிலே உத்தியோகம் பார்க்கும் தமையனார்க்கு நான்கு வருடங்களுக்கு ஒருமுறை ஆபிஸில் பத்து ரூபாய்..... 'ப்ரமோஷன்' (சமூகம். ப.3), 'தஞ்சாவூர் முதலிய பல ஜில்லாக்களில் நெடுங்காலம் போலிஸ் இன்ஸ்பெக்டர் உத்தியயோகம் பார்த்து ஸர்க்காருக்கு நன்றாக உழைத்ததினால் ராவ் பகதூர் என்ற பட்டம் பெற்றவர்' (சமூகம், ப.4) எனவும் அமையும் குறிப்புகள் அரசாங்க வேலைகளின் ஊதிய நிலையையும் தகுதியையும் காட்டுவன.

கல்வி, சுயமாக சம்பாதிக்கும் தொழிலுக்கு நேராகச் செலுத்தும்படி தேசியக் கல்வியைப் பற்றிச் சிறப்பாகக் கட்டுரைகள் வழங்கிய பாரதி, கல்வி நிறுவனத்தைத் தோற்றுவித்தல் முதல், அதை நடத்துதல், நிலைநிறுத்துதல் வரைப் பலநிலைகளிலும் அதன் பொருளாதாரத் திட்டத்தைத் தெளிவாக வகுத்துத் தருகின்றார். பள்ளிக் கூடத்திற்குரிய நிலத்தை இனாமாகச் செல்வரிடம் பெறுதல், மாதாமாதம் அதை நடத்தத் தேவையான பணத்தை, சந்தாவாக, நன்கொடையாக வசூலித்தல்; திருமணம் போன்ற சிறப்புக் காலங்களில் பொருட் தண்டல்; வைப்பு நிதி சேர்த்தல்... என இது விரியும். ஆசிரியத் தொழில் புரிவோரை இங்குக் காட்டி, மாத ஊதியமாக ரூ.12 முதல் ரூ.20 வரை, கிராம வசூலுக்குத்தக, அவர் பெறுவதையும் தருகின்றார். 'இங்கிலீஷ் பள்ளிக் கூடத்தில் போய்ப் படிக்கத் தகுந்த சொத்து இல்லாத பிள்ளைகள்' (சமூகம், ப.44) இருக்க, இத் தேசிய பாடசாலை, மாணவரிடம் 'அரையணாக் கூடச் சம்பளம் வசூலிக்கக் கூடாது' (சமூகம், ப.70) எனும் திட்டம் கொண்டு கல்வியுடன், உணவு, நூல்களையும் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்கின்றது. பூனா பெர்குசன் கல்லூரியைக் காட்டும்போது, ஆசிரியத் தெழில் 75 ரூபாய் ஊதியமும், 25 ரூ. ஓய்வூதியமும் அளித்தது தெரிகிறது (சக்கரவர்த்தினி, ப.31)

கால நிலைக்கேற்ப, 'கம்பெனி' வங்கி முதலிய தொழில் நிறுவனங்களும் காட்டப்படுகின்றன. சுதேசியக் கப்பல் கம்பெனியில் பங்குத் தொகைகள் (Shares) போடும் நிலையும் (பாரதி புதையல், ப.83), 'பணத்தொழில்' செய்யும் 'ஆர்பெத்னாட் கம்பெனியும்', 'மதராஸ் பேங்கி'யும் இந்நிலையில் சுட்டத்தக்கன. பணமே மூலப்பொருளாகவும், உழைப்புக் களனாகவும் இவற்றில் அமைகின்றன எனலாம்.

வைதிகத் தொழில் பற்றிய குறிப்புகள் அருகியே காணப்படுகின்றன. சிறந்த தொழிலான இது, உண்மையின்மை காரணமாகக் குறைத்து மதிக்கப்படுவதும், போதிய வருமானம் இல்லாததாகவும் அமைகின்றது.

> உண்மையாகச் செய்யப்படும் பூஜையும் உபதேசமும் எல்லாத் தொழில்களைக் காட்டிலும் சிறந்தன. பொய்ப் பூஜையும் காசைப் பெரிதாக நினைத்துச் செய்யும் ஞானோபதேசமும் மிகவும் இழிந்த தொழில்களாகும். பல இடங்களில் வியாபாரிகளுக்குள்ள மதிப்புப் பூசாரிக்கும் குருக்களுக்கும் இல்லாதிருக்கக் காண்கிறோம்
>
> (தமிழருக்கு, ப.123)

> இக்காலத்திலே கூட ஒரு ஆங்கிலேய கிறிஸ்தவப் பாதிரிக்குக் கிடைக்கும் வரும்படியில் நூறில் ஒரு பங்கு கூட அதே தொழில் செய்யும் புரோகிதப் பிராமணருக்குக் கிடைப்பதில்லை
>
> (சமூகம், ப.209)

## மாற்று - வணிகம் - விலை

நுகர் பொருளும், பொருள் உற்பத்தியும் இணைந்து செல்வது போலவே, உற்பத்தியுடன் வணிகம் இணைந்து செல்கின்றது. வணிகமும் 'வியாபாரத் தொழில்' எனக் கருதப்படல், உற்பத்தியின் தொழில் தொடர்பையும் தருகின்றது. 'சுதேசிய முயற்சி நாட்டிலே தோன்றிய பிறகு, கைத்தொழில் அபிவிருத்தி, தேசிய வர்த்தகம் முதலிய பல அமிசங்களில் 'கைகண்ட பலன்' கண்டதாகக் கவிஞர் சுட்டுகிறார், (சமூகம், ப.40). அத்துடன், ஆங்கிலேய வர்த்தகருக்கு இதனால் நஷ்டம் ஏற்படுகிறது எனவும், 'உள்நாட்டு சாமான்களையே கிரயத்துக்கு வாங்குவேன் என்ற விரதம் செய்து கொண்டால் எவனுடைய சட்டத்துக்கு விரோதம்' எனவும் தொடர்ந்து கூறுவது, தேசிய வணிகம் என்பதன் விளக்கமாகி, அவர்கால வணிகப் பொருள் நுகர்ச்சி நிலையையும் காட்டியது. வெளிநாட்டுப் பொருட்களை வாங்காது விலக்குதல் என்பது தொடர்பான பத்திரிகைக் கட்டுரையிலும் இது விளங்கும்.

வியாபார மஹிமை எனும் கட்டுரை, வடதேசத்து வியாபாரிகளுக்குள்ள திறமையும் புத்தி நுட்பமும் நம்மூர் வியாபாரிகளிடம் இல்லை எனவும், க்ஷேமத்துடனும் செழிப்புடனும் ஊர் இருந்தாலொழிய வியாபாரம் செழிக்காது எனவும், வியாபாரிகளுக்கு குமஸ்தாக்களிடம் சரியாக வேலை வாங்கத்

தெரியவில்லை எனவும் நிலைமையை விளக்குகின்றது (சில சிந்தனைகள், ப.18). தேசியக் கல்வியில் வியாபாரம் தொடர்பான செய்திகள் தனியிடம் பெறுகின்றன. வியாபாரப் பயிற்சி, முக்கியமான துறைமுகங்களில் நடைபெறும் வியாபாரம், கூட்டு வியாபாரத்தால் விளையும் நன்மை என்பன குறிப்பிடத்தக்கன. வியாபார முறை பழைய நிலையில் எப்படி அமைகின்றது, இப்போது எப்படி அமைய வேண்டும் எனவும், வியாபாரம் செல்வத் தொடர்பு கொள்ளுகின்றமையும் தரப்படுகின்றன.

> மிகவும் ஸரஸமான இடத்தில் விலைக்கு வாங்கி, மிகவும் லாபகரமான சந்தையில் கொண்டு போய் விற்க வேண்டும் என்ற பழைய வியாபாரக் கொள்கை கூடாது. விளைபொருளும், செய்பொருளும் மிஞ்சிக் கிடக்கும் தேசத்தில் விலைக்கு வாங்கி, அவை வேண்டியிருக்கு மிடத்தில் கொண்டு போய் விற்க வேண்டும் என்பதே வியாபாரத்தின் பிரமாணமான கொள்கையாகும்.... செல்வம் ஒரு நாட்டில் சிலருக்கு வசப்பட்டதாய், பலர் ஏழைகளாக இருக்கும்படிச் செய்யும் வியாபார முறைகளைக் காட்டிலும், சாத்தியப்பட்ட வரை அநேகரிடம் பொருள் விரவியிருக்கும்படிச் செய்யும் வியாபார முறைகள் மேன்மையாகப் பாராட்டத் தக்கனவாம் (சமூகம், ப.60)

கான்பூர் பெரிய வியாபாரத் தலமாக இருந்தமையும், பிற நாட்டு வணிகர் அங்கு முதன்மை பெற்றதால் இந்நாட்டுக்குச் செல்வத் தலைமை இன்மையும் (சமூகம், ப.103) தரப்படுகின்றது. 'வியாபாரிகள் தம்முடைய வயிறு நிரப்புவது மட்டுமே குறியாகக் கொள்ளாமல், தமக்கு லாபம் வரும்படியாகவும், பொது ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்படாமலும் செய்தற்குரிய வியாபார முறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதும் கவிஞர் எண்ணம் (சமூகம், பக்.112-113). 'வர்த்தகஞ் செய்வோன் கோடிக் கணக்கான பணப்புழக்கம் ஏற்படும்படி பெரிய வர்த்தகங்கள் செய்ய வழிதேட வேண்டும்' எனவும் பலவகை வியாபாரங்களுக்கு வேண்டிய படிப்புப் படிக்க வேண்டும் எனவும், இந்நாட்டின் அரிய கைவினைப் பொருட்களை விரும்புகின்ற வெளிநாடுகளில் விற்க வேண்டும் எனவும் 'வருங்காலம்' முதலிய கட்டுரைகளில் வியாபார வளத்திற்குரிய சிந்தனைகள் நல்குகின்றார். 'லாப நஷ்டங்களில் சிந்தனை யில்லாமை யோகத்தின் ரகசியம்' என்பதில் வேறுபட்ட கருத்து புலப்படுகின்றது (தமிழருக்கு, ப.18).

இன்ன பொருளுக்கு இன்ன விலை அல்லது மதிப்பு எனும் மாற்று நிலை பாரதியிடம் மிகவும் தெளிவாக வெளிப்பட்டது என்பதற்கில்லை. எனினும், சுதேச மித்திரன் கட்டுரைக்கு முப்பது ரூபாய் அளிக்கப்பட்டதும் (ப.287), பாரதி தம்புச் செட்டித் தெருவில் ஐந்து குடித்தனங்களுடன் குடியிருந்த பகுதிக்கு 18 ரூ. வாடகை என்பதும் (பக்.196,198), சுதேசிய கீதம் கோகலே அரங்கில் பாட நாலணா டிக்கெட் வைத்ததும் (ப.198), இருவர் காப்பி கிளப்பில் சம்பிரமாகச் சாப்பிட பதினோரணா ஆனமையும் (ப.289) பற்றிய பாரதி புதையல் குறிப்புகள் சுட்டத்தக்கன. நவக்கிரகப் பூசைக்குப் 10 பொன் ஆகும் எனல் (சமூகம், ப.199), கல்கத்தாவிலிருந்து காசி செல்ல 10 ரூபாய் அளித்தல் (சமூகம், ப.32), ஒரு பைசாவுக்குப் பத்தும் பழம் மிக மலிவாக அமைதல் (பாரதி தரிசனம், 2-ப.213) என்பனவும் எண்ணத்தக்கன.

'மாதம் முப்பது ரூபாய் சம்பளம் வந்தால் போதும், வீட்டிலே அவன் பெரிய நவாப்' (சமூகம், ப.168) என பாரதியின் எள்ளலும், பிற சம்பளம் பற்றிய குறிப்புகளும், அக்கால வாழ்க்கைத் தரத்திற்குரிய பணத்தேவை குறைவாகவே இருந்தது எனும் உணர்வைத் தருவதால், பணத்தின் மதிப்பு மிகுதியும், பொருட்களின் விலை குறைவும் உணரப்படலாம்.

## நுகர்வு

வறுமை, பஞ்சம், பட்டினி, ஏழ்மை பற்றிய குறிப்புகள் அந்நாளில் இந்தியாவில் நுகர்வு செம்மையாக அமையாமையைக் குறிக்கும். அடிப்படைத் தேவைகளும் நிறைவுறாத இந்நிலை, தொழிற் புரட்சிக்கு முன் ஐரோப்பாவிலும், தொழிலாளரிடம் அமைகின்றதை பாரதி எடுத்துமொழிகின்றார்.

> **"நாமோ பெரும்பாலும் குடியிருக்கக் குடிசைகளும்**
> **சாக்கடைகளும் தின்பதற்குப் பழைய ரொட்டியும்**
> **பழைய மீனுமாக வாழ்ந்து வருகிறோம்"**
>
> **(சமூகம், பக்.149-150)**

நுகர்வு போதாமையாக அமையும் இந்நிலைக்கு மாறாக, பிறர் பொருளை 'வரதட்சணை' என்ற பெயரால் தன்னுடைமையாக்கிக் கொள்ளும் பாங்கு, சமூகத்தில் சிலரிடம் அமைந்ததை பாரதி காட்டுகிறார். இதனை நுகர்வோடு அமைத்துக் கருதக் கூடுமா என்பது ஐயமே.

> பிராமணருக்குள் விவாஹ காலங்களிலே எதிர் ஜாமீன் கேட்கும் வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும்.... சீதனம் கொடுத்தல் பெண்களின் பெற்றோர் செய்வது சாதாரணமேயாம். ஆனால் மாப்பிள்ளைகளுக்கு விலைத் தரங்கள் போட்டு இன்ன பரீக்ஷை தேறினவனுக்கு இத்தனை ரூபாய் கிரயம் என்று முடிவு செய்து வைத்து அதன்படி நடத்தும் வழக்கமில்லை..... சாதாரணமாய் பெண்களுக்கு விலை கூறி விற்பது வழக்கமாக இருந்தது. இப்போது... மாப்பிள்ளைக்கு விலை போட்டு விற்கத் தொடங்கியிருக்கிறார்கள். (சமூகம், பக்.128-129)

இவ்வாறு 'ஐந்நூறு ரூபாய் தண்டம்' வாங்கிக்கொண்டதாகவும், பணத்திற்காகத் திருமணங்கள் நடப்பதாகவும் கூறுவதுடன், 'ஆறிலொன்று' என்பதிலும் பணம்-மணம் பற்றிய கருத்தைத் தருகின்றார். பெண்ணுக்குச் சொத்துரிமை பற்றிய எண்ணமும் உண்டு (மாதர், ப.31).

'ஆங்கிலேய ராஜாங்கத்தார் தீர்வை லாபத்தைக் கருதி மதுபானத்தைப் பரவச் செய்தனர்' (சமூகம், ப.41) எனும் செய்தி, மதுவும் நுகர்பொருளாக இருந்ததைத் தரும்.

நுகர்வில் பல்வகைக் கலைகள் அமைவதைக் கலை பற்றிய கட்டுரைகள் காட்டுகின்றன. கலைக்கு - கலைஞர்க்கு ஒரு பிரபு 100 ரூ. கொடுப்பானெனின் ஊர் தலைக்குக் கால் ரூபாயாக வசூலித்து 1000 ரூபாய் கொடுக்க முடியும் என்கிறார் (கலைகள், பக்.119-120). இசை, நாடகம் பற்றிய செய்திகள் பல உள. இலக்கிய சங்கமும் அதன் நூல் வெளியீட்டுக்கு முன்பணம் அமைதலும் (பாரதி புதையல், ப.242), பாரதி தனது நூல்களை 40 தொகுதியாக வெளியிடக் கணக்குப் பார்த்தமையும் (பாரதி நூற்பெயர்க் கோவை, ப.1) இலக்கியமும் நுகர்ச்சிக்குரியதாக அமைந்ததைத் தருகின்றன.

## பகிர்வு

பொருட்பகிர்வு மக்களிடையே சரியாக அமைந்தால் அந்நாடு பொருட் பிரச்சினை இல்லாததாக அமையக் கூடும். வேலைக்கு, உழைப்புகேற்ற ஊதியம், கூலி கொடுக்கப்படாத போது பகிர்வின் சமநிலை பாதிக்கப்படுகிறது. வெள்ளையரின் இந்திய ஆட்சியின்போது ஒரே வேலை செய்த போதும் இரு இனத்தினருக்கும் வெவ்வேறுபட்ட சம்பள நிலை அமைந்தது.

> ஐரோப்பிய, யுரேஷிய (ஆங்கிலோ இந்திய) ஸ்டேஷன் மாஸ்டர்கள் போலவே இந்திய ஸ்டேஷன் மாஸ்டர்களும் உதவி ஸ்டேஷன்

> மாஸ்டர்களும் வேலை செய்தபோதிலும், இந்திய வேலைக்காரர்களுக்கு சம்பளம் மட்டும், ஐரோப்பியர் வகையறாக்களுடைய சம்பளங்களில் நாலில் ஒருபாகம் கூட கிடையாதென்ற விஷயத்தை.....
>
> (பாரதி தரிசனம், 1-ப.211)

இத்தகு சமநிலையின்மை தொழிலாளரின் வேலைநிறுத்தத்திற்கு வழிவகுக்கின்றது. தொழிற்சங்கங்கள் உருவாகி பல்வகையான தேவைகளை முன்னிறுத்துகின்றன. 'சம்பள ஏற்றத்துக்கும் வேலை நேரத்தை குறைப்பதற்கும் வேண்டிய யத்தனங்கள் பல' செய்கின்றனர் (சமூகம், ப.142). இருப்புப் பாதை இந்திய வேலையாட்களும், பம்பாய் தபால்காரரும் தொழில் நிறுத்தத்தில் ஈடுபட்டதன் தீவிர நிலையை பாரதி தரிசனம் விரிக்கின்றது. பம்பாய் போலீசாரும் சம்பள உயர்வு கேட்டமை சுட்டப்படுகின்றது.

> போலீஸ்காரர்கள் சாமான் விலைவாசி அதிகப்பட்டிருப்பதாலும். தமக்கு ஜாஸ்தி சம்பளம் வேண்டுமென்று கேட்டார்கள். முறைப்படியே விண்ணப்பங்கள் செய்து.... அனுப்பியிருக்கும் மனுவுக்கு சரியான உத்திரவு கிடைக்கும் வரை சம்பளம் வாங்குவது கிடையாதென்று தீர்மானம் செய்துகொண்டார்கள்
>
> (பாரதி தரிசனம், 2 - ப.179)

## தேசத்தின் பொருள் நிலை

இயற்கை வளமும், விளைபொருட்களும் நாட்டின் பொருள் நிலைக்கு அடிப்படையாவதுடன், வரி, தீர்வை போன்றனவும் வருமான வழிகளாக அமைகின்றன. மக்கள் வரியால் துன்புறா திருத்தல் நல்ல நாட்டு நிலைக்கு அடையாளம் எனலாம். கொள்கைக்கும் செய்கைக்கு முள்ள தூரம் எனும் கட்டுரை இதற்கு மாறான நிலையைக் காட்டுகின்றது. குடியானவன் 'சர்க்கார் தீர்வைக்கே தானிய தவசங்களை களத்தில் விற்றுவிட வேண்டியிருக்கிறது' (தத்துவம், ப.173). பாரதி தொடர்ந்து தரும் வரிகளின் பட்டியலும் 'வீடு, வாசல், நிலம் கரை, ஆடு மாடு, சட்டி பெட்டி இவைகளை ஜப்தி செய்து ஏலங்கூறிக் கொள்ளையடித்துப் போகும் சர்க்கார் பணம் (ப.175) என்பதும் அவர்கால அரசாங்க வருமான வழியைக் காட்டும்.

'ராஜாங்க வரவு செலவு' உப்பு வரியைக் குறைத்ததையும், 'தபால் சார்ஜுகளில்' மாற்றம் செய்ததையும் தருகின்றது. 1907-இல் அரசாங்க நிதிநிலை எவ்வாறிருந்தது என்பதை, 'எல்லாச்

செலவுகளும் போக மிச்சம் 7,74,700 பவுன் (அதாவது 116, 20,500 ரூபாய்) என்று மதிப்புப் போடப்பட்டிருக்கின்றது. வரவு 75, 012800 - பவுன், செலவு பவுன் 74,238,100' என்பது விளக்கும். முன்னிரு ஆண்டுகளின் வரவும் செலவும் ஒப்பிடப்பட்டுள்ளது. 'இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் கொள்ளையடித்துச் சென்றது' என இந்தியா பத்திரிகையில் பாரதி தரும் விவரங்களும் சுட்டத்தக்கன.

> இன்றும் (1906) வருஷந்தோறும், இந்தியாவிலிருந்து பிரதிப் பிரயோஜனமில்லாமல் 3 கோடி (30,000,000) பவுன் எடுத்துக் கொண்டு போகிறார்கள்.இந்தியாவிலேயே அன்னியர்கள் (20,000,000) 2 கோடி பவுன் சம்பளமாக எடுத்துக் கொள்கிறார்கள். இவ்வாறு இந்தியாவின் இரத்தத்தை அன்னியர்கள் உறிஞ்சுவதால் இங்கே பஞ்சமும், பிளேக்கும் ஜனங்களை பதினாயிரக் கணக்காக விழுங்குகின்றன
>
> (பாரதி தரிசனம், 1, பக்.92-93)

'சென்னை மாகாண வரவு செலவு'ம் 'இந்த (1906-07-ம்) வருஷ முடிவிலே செலவு போக மிச்சம் 103,16 லக்ஷம் ரூபாய் இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1907-08-ம் வருஷம் 87,54 லஷம் ரூபாய் மிச்சத்துடன் முடிவு பெறுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது' என்பதில் தரப்படுகிறது.

மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தீர்வை, அதை அரசு பயன்படுத்த வேண்டிய முறை, மக்களுக்குச் சரியான பயன்பாடு அதனால் அமையும் அரசக்கடமை முதலியன சுட்டப்படுகின்றன.

> ஜனங்களிடம் தீர்வை எத்தனைக் கெத்தனை குறைவாக வசூல் செய்யப்படுகிறதோ, அங்ஙனம் குறைவாக வாங்கும் தீர்வையிலிருந்து பொது நன்மைக்குரிய காரியங்கள் எத்தனைக் கெத்தனை மிகுதியாக நடைபெறுகின்றனவோ, அத்தனைக்கத்தனை அந்த ராஜாங்கம் நீடித்து நிற்கும் (சமூகம், ப.59)

அத்தகைய அரசாங்கம், 'ஜனங்களுக்குள்ளே செல்வமும், உணவு, வாஸம் முதலிய ஸௌகர்யங்களும்.. மென்மேலும் விருத்தியடைவதற் குரிய உபாயங்களை இடைவிடாமல் அனுஷ்டிப்பதுடன், தீர்வைப் பணத்தைப் பலதுறைகளில் வினியோகித்தல், ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பது, தொழில் ஏற்படுத்திக் கொடுத்து உணவு தருவது' ஆகியவற்றையும் செய்யும் (சமூகம், பக்.58,59) என்பதிலும் பகிர்வு புலப்படுகின்றது. 'ஆறிலொரு கடமைக்கு மேல் ராஜாங்கத்தார் தீர்வை கேட்பதே குற்றம். பஞ்ச நாளில் அதுகூடக் கேட்பது பெருங்குற்றம்'

(சமூகம், ப.122) என்பதில் அரசாங்க வருவாயின் அளவும் நிலையும் தெரிகிறது. பொது நிதி என்பதில், இவற்றுடன் 'சுதேசிய நிதி', பைசா நிதி என்பனவற்றையும் இணைத்து நினைக்கலாம்.

## தொகையுரை

பாரதியார் பொருளாதாரம் பற்றிய மிகுதியான செய்திகளையும் சிந்தனைகளையும் வழங்கியுள்ளார். அவரது வாழ்வும், அன்றைய நாட்டு நிலையும், பத்திரிகையாளராகப் பெற்ற அறிவும் இதற்கு அடிப்படையெனலாம்.

இன்றைய பொருளாதார நிலையொடு பாரதி தரும் கருத்துகளை ஒப்பிட அன்றைய நிலை தெளிவாகக் கூடும். ரூபாயின் மதிப்பு 'பதினொரு பென்ஸ்' ஆகவும், 'ஷில்லிங் 4 பென்ஸ்' ஆகவும் இருநிலையில் அமைந்தமையை (பாரதி தரிசனம், 1, ப.93) தற்கால நிலைமையுடன் ஒப்பிடல் சான்றாகும்.

பாரதியின் எல்லாப் படைப்புகளையும் கண்டு, பொருளாதாரக் கோட்பாட்டடிப்படையில் தெளிவாக ஆய்ந்தால் இன்னும் பல உண்மைகள் தெரியவரும்.

# சமூகச் சிதைவு

## அறிமுகம்

மனிதர்கள் குழுமி வாழும் சமூகம் தனிமனிதத் தன்னலம், பொதுநல விழிப்புணர்வு இன்மை, அடிப்படைத் தேவைகள் நிறைவேறாத சூழல், புறக்கருத்து இடையீடு, அரசியல் சமயப் பொருளாதாரக் காரணங்களாலான வாழ்வியல் மாற்றம், ஒருவரோடொருவர்க்குள்ள உறவு நெருக்கம் நீர்த்துப்போதலும் நம்பிக்கைக் குலைவும், தனிமைப்படுதல், தொழில்மயமாதல் போன்ற பல்வேறு நிலைகளால் கட்டவிழ்ந்து நெகிழ்ந்து சிதைவுகளுக்கு இடம் தருகின்றது.

சமூகவியலாளர், சமூக நோயியல் (Social Pathology) எனப் பல்வேறு சமூகச் சீரழிவுகளை, சீர்கேடுகளை, சிதைவுகளைத் தொகுத்து அணுகுகின்றனர். நகர்மயமாதலின் (Urbanisation) விளைவாகவும், குடிபெயர்தல் (Migration) காரணமாகவும் மக்கள் நெருக்கமான -ஆனால் உறவு/மன நெருக்கமற்ற சூழல் வாழ்வுப் பின்புலமாகி, மனிதாபிமானவுணர்வுக் குறைவையுருவாக்கிக் குற்றவியல், ஒழுக்கக் குறைகள், மரபு மீறிய நடவடிக்கைகள், தீய பழக்கங்கள் ஆகியவற்றிற்கு இடமும் களமும் நல்குகின்றன. பொருண்மைய (Material) நோக்கும், வணிக மயமாதலும் (Commercialisation), எதையும் 'பண'க் கண்ணோட்டத்தில் அணுகச் செய்து ஒழுக்கவுணர்வுகளைவிட உல்லாச வாழ்க்கையை முன்னிறுத்திச் சுரண்டலுக்கும் சிறுமைக்கும் வழி தந்து மற்றவரைப் பற்றியும் எதிர்காலம் குறித்தும் சிந்தனையற்று பகட்டுக்கும் போலி இன்பத்துக்கும் தற்காலிக நிறைவுகளுக்கும் முன்னுரிமை நல்கும் நிலையை உருவாக்குகின்றன.

## களம்

கலை, வாழ்க்கைக்காக என்ற பாங்கில் இலக்கியமும் சமூக வாழ்வியலைக் கருப்பொருளும் குறிக்கோட்பொருளும் ஆக்கிக் கொள்கின்றது. கதையிலக்கியத்தைவிடக் கவிதையிலக்கியம் தன்னிலை கூறலிலும், முன்னிலையில் வெளிப்படுத்தலிலும் படர்க்கைச் சுட்டலிலுமாக முழுமுனைப்போடு சமூகப் பார்வையைத்

தரமுடியும். 'கவிதையிலிருந்து புதுக்கவிதையை மட்டும் தனிப்படுத்திப் பேச வேண்டிய காலம் கடந்துவிட்டது'[1] எனவும், 'புதுக்கவிதை சமகால வாழ்வின் திறனாய்வாகவும் அமைகிறது'[2] எனவும் 'சமுதாயத்தை நேரடியாக நினைத்து நெகிழும் உள்ளடக்கப் போக்குகள் இக்காலப் புதுக்கவிதைகளின் சிறப்பாகும்'[3] எனவும் அமையும் திறனாய்வுக் கருத்துகளுக்கேற்ப இக்கால (தற்கால/ அண்மைக்காலக்) கவிதைகள் (மரபு, புதுமை, இசைப்பாடல்) களமாகச் சமுதாயச் சிதைவுகள் இங்குக் கருதப்பெறுகின்றன.

## கருத்து

முருகியல் இன்ப நாட்டத்துடன் அழகையும் காதலையும் பாடும் கவிகள் உளவெனினும் சமூக அவலங்களையும் அழுக்குகளையும் கிறிக்காட்டும் பாங்கும் இயல்பாகின்றது. சமுதாய விழிப்புணர்வு தோன்றப் பாடுதலும், சமுதாய நீதிக்குக் குரல் எழுப்புதலும் உண்டு. சமூகக் கோணல்களைச் சரிசெய்யும் விழைவு வெளிப்படுகிறது. சமூகச் சாடல்களாகவும் கவிக்குரல் எழுகின்றது. அங்கதமாகவும் நகைச்சுவையுணர்வோடும் சிலேடை பொருந்தவும் சுட்டிச் செல்லலும் உண்டு.

அடக்குமுறை, அடித்தள மக்கள், அதிகாரச் சீர்கேடு, இனபேதம், ஊனம், கல்வியின்மை, கள், குடும்பச் சிதைவு, குழந்தைக் குற்றவாளிகள், குழந்தைத் தொழிலாளிகள், குற்றவியல், சூது, சூழல் மாசுறல், பரத்தமை, புகை, பெண்ணவமதிப்பு, போதை, மணச் சிக்கல், மனச் சிதைவு, வன்முறை, வேலை வாய்ப்பின்மை போன்ற பல தளங்கள் தந்த கருஞ்சித்திரங்கள் கவிஞனின் சினத்தூரிகையின் செங்கோலங்களாகின்றன.

கவிதை சமுதாயத்தைப் புடமிட வேண்டும் என்பது கவிச் சிந்தனையாகவே காணப்படுகிறது :

> **கவிதைக் குயிலே கவி**
> பாடு
> சமுதாயக் கொடுமைகளைச்
> சாடு

---

1. க.நா. சுப்பிரமண்யம், **புதுக்கவிதைகள்**, ஞானச்சேரி, சென்னை, 1989, ப.11.
2. சி.இ. மறைமலை, **திறனாய்வியல் வரிசை : சமூகவியல் நோக்கில் புதுக்கவிதை**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991, ப.62.
3. மு. தமிழ்க்குடிமகன், **பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (1967-1976)**, அறிவொளி பதிப்பகம், மதுரை, 1986, ப.37

மானுட நேயத்தையே
நாடு (கிள்ளைகளே கேளுங்கள், அரிமதி தென்னகன், ப.4)

கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்குபவரிடமும் இதையொத்த சிந்தனை உள்ளது. 'ஊதிப்பாருங்கள்' என்ற பகுதியில் பாரதி வசந்தன் இவ்வாறு எழுதுகிறார் :

கவிதை என்பது வெறும்
கண் துடைப்பு இல்லை!
அது......
மானுடத்தை உயர்த்தும்
மகத்தான தத்துவம்.....
அநீதிகளையும் முறைகேடுகளையும்
அம்பலத்திற்குக் கொண்டுவரும்
இன்னொரு கவிதை.....
உண்மையான சமூகப் பொறுப்புணர்ச்சி
ஒவ்வொரு கவிஞனுக்கும் வந்தாக வேண்டும்
(ஓட்டைப் புல்லாங்குழல், இரா.திருமுருகன், அணிந்துரை)

இக்கருத்தில் திறனாய்வாளர்க்கும் உடன்பாடே. 'சமுதாயக் கோணல்களைச் சரிசெய்யும் விழைவு' மேத்தாவிடம் அமைவதைத் து. மூர்த்தி சுட்டுவார்.[4] 'இந்தச் சமுதாய அநியாயங்களின் மீது ஏற்பட்ட கோபம் என் கவிதையின் நெற்றியில் இரத்தப் பொட்டு வைத்தது. இதுதான் நாளடைவில் என் கவிதைக்கு மூன்றாம் கண்ணாக முளைக்கத் தொடங்கியது' என்ற மேத்தாவின் 'வாக்குமூல'த்தைக் க. ராமச்சந்திரன் எடுத்து மொழிவார்.[5] 'சமூகப் பிரச்சினைகளையே பாத்திரங்களாக ஆக்கும் ஒரு புதிய நாடக உத்தியையும் தமிழுக்குப் பரிசாகத் தந்திருக்கிறேன்' என்ற நா. காமராசன் கூற்றும்[6] 'ஏதிலிகளை நடைப்பிணங்களை பிச்சைக்காரியை ஊமையைப் பாடுவதிலிருந்து தான் (நா. காமராசன்) ஒரு சமூகக் கவிஞன் என்பதை உணர்த்துகிறார்' என்ற மு. தமிழ்க்குடிமகன் கணிப்பும்[7] இக்கருத்து வழிப்படுவனவாகும்.

---

4. து. மூர்த்தி, இக்காலக் கவிதைகள் மரபும் புதுமையும், சென்னை தமிழியல் நிறுவனம், சென்னை, 1978, ப.58.

5. க. ராமச்சந்திரன், மு. மேத்தா கவிதைகளில் சமுதாயப் பார்வை, நர்மதா பதிப்பகம், சென்னை, 1987, ப.16.

6. மேற்கோள் : ப. லோகநாதன், காமராசன் கவிதைகள் புதுக்கவிதை ஆராய்ச்சி நான்காம் பகுதி, ஷெல்லி பதிப்பகம், ஊட்டி, 1987, ப.66 (மகாகாவியம், ப.134)

7. மு. தமிழ்க்குடிமகன், மு.சு.நூ. ப.15.

### சில பொருண்மைகள்

குழவிப் பருவமே சுரண்டலுக்கும் சீரழிவுக்கும் களம் நல்குகின்றது. நகர்மயமாதல், தொழில்மயமாதல் என்பன மட்டுமன்றி, அநாதை நிலை, பெற்றோர் கவனிப்புக் குறைதல், சமூக விரோதிகளின் கைப்படுதல், ஏழ்மை போன்ற இன்ன பிற காரணச் சூழல்களும் அடிப்படையாகின்றன.

பிஞ்சிலே/பழுத்தது/எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்
அன்றொரு நாள்-
திரை அரங்கின்/வெளியில்......
ஒரு பிஞ்சு/வேகவேகமாகப்/பழுத்துக் கொண்டிருந்தது
புகை/போட்டுத்தான் (எ.மு.ராஜன், நிகழ்காலம்,ப.12)

என அறியாப்பருவத்தின் ஒழுக்கச் சிதைவு தரப்படுகின்றது. ஓடி விளையாடி மகிழும் வாய்ப்பும் கல்வி பெறும் நிலையும் பெண்குழந்தை இழந்து 'மனித யந்திர'மாக மாறுவதும் உண்டு.

தலைவாரிப் பூச் சூடி நீதான்
தொழிற்சாலைக்குச் செல்வாயோ கண்ணே
பிஞ்சு விரல் பஞ்சதனைப் பிரிக்கும்
தளிர்க் கைதான் தீக்குச்சி அடுக்கும்
என்று அது எழுதுகோலைப் பிடிக்கும்
(நிர்மலா சுரேஷ் கவிதைகள், ப.102)

கருவிலிருந்து அழியாமல் தப்பிப் பிறந்துவிட்டால் கூட, பஞ்சாலையிலும் தீப்பெட்டித் தொழிற்சாலையிலுமாக அதன் வாழ்வு சிறைப்படவே செய்கின்றது. குழந்தைத் தொழிலாளரின் அவலக் குரலை அவர் குரலிலேயே வழங்குவார் செ. பெரியசாமி (**கவிதை** தெசிணி, 1993, மார்ச்சு, சுவடி 31, ஏடு 12; 'கருணைதான் வேண்டுகிறோம்' பக்.6-7). பள்ளிக்குச் செல்லாமல் குப்பைத் தொட்டியில் குனிந்து பலவற்றைப் பொறுக்குதலும், பசி தின்னும் வயிறு காரணமாக எச்சில் இலை பொறுக்கும் நிலையும் சமூகச் சித்திரங்களாம் (அரிமதி தென்னகன், **கிள்ளைகளே கேளுங்கள்**, மீனா புத்தகப் பண்ணை, விழுப்புரம், 1991, பக்.33, 58).

இயல்பான, கண்ணியமான வாழ்வு மறுக்கப்பட்டு, அடிப்படைத் தேவைகளுக்கே தன் காலில் நிற்காது கையேந்தும் நிலைக்குத் தள்ளப்படுதல் நிலையிழிதலாக அமைகின்றது. சிதைந்த சமூகம் குற்றவாளிகளுக்குப் பிறப்பிடமாகிறது. காவல்துறை அதிகாரியின் கவிதைப் பார்வை இது.

குற்றவாளிகள் என்போர்
சமூகம் பெற்ற சவலைப் பிள்ளைகள்;
மானுட ஒழுக்கத்தின் அச்சுப் பிழைகள்;
வறுமை விளைக்கும் வாரிசுகள்;
பேராசைப் பேய் பிடித்தோர்கள்;
உழையாமல் பிழைக்கும் ஒட்டுண்ணிகள்;
சோம்பல் சுமக்கும் கிருமிகள்
(திலகவதி, அலைபுரளும் கரையோரம், ப.97)

தீய பழக்க வழக்கங்களுக்கு, நெறிபிறழ்ந்த நடத்தைக்கு மனிதர் ஆளாகுதல், தனிமனிதக் குறை என மரபுப் பார்வையில் (heridity) அணுகப்படாமல், சமூக-வாழ்வின் சூழல் விளைவாகப் (Environment) புலப்படுத்தப்பெறுகின்றது. பரத்தமை,

சட்டம் சாட்டையடி தந்தாலும்
சமூகம் வளர்க்கிறது எங்களை.....
குற்றம் செய்வது நீங்கள்
தண்டனை பெறுவது நாங்கள்.....
(நீலமணி, தன்மை முன்னிலை படர்க்கை, பக்.16-17)

எனத் தரப்படுவதில் இவ்வெண்ணம் முகிழ்க்கின்றது. மேலும்,

நாங்கள்/குற்றவாளிகளாம்/அவர்கள்/சொல்லுகிறார்கள்...
நாங்கள்/பெண்ணினத்தின்/வெண்மணிகள்....
உங்கள்/சமுதாயத்தின் கைகள்
எங்கள்/கண்ணிமைகளை
வெட்டிவிட் டல்லவா/கனவு காணச் சொல்கிறது....
எங்களை/அழிக்கவோ/அல்லது/அங்கீகரிக்கவோ
இயலாமல்/புலம்பும்/உங்கள்
ஆண்மை அல்லவா/விசாரணைக் குரியது
(எழிலரசு, இன்னொரு விடுதலை, பக்.20,23,24)

என மீட்சியை எதிர்நோக்குகிறது.

## வழிமுறை

இவை போன்ற எண்ணிறந்த, புரையோடிச் சீழ்பிடித்த சமுதாயக் கட்டிகளைக் கிழித்துச் சுத்தம் செய்து மருந்திட்டுத் தைத்துச் சீராக்கும் கருவிகளும் கைகளும் எவை? வழிமுறை என்ன? என்பதும் கவிச் சிந்தனையில் துளிர்க்கும்.

பத்தியின் பேராலோ பகுத்தறிவாலோ நடந்தாலும் கற்றவனோ மற்றவனோ செய்தாலும் குற்றம் குற்றமே - சட்டத்தால் அது திருத்தம் பெற வேண்டும்; கலப்படம் களைக்கப்படல் தேவை; தண்டனையே தீர்வு.

> தாயகப் பேரைக் கெடுத்திடின் - மீளாத்
> தண்டனை தந்தால் சரிப்படும்
> (முடியரசன், பாடுங்குயில், பக்.44,63)

விலையேற்றம், பதுக்கல், அநியாய வட்டி, லஞ்சம், கட்சி மாறும் பச்சோந்தி நிலை, பொய்க்கணக்கு, வரி ஏய்ப்பு-ஆகியன செய்பவரை,

> சிறையில் தள்ளணும்-கொடுஞ்/சிறையில் தள்ளணும்-நாட்டை
> முறையில்லாமல் சீர்குலைக்கும்/மூர்க்கனும் எவனோ
> அவனை... (சிறை)
> (கவிஞர் வெ.நா. திருமூர்த்தி பாடல்கள், ப.150)

எனக் களையெடுத்தல் வேண்டப்படுகிறது. குப்பைகளை எரித்தொழிக்கும் நெருப்பாக, சமூகக் கழிவுகளை - இழிவுகளைத் தீயிட்டு 'மாய்த்திட வேண்டும்' என்பர் (கெங்கை பாலதா).

> தியாகப் பிறப்பெடுக்க வேண்டும் - நான்
> தீச்செயலை மாய்த்திடவே வேண்டும்......
> போதை மருந்தினை உண்டு திரிந்திடும்
> பொல்லா மாணவ மணிகள் இனத்தரை
> நீதி தேவதை நேர்மை விழிகளில்
> நெருப்பைக் கொட்டிடும் காவல் துறையினை....
> (கவிதை, தெசிணி, 1995 அக்.சுவடி 34, ஏடு 7, ப.12)

மனக்கசப்பின் மிகுதியே இவ் வன்முறைத் தீர்வுக்கு நேரான கவிவாக்கின் காரணமாகலாம். நேர்மாறாக,

> வாழ்க்கை மலைமுகட்டைப் பாருங்கள் - இங்கு
> வந்து நீங்கள் ஒன்று சேருங்கள்
> (பொற்கோவின் கவிதைகள், ப.121)

எனக் குறிக்கோள் காட்டி அழைப்புவிடுத்தலும் காணப்படுகிறது. எழுச்சி தந்து விழிப்புணர்வூட்டும் நிலையே வேண்டத்தக்கதாய் அமைகின்றது.

# நூற்றொகை

Dictionary of Symbols, J.E. Cirlot (Translated from the Spanish by Jack Sage), Philosophical Library, New York, 1962.

Dictionary of Symbols and Imagery, Ad de Vries, North Holland Publishing Company, Amsterdam, 1974.

Elements of Psychology, A brief course, Krech, Crutch field & Livson, Borzoi Books, NewYork, 1970.

Encyclopedia Americana, American Corporation, NewYork, 1970.

Encyclopaedia of Social Sciences, (Ed) David L. Sills, Macmillan & Free Press, New York, 1968.

Fundamentals of Sociology, Pascual Gisbert, S.J., Orient Longman, New Delhi, 1973.

Index des mots de la litterature tamoule ancienne, Institute Francais D Indologie, Pondicherry, 1967.

Master Poems of the English Language, (Ed) Oscar Williams, Trident Press, New York, 1966.

Social Psychology, Roger Brown, Collier - Macmillan, London, 1973.

Society : An Introductory Analysis, R.M. Mac Iver and Charles H.Page, Macmillan, NewDelhi, 1977.

Sociology, T.B. Bottomore, Blackie & Son, Bombay, 1975.

Theories of Personality, Richard M. Ryckman, D. Van Nostrand Company, New York, 1978.

அலை புரளும் கரையோரம், திலகவதி, திருமகள் நிலையம், சென்னை. 1987.

இக்காலக் கவிதைகள் - மரபும் புதுமையும், து. மூர்த்தி, சென்னை தமிழியல் நிறுவனம், சென்னை, 1978.

இக்காலக் கவிதையில் சமூகம், (பதி), அன்னி தாமசு, அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1996.

இலக்கியக் கனவுகள், ச.வே. சுப்பிரமணியன், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1972.

இளங்கோவின் இலக்கிய உத்திகள், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.

இளங்கோவும் கம்பனும், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, 1986.

இன்னொரு விடுதலை, எழிலரசு, மதியரசன் பதிப்பகம், சென்னை, 1984.

ஒட்டைப் புல்லாங்குழல், இரா. திருமுருகன், பாவலர் பண்ணை, புதுச்சேரி, 1990.

கம்பன் கற்பனை, ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.

கவிஞர் வெ.நா. திருமூர்த்தி பாடல்கள், (தொகு) செங்கை வேலன், என்.சி.பி.எச்., சென்னை, 1986.

காமராசன் கவிதைகள், புதுக்கவிதை ஆராய்ச்சி நான்காம் பகுதி, ப. லோகநாதன், ஷெல்லி பதிப்பகம், ஊட்டி, 1987.

கிள்ளைகளே கேளுங்கள், அரிமதி தென்னகன், மீனா புத்தகப் பண்ணை, விழுப்புரம், 1991.

சங்கச் சமூகம், (பதி.) ந. கடிகாசலம், பு. பாலாஜி, அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1995.

சமூகச் சிக்கலும் இலக்கியத் தீர்வும், பு. பாலாஜி, சென்னைப் பல்கலைக் கழகப் பிஎச்.டி. பட்டத்திற்காக அளிக்கப்பட்டுள்ள ஆய்வேடு, 1998.

சில சிந்தனைகள், பாரதியார், (தொகு; பதி) சீனி விசுவநாதன், ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம், சென்னை, 1979.

தமிழ் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு, (பதி) இரா. நாகசாமி, வரலாற்றுப் பேரவை, சென்னை, 1979.

தமிழ்ப் பத்திரிகைகள், க. குளத்தூரான், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1975.

தமிழ் லெக்சிகன், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, *1984*.

தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், க. காந்தி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1980*.

தமிழருக்கு, பாரதியார், (பதி) ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம், சென்னை, *1978*.

தமிழிலக்கியத்தில் மூப்பும் இறப்பும், இரா. நிர்மலா, சென்னைப் பல்கலைக் கழகம், (வெளியிடப்படாத பிஎச்.டி. ஆய்வேடு) *1989*.

தன்மை முன்னிலை படர்க்கை, நீலமணி, அன்னம், சிவகங்கை, *1991*.

திறனாய்வியல் வரிசை : சமூகவியல் நோக்கில் புதுக்கவிதை, சி.இ. மறைமலை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, *1991*.

தொல்காப்பியம், க. வெள்ளை வாரணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், *1970*.

தொல்காப்பியம் உரைவளம், சொல்லதிகாரம், பெயரியல், (பதி) ஆ. சிவலிங்கனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1984*.

நிகழ்காலம், எ.மு. ராஜன், முத்துப் பதிப்பகம், விழுப்புரம், *1984*.

நிர்மலா சுரேஷ் கவிதைகள், நறுமலர் பதிப்பகம், சென்னை, *1990*.

பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (*1967-1976*), மு. தமிழ்க்குடிமகன், அறிவொளி பதிப்பகம், மதுரை, *1986*.

பாடுங்குயில், முடியரசன், அகரம், சிவகங்கை, *1983*.

பாரதி தரிசனம், (தொகு) இளசை மணியன், என்.சி.பி.எச்., சென்னை, தொகுதி *1* - *1975*; தொகுதி *2* - *1977*.

பாரதி நூல்கள் (கட்டுரைகள்), பாரதி பிரசுராலயம், சென்னை, *1943* (*1*. தத்துவம். *2*. மாதர். *3*. கலைகள். *4*. சமூகம்).

பாரதி புதையல், மூன்றாம் தொகுதி, (பதி) ரா.அ. பத்மநாபன், அமுத நிலையம் லிமிடெட், சென்னை, *1975*.

புதுக்கவிதைகள், க.நா. சுப்பிரமண்யம், ஞானச்சேரி, சென்னை, *1989*.

பெண்ணின் பெருமை, திரு.வி.க. புனித நிலையம், சென்னை, *1973*.

பொருளியல், எஸ். சபாநாயகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.

பொற்கோவின் கவிதைகள், தமிழ் நூலகம், சென்னை, 1987.

மகாகவி பாரதி நூற்பெயர்க்கோவை, (தொகு) சீனி. விசுவநாதன், வானவில் பிரசுரம், சென்னை 1981.

மகாகவி பாரதியின் சக்கரவர்த்தினி கட்டுரைகள் (பதி) சீனி. விசுவநாதன், டி.வி.எஸ். மணி, வானவில் பிரசுரம், சென்னை, 1979.

மு. மேத்தா கவிதைகளில் சமுதாயப் பார்வை, க. ராமச்சந்திரன், நர்மதா பதிப்பகம், சென்னை, 1987.

வளர் தமிழில் அறிவியல், (பதி) ச. அகத்தியலிங்கம், இராம. சுந்தரம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1989.

# சொல்லகராதி

**எண் - பக்க எண்**


அடிப்படைத் தேவை 90
அடிமை 17, 18, 24, 28, 29, 45, 112
அடுக்கு 2, 22
அடுக்குநிலை 33, 36
அதிகார அடுக்கு 24, 25, 29, 33
அதிகாரம் 24
அந்தஸ்து 14
அநாதை 66
அரசச் செல்வம் 92, 110
அரசப் பணி 13
அரச வாழ்வு 32
அரசன் 95
அரசாங்கம் 121
அரசாட்சி 24, 32
அரசியல் 35, 44, 66, 132
அரசு 1, 39, 40, 94, 95, 104
அரசுடைமை 41
அரசுத்தொழில் 16
ஆட்சி 93, 112
ஆடம்பரம் 97, 122
ஆதிக்கம் 112
ஆளுமை 54
ஆன்ம இறப்பு 86
இல்வாழ்வு 33, 101
இலக்கியம் 4, 6, 36, 37, 654, 69, 133
இலக்கிய மரபு 82
இழிந்தோர் 24
இளையர் 17, 18, 26-34
இளையோர் 25
இறப்பு அவா 78
இனம் 2, 44
உடைமை 96
உடோபியா 5
உண்ணா நோன்பு 81
உதவியாளர் 26, 32
உயர்ந்தோர் 15, 16, 23, 28
உயிர்த்தெழுதல் 85
உயிர்ப்பொருள் 93
உரிமை 10, 11
உலகயுத்தம் 112
உலகளாவிய நிலை 44
உலோகம் 93
உழைக்கும் மக்கள் 33
உழைப்பாளி 102
உழைப்பு 122
உழைப்போர் 26
உளவியல் 3, 58, 70, 88
உற்பத்தி 122, 126
ஊதிய நிலை 125
ஊதியம் 125, 126
ஊழியர் 26, 28, 33
ஊனம் 3, 44, 46, 48, 59, 64, 134
ஊனமும் முதுமையும் 64
ஊனமுற்றோர் 66
ஊனமுறுதல் 80
எபிரேய மக்கள் 45
எழுத்தறிவு 6
ஏவலர் 28
ஏழ்மை 108, 117, 119, 136
ஏற்றத்தாழ்வு 25, 118
ஏற்றுமதி 121
ஒப்புரவு 67
ஓய்வு நிலை 65
ஓய்வூதியம் 125
கடப்பு 2
கம்பெனி 115
கரணம் 16
கல்வி 1, 2, 5, 6, 14, 16, 23, 33, 39, 59, 68, 69, 103, 125
கல்வித்துறை 56
கல்வியாளர் 33
கலைஞர் 106, 107, 129
கனவு 80
கனாநூல் 85
கார்ல் மார்க்ஸ் 2, 6
காலாட்படை 31
காவல் 31
காவல் துறை 138
கிராமம் 2, 3
கிறித்தவ சமயம் 80
கீழ்ப்படிநிலை 17
குடிபெயர்தல் 133
குடும்ப அமைப்பு 70
குடும்பம் 1, 2
குலத்தொழில் 13
குலம் 9
குவிப்பு 111
குழந்தை 102
குழந்தைத் தொழிலாளர் 136
குற்றம் 3, 4, 6, 37, 38
குற்றவாளி 136, 137

குறி, குறிப்பு 78
குறியீடு 47, 78
குறுந்தொழில் 17, 25, 27, 34
குறைபாடு 64
கூட்டுத் தொழில் 124
கைத்தொழில் 124, 126
கொடி 56
கோட்பாடு 2, 8, 56
சட்டதிட்டம் 2
சடங்கு 43-47, 59, 79
சம்பத்து 113, 114
சம்பளம் 3, 128, 129
சமத்துவம் 37
சமய எதிர்ப்பு 52
சமயச் சார்பு 43
சமயச் சொற்போர் 55
சமய - தத்துவம் 58
சமயம் 1, 2, 49
சமய மறுப்பு 51
சமய வாத நிலை 56
சமய வாதம் 50
சமய வெறுப்பு 52
சமய வென்றி 54
சமுதாய உறுப்பினர் 1
சமுதாயக் கேடு 6
சமுதாயச் சிதைவு 6
சமுதாய நிலை 36
சமுதாய நீதி 134
சமுதாயம் 1, 26
சமூக அடுக்கு 24
சமூக அமைப்பு 1
சமூகக் குழு 20
சமூகச் சிதைவு 3, 133-138
சமூக நிலை 36
சமூக நோய் 133
சமூகப் பார்வை 133
சமூக மதிப்பு 59
சமூக மானுடவியல் 44
சாக்குறி 82
சாதி 2, 3, 10
சாதிக் கட்டு 112
சுதேசியம் 117
சூழ்நிலை 1
சூழல் 137
செல்வநிலை 93, 106
செல்வம் 6, 89-106
செல்வாதாரம் 96, 124
செழுங்குடி 98
சொத்துரிமை 129
சோசலிசம் 121
தகுதி 2, 5, 14, 23, 24, 35-38, 40, 125
தகுதியுணர்தல் 36
தட்டுப்பாடு 121
தண்டனை 138
தமிழகம் 90
தனிமனிதன் 95, 97, 102
தனியுடைமை 97
தாயம் 93
திட்டம் 121, 125
திருமணம் 1, 66
தீமிதித்தல் 80
தீர்வை 115, 129, 131
துய்ப்பு 106
தேவை 97, 122
தொழில் 3, 5, 27, 30, 35, 59, 102, 114, 118, 120, 122
தொழில் நிறுத்தம் 114
தொழில் நுட்பப் பணி 33
தொழில்(ற்) புரட்சி 3, 123, 128
தொழிலாளர் 114
தொழிலாளி 123
தொழிற்சங்கம் 130
நகர்மயமாதல் 133, 136
நகர நாகரிகம் 98
நகரம் 2
நம்பிக்கை 43, 80, 81
நால்வர் 8, 11, 15, 20, 21
நிர்வாகம் 3
நிறுவனம் 4
நுகர்ச்சி 89, 106
நுகர்பொருள் 126
நுகர்வு 128
நுகர்வோர் 122
நோய் 81
நோயும் ஊனமும் 64
பகிர்வு 129, 131
பகுப்பு 7, 14, 33
பங்கு 2, 27
பங்குத்தொகை 125
பசிப்பிணி 108
படிநிலை 2, 4, 28
படிமங்கள் 87
பண்பாடு 1, 4, 81, 85
பணிஇன்மை 65
பணியாளர் 33, 34
பத்திரிகை 112, 113
பலி 47
பழக்கவழக்கம் 43, 80
பாகுபாடு 4, 5, 9, 20, 26, 37

பாட்டியல் 62
பாடுபொருள் 17
பார்ப்பன வாகை 54
பார்ப்பான் 68
பாரதி 63, 112-132
பாரதிதாசன் 67
பிரார்த்தனை 47
பிறப்பு 5, 10, 12, 23, 24, 35
பெண்ணின் உரிமை 50
பெண்ணின் பெருமை 54
பெண்பாத்திரம் 55
பெயர்ப்பாகுபாடு 10
பொதுமக்கள் 106
பொருட்செயல் 105
பொருட்பிணி 98
பொருள் நிலை 2
பொருள் நூல் 113
பொருளாதாரம் 1, 2, 5, 6, 14, 16, 23, 24, 44, 89, 90, 93, 96, 102, 108, 112
பொருளியல் 114, 115
பொருளீட்டல் 99
பொருளுடைமை 118
போட்டிக்கொடி 56
பௌத்தம் 88
மக்கட்பகுப்பு 4
மக்கட்பெயர் 21
மக்கட்பெருக்கம் 3, 122
மக்கள் 19
மகளிர் மாண்பு 54
மணவுறவு 1
மதம் 88
மதிப்பு 66, 67, 128
மரணக்குறி 79
மரபு 1, 43, 137
மருத்துவம் 62, 64
மனநோய் 3
மானுடவியல் 88
மிடிமை 107
முகனை 96
முதலீடு 120
முரண் 100
மூட்டுச் சொற்கள் 61, 70-77
மேட்டுக்குடி 23
வகுப்பு 2, 4, 10, 22
வடக்கிருத்தல் 81
வணிகம் 126
வர்க்கப் போராட்டம் 2
வரதட்சணை 114, 128
வரவு செலவு 115, 130, 131
வரி 130
வருணம் 9
வருவாய் 2
வறட்சி, வறம் 107
வறுமை 89, 106-111, 112
வாய்பாடு 30
வாழ்வியல் 70
விதனை 108
வியாபாரம் 114, 120, 126, 127
வியாபாரி 126
விலைமதிப்பு 97
விலைவாசி 130
விவிலியம் 45, 47, 80
விழா 106
விழிப்புணர்வு 134
விழுப்பொருள் 99
விளைபொருள் 93
வேலைக்காரர் 26
வேலை நிறுத்தம் 130
வேலையின்மை 3
வைப்பு நிதி 125

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| சங்க இலக்கிய ஆய்வுகள் | 30.00 |
| தொல்காப்பிய ஆய்வுகள் | 20.00 |
| Indian Epistemology | 125.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| உ.வே.சா. நூல்களில் சொல்லும் சுவையயும் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1970 தொகுதி-3 | 50.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1970 தொகுதி-2 | 70.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1970 தொகுதி-1 | 75.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1969 தொகுதி-2 | 65.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1969 தொகுதி-1 | 70.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2 | 64.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1 | 56.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| லவகுச நாடகம் | 30.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளகக அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2 | 65.00 |
| நானும் என் கவிதையும் | 40.00 |
| On Translation | 95.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| Literary Criticism in Tamil and Sanskrit | 45.00 |
| செந்தமிழ் அகராதி | 150.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 30.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| பிரதிமா ஸ்வப்ன வாசவதத்தம் | 55.00 |
| அறநூல் | 38.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| பொருள் புதிது | 35.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |


Pub.No. 374 **தமிழர் சமூகவியல்** Rs. 35.00